A/L 87
நடைபெறுகிறது
Physical Chemistry
ஆசிரியர்:
திரு. தில்லைநாதன்
New Master
INSTITUTE
B. M.C. Lane,
JAFFNA.

சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ 2/-

A/L 87
Physics
Current Electricity
ஆரம்பம்: 01-02-1987
ஆசிரியர்:
திரு. வர்ணம்
New Master
Institute
B.M C. Lane, JAFFNA.

மலர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மாசி மீ 2 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆதி பிறை 15 (14-02-1987) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 4

கருத்துக் கலசம்

நாடகமும் நாடுக் கூத்தும்

நாடகம் தமிழர் கலைகளில் முக்கிய இடம் வகிப்பது முத்தமிழ்களில் ஒன்றாக நாடகத் தமிழும் பல நூற்றாண்டு காலமாகப் போற்றிப் பேணிக் காப்பாற்றப்பட்டது.

தமிழர் கலைகளில் இசை, நாடகம், நாட்டுக் கூத்து ஆகிய மூன்றும் சிறப்புற வளர்க்கப்பட்டவை.

ஈழத்தைப் பொறுத்தவரையில் தமிழர் கலைகளை வளர்க்கும் வாய்ப்பு குறைந்து போயிற்று. அதற்குக் காரணங்கள் இரண்டு. தமிழர் கலை வளர அரசாங்க ஆதரவு இல்லாமை ஒன்று. இடைப்பட்ட காலத்தில் கலைகளை வளர்க்கும் ஆர்வம் மக்களிடையே குன்றியிருந்தது இரண்டாவது.

கலைகளைப் பேண வேண்டும், வளர்க்க வேண்டும் என்றால் கலைஞர்களை மதிக்க வேண்டும், வளர்க்க வேண்டும் ஆனால் அந்தப் போக்கு ஈழத் தமிழர்கள் மத்தியில் குறைவாகவே இருந்தது.

ஆடல், பாடல், நாடகக் கலைஞர்களைக் கூத்தாடிகள் என்றும், சின்ன மேளங்கள் என்றும் இழிவாக்கக்கூடிய இருண்ட காலம் ஈழத்தில் இருந்ததை எவரும் மறுக்க இயலாது.

அதன் காரணமாகத்தான் கமார் அரை நூற்றாண்டு காலத்திற்கு முன்னர் மக்கள் அபிமானக் கலையாகமிளிர்ந்த, கொடிகட்டிப் பறந்த, நாட்டுக் கூத்து இப்போது மறைந்து போகும் நிலையில் உள்ளது.

நாட்டுக் கூத்துத் தான் ஆடல், பாடல், நடிப்புக் கலைகளின் ஆதாரம் எனவும் கூறலாம். அதில் பண்ணும், பரதமும், பாவமும் (நடிப்பும்) ஒருசேர இருக்கின்றன.

நாட்டுக்கூத்து நாட்டார் கலைகளில் ஒன்று. அதிலிருந்து மருவியதே நாடகம். தமிழர் நாடக மரபு மேனாட்டு நாடக மரபிலிருந்து வேறுபட்டது. தமிழ் நாடக மரபும் ஈழத்தில் பேணிக் காக்கப்படவில்லை.

மக்கள் அதிலும் தவறிழைத்து விட்டார்கள் ஆர்வம் இல்லாதவர்களாக, ஆதரவு தராதவர்களாக இருந்து விட்டார்கள்.

தமிழர்களின் கலைகளை வளர்க்கவேண்டும். புத்துயிர் கொடுக்கவேண்டும் என்ற புதிய முனைப்பு இப்போது எமது மத்தியில் உருவாகி வருகிறது. அது மகிழ்ச்சிக்கு உரியது.

அதற்குத்துணைசெய்யும்விதத்தில், சென்றவருடம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட யாழ் மாவட்ட கலாசாரப் பேரவை பல துறைப்பட்ட, பல முனைப்பட்ட புதிய முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

அதன் ஓர் அம்சமாக காத்தவராயன் நாடகம் வெளியீடும், (8 ஆம் பக்கம் பார்க்க)

பிரதமர் ராஜீவிடம்

மத்தியஸ்தத்தை தொடர கோருகிறார் ஜே. ஆர்!

ராணுவ நடவடிக்கைகள் குறித்து பதிலில் விளக்கம்

கொழும்பு, பெப். 14

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் மத்தியஸ்த நடவடிக்கையை இந்திய அரசு தொடரவேண்டும். அதில் ஈடுபாடு காட்ட வேண்டும்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய பதிலில் கூறியிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற் மூலமாக பிரதமர் காந்திக்கு ஜனாதிபதியின் பதில் அனுப்பப்பட்டது.

பேச்சுக்களுக்கு தீவிரவாதிகளை இணங்கச் செய்ய இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் திரு. ஜெயவர்த்தனா தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

வட குடி மீது பொரு ளாதார முற்றுகை ஏன் விதிக்கப்பட்டது? தற் போது இராணுவ நடவடிக்கைகளை எடுக்கப்படுகின்றன? — இவற்றுக்கான காரணங்களையும் பிரதமர் காந்திக்கு அனுப்பிய பதிலில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா வெளியிட்டிருப்பதாக தெரிகிறது. (8ஆம் பக்கம் பார்க்க)

புதிய யோசனைகளுக்கு இந்தியா காத்திருக்கிறது

விசாகபட்டணத்தில் ராஜீவ்

விசாகபட்டணம், பெப். 14

இலங்கை அரசாங்கத்திடம் இருந்து புதிய யோசனைகளை எதிர்பார்த்து மத்திய அரசு காத்து இருக்கிறது: இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்றுக் காலை விசாகபட்டணத்தில் செய்தியாளர்கள் மத்தியில் மேற்கண்டவாறு கூறினார்.

ஆந்திர மாநில வெள்ள நிலைமையைப் பார்வையிடச் சென்றிருந்த பிரதமர் காந்தி, மிஸோரம் புறப்படுமுன்னர் செய்தியாளர் மத்தியில் பேசினார்.

அப்போதே இலங்கை இனப்பிரச்சினை பற்றியும் சொன்னார்.

புதிய யோசனைகளை இலங்கை அரசிடம் இருந்து எதிர்பார்த்து உள்ளோம்.

புதிய யோசனைகள் கிடைத்தவுடன் அவற்றைத் தமிழ்ப்போராளிக் குழுக்களின் பரிசீலனைக்கு ஒப்படைப்போம் என்றும் பிரதமர் தெரிவித்தார். (இ-எ)

டிராக்டரில் யாழ் வந்தவர் விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், பெப். 14

ஊரடங்கு வேளையில் விகவமடு காட்டுப்பாதை வழியாக யாழ்ப்பாணம் வந்த ஒருவர் டிராக்டரில் இருந்து தவறி விழுந்து மரணமானார்.

பத்திநாதன் ஞானப் பிரகாசம் என்பவரே மரணமானவர் ஆவார்.

வவுனியா நகர சபையில் எழுதுவினைஞராகக் கடமை புரிந்த இவர் தமது சகோதரனின் திருமணத்துக்காக அவசரமாக வந்தபோதே இத்துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளானார்.

இந்த விபத்துச் சம்பவம் விகவமடுப்பகுதியில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (இ-10)

போராளி மரணம்

யாழ்ப்பாணம், பெப் 14

கிளிநொச்சியில் தொடர்ந்து நேற்றும் புலிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையில் நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரமரணம் அடைந்தார்

செல்வம் என்பவரே வீரமரணமடைந்தவராவார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். (இ-10)

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை இந்தியா திருப்பிக் கொடுக்குமா?

கொழும்பு பெப். 14

கடந்த நவம்பரில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை தமிழ்ப் போராளிக்குழுக்களிடம் இந்திய அரசு திருப்பி ஒப்படைக்கப்போகிறது.

பிரதமர் ராஜீவ்காந்தி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பிய கடுமையான கடிதத்தில் பாவிக்கப்பட்ட சில வார்த்தைகள் முன்கண்ட முடிவை சூசகமாக வெளியிட்டிருக்கின்றன என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன.

இலங்கை அரசு இராணுவ நடவடிக்கையை தொடருமானால், நிச்சயம் நிலைமை மோசமடையும் என்று பிரதமர் காந்தி தனது கடிதத்தில் கூறியிருக்கின்றார்.

'நிலைமை மோசம் அடையலாம்' என்று சொல்லாமல் 'நிச்சயம் நிலைமை மோசமடையும்' என்று பிரதமர் காந்தி கடிதத்தில் பாவித்திருந்தது. கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் தமிழ்ப் போராளிக்குழுக்களிடம் திருப்பி (8ஆம் பக்கம் பார்க்க)

ஆஸ்பத்திரிகளில் சடலங்கள் அழுகுகின்றன

அடையாளம் காண செல்ல முடியாத நிலைமை

யாழ்ப்பாணம், பெப் 14

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் நடைபெற்ற தாக்குதல்களின் காரணமாக கொல்லப்பட்ட பல பொதுமக்களது சடலங்கள் அழுகிய நிலையில் கிளிநொச்சி, வவுனியா ஆஸ்பத்திரிகளில் கிடப்பதாகத் தெரியவருகிறது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் பத்துச் சடலங்களும், வவுனியா ஆஸ்பத்திரியில் இரண்டு சடலங்களும் கிடக்கின்றன.

இதுவரை இச் சடலங்களை எவரும் அடையாளம் காட்டவில்லை.

இப் பகுதிகளில் கொல்லப்பட்ட ஏனையோரது சடலங்களை சிப்பாய்கள் தீயிட்டுக் கொளுத்தியதாகச் சொல்லப்படுகிறது.

கிளிநொச்சி வைத்தியசாலையிலும் தற்போது இராணுவ நடமாட்டம் அதிகரித்துள்ளதால் சடலங்களை உரிமை கோர எவரும் முன்வரவில்லை.

வவுனியா ஆஸ்பத்திரியில் உள்ள சடலங்களை அடையாளம் காண்பதற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து எவரும் வவுனியா செல்ல முடியாத நிலைமை இருந்து வருகிறது. (இ-10)

இராணுவம் தாக்குதல்

யாழ்ப்பாணம் பெப் 14

மன்னார் மாவட்டத்தில் நேற்று காலை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிப்பாய்கள் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன் காரணமாக சிலர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது

தொடர்ந்தும் குண்டு வீச்சு விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் இப்பகுதியில் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன.

இத் தாக்குதல்களால் இறந்தோரின் சரியான விவரங்கள் எதுவும் அறிய முடியவில்லை. (இ-10)

யாழ் வந்து சேரமுடியாத நிலையில்பயணிகள்

யாழ்ப்பாணம், பெப். 14

ஊரடங்கு அமுலுக்கு முன்னர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டபஸ் பயணிகள் பலர் விகவமடு ஆச்சிரமத்திலும், (8ஆம் பக்கம் பார்க்க)

குறைந்த வாகனங்கள் நேற்று சேவையில் ஈடுபட்டன

எரிபொருளுக்கு பலத்த தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ்ப்பாணத்தில் நேற்று போக்குவரத்து சேவைகள் பெரிதும்மந்த நிலையில் காணப்பட்டன.

வட பிராந்திய போக்குவரத்து சபை பஸ்கள் எதுவும் நேற்று சேவையில் ஈடுபடவில்லை

தனியார் மினி பஸ்களும் மிகமிகக் குறைந்த அளவிலேயே நேற்று சேவையில் ஈடுபட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமுலபடுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம்— கோதிவு - சங்குப்பிட்டி ஊடாக நடைபெற்று வந்த வாகனப் போக்குவரத்து நிறுத்தம்— காரணமாக எரிபொருள் வருகை நிறுவிட்டது

தொடர்ந்து இந்நிலை நீடிக்குமானால் சகல போக்குவரத்துக்களும் சில தினங்களில் நிறுத்தப்படலாம் என நம்பப்படுகிறது. (இ-10)

கபநேரம்

14-02-1987
சனிக்கிழமை

கபநேரம்:
8 33 முதல் 8.03 வரை
ராகுகாலம்:
9 33 முதல் 11.03 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பக்தவத்சலம் காலமானார்

சென்னை, பெப் 13

தமிழ்நாட்டின் முன்னாள் முதல் அமைச்சர் எம். பக்தவத்சலம் நேற்று அதிகாலை காலமானார். அவருக்கு வயது 88.

காங்கிரஸ் கட்சியின் கடைசி முதல் அமைச்சராக தமிழ்நாட்டில் பதவி வகித்தவர் திரு. பக்தவத்சலம்.

நேற்று மாலை அவரின் இறுதிக்கிரியைகள் ராஜாஜி மண்டபத்தில் நடந்தன. (இ-எ)

அலுப்பாந்திக் கடலில் துப்பாக்கிச் சூடு

மீனவர் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், பெப். 14

குருநகர் அலுப்பாந்திக் கடல் குதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள்மீது சிப்பாய்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்தார்.

நேற்றுப் பகல் பதினொரு மணி அளவில் இச் சம்பவம் நடந்தது

மூன்று மீனவர்கள் குருநகர் – அலுப்பாந்திக் கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்காகச் சென்றனர்.

கோட்டை வதிக்கட்டடத்தின் மேல் அமர்ந்திருந்த சிப்பாய்கள் இவர்கள்மீது துப்பாக்கிப்பிரயோகம் நடத்தினர்.

இதன்காரணமாக அந்தோனிப்பிள்ளை பெர்னாண்டோ (57 வயது) என்பவர் கலியானார்.

துப்பாக்கிப் பிரயோகத்தைத்தடுத்து கரையை நோக்கி ஓடியவர்களில் வேலன் யாக்கோ (55 வயது) என்பவர் காயமடைந்தார்

மற்றவர் காயமெதுவுமின்றித் தப்பித்துக் கொண்டார்.

மரணமானவரின் சடலம் பின்னர் இராணுவ அதிகாரிகளின் உத்தரவை அடுத்து பொதுமக்களால் மீட்டெடுக்கப்பட்டது. (இ-10)

ஊரடங்கு இல்லை

கொழும்பு, பெப். 14

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இப்போது ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லை.

முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 6 மணியுடன் காலவதியானது கிளிநொச்சி மாவட்டத்தில் ஊரடங்கு நேற்று மாலை 6 மணியுடன் காலாவதியானது.

ஊரடங்குச் சட்டம் மீள விதிக்கப்படவில்லை என்று அரசாங்கம் அறிவித்தது. (அ)

● நேர்முகப் பரீட்சைக்கு செல்லமுடியாது ஏமாற்றம்

யாழ்ப்பாணம் பெப்.14

புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் சோவியத் ரஷ்யாவில் படிப்பதற்கு பட்டதாரி மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக இன்று கொழும்பில் நடக்கும் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ள முடியாத நிலையாழ் குடா நாட்டில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

42 மணித்தியால ஊரடங்குச் சட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் அமுல் நடத்தப்பட்ட தனால் போக்குவரத்துச் (8 ஆம் பக்கம் பார்க்க)

குடாநாட்டின் சகல இராணுவ முகாம்களும்

எமது கட்டுப்பாட்டிலேயே

ரூபவாஹினி செய்தி குறித்து புலிகள்

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ் குடாநாட்டில் உள்ள சகல இராணுவ முகாம்களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன, ஸ்ரீலங்கா அரசு பொய்ப் பிரசாரங்கள் மூலம் தமிழ் மக்களை திசை திருப்பப் பார்க்கிறது

நேற்று வானொலியிலும், ரூபவாஹினியிலும் தெரிவிக்கப்பட்ட செய்திகளை மறுத்து விடுதலைப் புலிகள் மேற்கண்ட அறிவித்தலை விடுத்தனர்.

வல்வெட்டித்துறையில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் வல்லைப் பாலத்தையும் கடந்து வடமராட்சியை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் —

விடுதலைப் புலிகளின் பல முகாம்கள் கைப்பற்றப்பட்டு விட்டன என்றும் — நேற்று ஸ்ரீலங்கா வானொலியும் ரூபவாஹினியும் அறிவித்திருந்தன. (இ-10)

இன்று காத்தவராயன் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 14

காத்தவராயன் நாடகவெளியீடும் காத்தவராயன் நாடக அரங்கேற்றமும் இன்று சனி பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

யாழ் மாவட்டக்கலாசாரப் பேரவை நாட்டார் கலைக்குழு இந்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளது.

யாழ் அரச அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் தலைமை வகிப்பார் துணை வேந்தர் பேராசிரியர் க. சிற்றம்பலம் வெளியீட்டுரையை நிகழ்த்துவார். (இ-எ)

★ வெளிவந்து விட்டான்

அர்ச்சுனா

வெளிநாட்டுச் சஞ்சிகையோ என்று வியக்க வைக்கும் வண்ண முகப்பு அட்டையுடன் இப்போது விற்பனையாகிறது பெப்ரவரி மாத இதழ்.

★ சாதனை புரிந்த யாழ். சிறார்கள்
★ வெள்ளைக் கிறிஸ்மஸ்
★ யப்பானின் மறுபெயர் கவர்க்கமா?
★ அறிவுலக அறிமுகம்
★ வியத்தகு விண்வெளி
★ கணிதப் புதிர்
★ எண் சிலம்பம்

இன்னும் எத்தனையோ புதிய அம்சங்கள் !!!

★

இன்றே உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

தனிப்பிரதி ரூபா 3/- மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

★★★★★★★★★
★ சின்னஞ் சிறு ★
★ விளம்பரங்கள் ★
★★★★★★★★★

விற்பனைக்கு

குளிர்சாதனப் பெட்டி. சலவை இயந்திரம், ரி வி பூஸ்டர் அன்ரனாவுடன், Hi-Fi ஸ்ரீரியோ செட், நிலம் மினுக்கும் இயந்திரம், சமையல் அறைப் பொருள்கள், டிவைர் செற், வெளிநாட்டு கிளாஸ் வகைகள், வீட்டுப் படங்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். ரி பி.ஜே துரைசிங்கம், 32, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22394

கோழிஇறைச்சி (புரொயிலர்ஸ்), முட்டை விற்பனைக்கு உண்டு சீமாட்டி பாம்லீ, ஸ்ரேசன் ரோட், மயிலங்காடு கன்னாகம். சீமாட்டி பாம்லி யாழ்ப்பாணம்.

சேவை

நினைரி எங்களுடைய க்தாபனம் இரவு 8 45 வரை திறந்திருக்குமென அறியத் தருகின்றோம். யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற், 124, RR நல்லூர் வீதி முதலாம் குறுக்குத்தெரு', யாழ்ப்பாணம். தொலைபேசி 23460.

நாளை ஆலாபனா நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 14

'ஆலாபனா' கர்நாடக சங்கீத சபாவின் அனுசரணையுடன் யாழ் பல்கலைக்கழகக் கலைப் பேரவை நடத்தும் கர்நாடக இசையரங்கு நிகழ்ச்சி நாளை ஞாயிறு பிற்பகல் 3 30 மணிக்கு யாழ் பல்கலைக்கழகக் கலைமாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

சென்னை கர்நாடக சங்கீத மத்திய கல்லூரி சங்கீத வித்துவான் செல்வி. பராசக்தி சிவலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரி அன்று நடைபெறும்.

தங்கவேற்றார் பேராசிரியர் எல். வித்தியானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (அ-ஏ)

"தொடரும் எனருல் தொடரராது தொடரராது என்ருல் தொடர்ந்துவிடும்!!"

இது என்ன புதிர் என்று யோசிக்கிறீர்களா

புதிர் அல்ல; கண்ணாமூச்சி விளையாட்டு. அந்த விளையாட்டின் உச்சக் 'கட்டம்'தான் பிரதமர் ராஜீவ் காந்தி, கடந்த திங்கட்கிழமை திரு. டிக்ஸிற் மூலம் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்குச் கையளித்த கடிதம்.

போராளிகளுக்கு எதிரான தாக்குதல் என்ற பெயரில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது.

தொடருமானால்

இனப்பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்து வைக்கும் முயற்சியை இந்தியா தொடராது

இது பிரதமர்காந்தியின் கடிதத்தில் கூறப்பட்ட ஓர் அம்சம்.

இப்படி எத்தனையோ தடவை கூறப்பட்டாயிற்று இலங்கை அரசு கேட்டதா? இல்லை.

இதனை இலங்கை அரசு எத்தனையோ தடவை மீறியாயிற்று. 'தொடருமானால் தொடராது' என்று கூறுவதில் இனியும் பயன் உண்டா? என்று இந்தியா தானும் உணர்ந்ததா! அதுவும் இல்லை.

தொடரும் படுகொலைகள்

வவுனியா, முதூர், மன்னாரதீவு, உடுமன்குளம், கொக்கட்டிச்சோலை என்று படுகொலைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன

'வன் செயல்கள் வன்மைக்கு' மக்கள் காட்டிக் கொண்டுள்ளனர்.

'பேச்சுக்கள் வட்டத்துக்கு' சம்பந்தப்பட்ட தலைவர்கள் காட்டிக் கொண்டுள்ளனர்.

இரு பக்கத்தினராலும் விட்டு விலக முடியாத நிலை.

இந்த நிலையில் தான் பிரதமர் காந்தி, கொக்கட்டிச் சோலைச் சம்பவத்திற்குப் பின்னர் எழுதிய கடிதம் தமிழ்ஈழ்ட்டரின் கைகளுக்கு வந்துள்ளது

கடிதத்துக்குப் பதிலளிப்பதில் இம் முறை ஒரு மாற்றம்.

கடிதம் கிடைத்தவுடன் தமிழ்ஈழ்டரும் அவருக்குப் வேண்டியவர்களும் கூடிப் பேசிவிட்டு காதோடு காதாக இந்தியாவுக்குப் பதிலளித்து விடுவர்.

இம்முறை அமைச்சரவையின் பரிசீலனைக்குக் கடிதம் சமர்ப்பிக்கப் உள்ளது.

பேச்சுக்களைத் தொடர இன்னொரு முக்கிய நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதே இதற்குக் காரணம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

அந்தமுக்கிய நிபந்தனை என்ன?

டிசம்பர் 19இல் இணை அமைச்சர் – குழு ஜனாதிபதி சந்திப்பில் உருவாகி,

தமிழ்ஈழ்டரால் கையெழுத்திட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட யோசனையில்–

இலங்கை உறுதியாக உள்ளது என்பது பகிரங்கமாக அறிவிக்கப்பட வேண்டும்.

இதுதான் அந்த முக்கிய நிபந்தனை

இந்த நிபந்தனையற்றி தமிழ்ஈழ்டரால், அவரின் நெருங்கிய சகபாடிகளால் எப்படித் தனியாகத் தீர்மானிக்க முடியும்? இது தனியோரு விஷயம் அல்லவா? அமைச்சரவையில் போட்டு விட்டார்.

அமைச்சரவை முடிவு எப்படி இருக்கும்? இந்தியாவுக்கு வெகு கிழமை இலங்கையின் மதில் கிடைத்திருக்க வேண்டும் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எரிபொருள் தடையை விலக்க வேண்டும் என்று இந்தியப்பிரதமர் அடுத்த நிபந்தனை போட்டிருக்கின்றார்.

உள்விவகாரமாம்

இது உள்விவகாரத்தில் இந்தியா அப்பட்டமாகத் தலையிடுவதைக் காட்டுகிறது என்று கிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார் என்று பி. பி. சி. அறிவித்தது.

மறித உரிமையிலே அப்பட்டமாகத் தலையிட்டு உள்ள ஓர் அரசை, மத்தியஸ்தம் செய்ய முன்வந்த அரசு தட்டிக் கேட்டால் அது 'அப்பட்டமான' தலையீடா?

இராணுவ நடவடிக்கையின் நோக்கம் என்ன

இந்த நிலையில் இலங்கை அரசு தற்போது தமிழர் பகுதிகளில் எடுத்துவரும் இராணுவ நடவடிக்கைகளின் பின்னணி என்னி?

கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பலதரப்பட்ட கருத்துக்கள் இது குறித்து வெளியாகி உள்ளன!

பெரும்பாலான தமிழர் பகுதிகள் போராளிகளின் கட்டுப்பாட்டிக் உள்ளன என்று சிங்கள மக்கள் எண்ணி வருகின்றனர். இந்த எண்ணத்தை மாற்ற வேண்டும்.

அடுத்தது மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் தமிழர் பகுதிகள் இலங்கை அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன என்பதை நிலை நிறுத்த வேண்டும்.

இப்படித் திட்டம் போட்டுத்தான் கொழும்பு அரசு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

இந்தத் தருணத்தில் தான் இந்திய பிரதமரின் காட்டமான கடிதம் தமிழ்ஈழ்டரிடம் வந்து சேர்ந்தது.

தனது திட்டத்தைச் செயல்படுத்திய பின்னர் பேச்சுக்களைத் தொடக்கலாம் என்று எண்ணி இருந்த இலங்கை அரசுக்கு, இப்போது இந்தியாவின் நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ய வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

எப்படியும் இவ்வாரத்தினுள் "தொடரும் என்றால் தொடராது....." என்ற புதிருக்கு விடை காணப்பட்டு விடும் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ★

வன்செயல் வலைக்குள் மக்கள்; பேச்சு வட்டத்திற்குள் தலைவர்கள்!

உள்ளம் பறவும் — குறுமுனி

வெங்கடேஸ் வெளியேற பண்டாரி காரணமா?

பண்டாரி அணுகுமுறை இன்னும் பாரதப் பிரதமரை வழி நடத்துகின்றதா?

வெங்கடேஸ்வரனின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து இந்திய வட்டாரங்களில் இது வெளிவந்துள்ளது

இலங்கை இனப்பிரச்சினைக்கு 'ஜெட்வேக ராஜதந்திர விஜயங்களை' மேற்கொண்டு தீர்வு கண்டுவிட முடியாது— இப்படி பிரதமர் காந்திக்கு வெளியுறவுச் செயலாளர் பதவியை ஏற்றுக் கொண்டவுடன் வெங்கடேஸ்வரன் ஆலோசனை கூறிவந்தார். இந்த 'ஜெட்வேக ராஜதந்திர அணுகுமுறையை'க்காட்டியவர் திரு பண்டாரி

இனப்பிரச்சினைப் பேச்சுக்களில், பதவியில் இருந்து ஒய்வுபெற்ற பின்னரும் பண்டாரியின் பணி இருந்துதான் வந்தது

வெளியில் இருந்தும் தலையீடு

வெளியில் இருந்து கொண்டு வெளியுறவுக் கொள்கையில் பண்டாரி தலையீட்டு வந்ததுவெங்கடேஸ்வரனுக்குப் பிடிக்கவில்லை

இன்ன அமைச்சர் பழனிப்பன் சிதம்பரத்தை இனப்பிரச்சினைப் பேச்சுக்களில் கலந்து கொள்ள வைத்தவர் திரு வெங்கடேஸ்வரன் இதன்மூலம் பண்டாரி விக்தலையீட்டை குறைக்கலாம் என்று வெங்கடேஸ்வரன் எண்ணினார்

'தமிழருக்கு எதிரான திட்டமிட்ட அரச பயங்கரவாதச் செயல்களை இந்தியா வன்மையாக எதிர்க்கவேண்டும்; பாதிக்கப்பட்டவர்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் — இப்படி வெங்கடேஸ்வரன் எண்ணிச் செயல்பட்டார்.

இனப்பிரச்சினையில் வெங்கடேஸ்வரன் அணுகுமுறை, 1983இல் இருந்து அன்னை இந்திரா மறையும் வரை கடைப்பிடிக்கப்பட்டுவந்த பார்த்தசாரதியின் அணுகுமுறையிலேயே அமைந்து இருந்தது

பண்டாரி சொன்ன கதை

வெங்கடேஸ்வரன் பார்த்தசாரதியுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்து சிலருக்குப் பிடிக்கவில்லை

வெளியுறவு அமைச்சராக பிரதமர் காந்திக்கு எதிராக இயங்குகின்றது என்று பிரசாரம் செய்வதில் அவர்கள் ஈடுபடத் தொடங்கினர்.

திரு பண்டாரி இந்தக் கதையை, சிரேஷ்ட ராஜதந்திரி ஒருவரிடம் நேராகவே போய்ச் சொன்னார்.

அந்த ராஜதந்திரியோ மிக நேர்மையானவர் அவர் நேராக வெங்கடேஸ்வரனைச் சந்தித்து பண்டாரியின் கதையைத் தெரிவித்தார்.

வெங்கடேஸ்வரன் வெளியேற்றத்துக்கு பண்டாரிதான் காரணமா?

பண்டாரியின் ஆலோசனையைக் கேட்டுத்தான் வெளியுறவு அமைச்சைப் பிரதமர் நடத்துகின்றாரா?

இந்திரா காங்கிரஸின் வெளியுறவுப் பிரிவின் தலைவர் திரு பண்டாரி அவர்தான் உத்தியோகப் பற்றற்ற வெளியுறவு அமைச்சராகப் பணிபுரிகிறாரா?

இக் கேள்விகள் எல்லாம் புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் எழுந்து உள்ளன ★

"தொடரும் என்றால் தொடரராது தொடரராது என்றால் தொடர்ந்துவிடும்"

மீறியாயிற்று. 'தொடருமானால் தொடராது' என்று கூறுவதில் இனியும் பயன் உண்டா? என்று இந்தியா தானும் உணர்ந்ததா! அதுவும் இல்லை.

தொடரும் படுகொலைகள்

வவுனியா, முதூர், மன்னாரதீவு, உடுமன்குளம், கொக்கட்டிச்சோலை என்று படுகொலைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன

'வன் செயல்கள் வன்மைக்கு' மக்கள் காட்டிக் கொண்டுள்ளனர்.

'பேச்சுக்கள் வட்டத்துக்கு' சம்பந்தப்பட்ட தலைவர்கள் காட்டிக் கொண்டுள்ளனர்.

இரு பக்கத்தினராலும் விட்டு விலக முடியாத நிலை.

இந்த நிலையில் தான் பிரதமர் காந்தி, கொக்கட்டிச் சோலைச் சம்பவத்திற்குப் பின்னர் எழுதிய கடிதம் தமிழ்ஈழ்டரின் கைகளுக்கு வந்துள்ளது

கடிதத்துக்குப் பதிலளிப்பதில் இம் முறை ஒரு மாற்றம்.

கடிதம் கிடைத்தவுடன் தமிழ்ஈழ்டரும் அவருக்குப் வேண்டியவர்களும் கூடிப் பேசிவிட்டு காதோடு காதாக இந்தியாவுக்குப் பதிலளித்து விடுவர்.

இம்முறை அமைச்சரவையின் பரிசீலனைக்குக் கடிதம் சமர்ப்பிக்கப் உள்ளது.

பேச்சுக்களைத் தொடர இன்னொரு முக்கிய நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதே இதற்குக் காரணம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

அந்தமுக்கிய நிபந்தனை என்ன?

டிசம்பர் 19இல் இணை அமைச்சர் – குழு ஜனாதிபதி சந்திப்பில் உருவாகி,

தமிழ்ஈழ்டரால் கையெழுத்திட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட யோசனையில்–

இலங்கை உறுதியாக உள்ளது என்பது பகிரங்கமாக அறிவிக்கப்பட வேண்டும்.

இதுதான் அந்த முக்கிய நிபந்தனை

இந்த நிபந்தனையற்றி தமிழ்ஈழ்டரால், அவரின் நெருங்கிய சகபாடிகளால் எப்படித் தனியாகத் தீர்மானிக்க முடியும்? இது தனியோரு விஷயம் அல்லவா? அமைச்சரவையில் போட்டு விட்டார்.

அமைச்சரவை முடிவு எப்படி இருக்கும்? இந்தியாவுக்கு வெகு கிழமை இலங்கையின் மதில் கிடைத்திருக்க வேண்டும் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எரிபொருள் தடையை விலக்க வேண்டும் என்று இந்தியப்பிரதமர் அடுத்த நிபந்தனை போட்டிருக்கின்றார்.

உள்விவகாரமாம்

இது உள்விவகாரத்தில் இந்தியா அப்பட்டமாகத் தலையிடுவதைக் காட்டுகிறது என்று கிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார் என்று பி. பி. சி. அறிவித்தது.

மறித உரிமையிலே அப்பட்டமாகத் தலையிட்டு உள்ள ஓர் அரசை, மத்தியஸ்தம் செய்ய முன்வந்த அரசு தட்டிக் கேட்டால் அது 'அப்பட்டமான' தலையீடா?

இராணுவ நடவடிக்கையின் நோக்கம் என்ன

இந்த நிலையில் இலங்கை அரசு தற்போது தமிழர் பகுதிகளில் எடுத்துவரும் இராணுவ நடவடிக்கைகளின் பின்னணி என்னி?

கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பலதரப்பட்ட கருத்துக்கள் இது குறித்து வெளியாகி உள்ளன!

பெரும்பாலான தமிழர் பகுதிகள் போராளிகளின் கட்டுப்பாட்டிக் உள்ளன என்று சிங்கள மக்கள் எண்ணி வருகின்றனர். இந்த எண்ணத்தை மாற்ற வேண்டும்.

அடுத்தது மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் தமிழர் பகுதிகள் இலங்கை அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன என்பதை நிலை நிறுத்த வேண்டும்.

இப்படித் திட்டம் போட்டுத்தான் கொழும்பு அரசு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

இந்தத் தருணத்தில் தான் இந்திய பிரதமரின் காட்டமான கடிதம் தமிழ்ஈழ்டரிடம் வந்து சேர்ந்தது.

தனது திட்டத்தைச் செயல்படுத்திய பின்னர் பேச்சுக்களைத் தொடக்கலாம் என்று எண்ணி இருந்த இலங்கை அரசுக்கு, இப்போது இந்தியாவின் நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ய வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

எப்படியும் இவ்வாரத்தினுள் "தொடரும் என்றால் தொடராது....." என்ற புதிருக்கு விடை காணப்பட்டு விடும் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ★

அரசாங்க அலுவலகங்களில்... "சிகை"

மாறும் திணைக்களங்கள் மக்களுக்கு அறிவித்தால் என்ன?

சில திணைக்களங்கள் முன்னர் இருந்த இடங்களில் இருந்துவேறு இடங்களுக்கு சுற்றிலைக் கேற்றவாறு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள் தங்கள் தேவை நோக்கி கருமமாற்றக்கூடியவகையில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் எங்கே இருக்கின்றன என்பதை தெரியப்படுத்துவது, திணைக்களங்களின் பொறுப்பாகும்.

★ ★ ★

சில அரச அதிகாரிகள் பொதுமக்களுக்கு உதவுபவர்களாயிருக்கின்றனர். ஆனால் சிலர் பொறுப்பற்றவர்களாகவும் இருக்கின்றனர். கடமையில் அவர்களது செயற்திறன் மிகவும் குறைவு. தங்களுக்கு கீழ் உள்ளவர்களை எல்லாம் எதையும் செய்ய அனுமதித்து விட்டு அவர்கள் ஊர்க்குருவிகள் போல பல சொந்தத் தேவைகளுக்கு கடமை நேரத்தில் அலைகின்றனர். நற்போதைய பிரயாணக் கஷ்டமும் பணியாளர்களுக்கு ஒருவகையில் உதவுகின்றது போலும்.

★ ★ ★

திணைக்களங்களில் செய்தி சேகரிப்பதற்கு கொழும்பு பத்திரிகைகள் பெண்களை அக்கடமைக்கு ஈடுபடுத்துகின்றன. சில சமயங்களில் செய்தி எடுத்ததோடு அவர்கள் திணைக்களத் உயர் அதிகாரிகளுக் கிடையில் பெரும் சச்சரவையும் ஏற்படுத்தி விடுவதுண்டு. ஒரு பிரபலமான பெண் செய்தியாளர் ஒரு திணைக்களத்திற்குச் சென்று உதவி அதிகாரியிடம் ஒரு செய்தியை பெற்றுவிட்டு பின்னர் அத்திணைக்களத் உயர் அதிகாரியைச் சந்தித்த போது தவறுதலாக அச் செய்தியை எப்படி பெற்றார் என்பதை கதையோடு கதையாக சொல்லிவிட்டார். கதிரையில் இருந்த அந்த அதிகாரி திடீரென வெளியே வந்து தனது உதவியாளரைக் கண்டித்தபோது செய்தியாளர் அல்விடத்தில் இருந்தும் நழுவி விட்டார். இச் செய்தியாளர் ஒரு தமிழ் பெண்மணி என்பது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

விதிகள் இன்னமும் சரிய திணைக்களத்தினுள் திருத்தப்படவில்லை. பெரும் திணைக்களத்தினருக்குரிய விதிகள் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. பொது மக்களுக்கு உள்ள பிரச்சினைகளுக்குள் இவ்விதிகள் பற்றிப் புகார் செய்ய எங்கே நேரம் இருக்கின்றது. திணைக்கள அதிகாரிகளும் என்ன செய்வார்கள்? வாகனம் இல்லை வசதி இல்லை. பல விதிகளுக்கு கல்லுப் போட்ட நிலையில் அப்படியே வேலைகள் ஸ்தம்பித்துள்ளன. குவிக்கப்பட்ட கற்களை பொதுமக்கள் பரவிவிட்டால் என்ன என்று ஓர் இளைப்பாறிய ஒய்வியர் குறைபட்டுக் கொண்டார். எல்லாம் நாம் செய்த வினைபோல் தோன்றுகின்றது வசதியான நேரத்திலும் வசதிகுறைந்த நேரத்திலும் ஒரே நிலைதான். தங்கவிதியை யார் மாற்ற முடியும்?

★ ★ ★

கிடைத்த உதவிகளை உபயோகிக்காமல் விடுவது அதிகாரிகளின் அணுகுமுறைக் குறைபாடுகளையே காட்டுகின்றது. மேலும் அந்த அதிகாரிகளுக்கு உதவியாளராக இருப்பவரும், சம்பந்தப்பட்ட விடயத்திற்கு நிரந்தரமாகப் பொறுப்பாக வுள்ளவரின் பொறுப்பற்ற தன்மையையே எடுத்துக் காட்டுகிறது என்றும் எண்ணலாம். ஆனால் எந்த அடிப்படையில் இப்பொறுப்புக்களையும் கடமைகளையும் ஓர் அதிகாரி நட்டிக் சுமித்தார், அல்லது கவனக் குறைவாக கடமையில் இருக்கின்றார் என்பது வெளிப்படுத்தப் படாது விடுவது, பொது மக்களின் நலனைப் பெரிதும் பாதிப்படையச் செய்யும் விடயம். அரச உயர் அதிகாரிகள் சூழ்நிலையை சாதகமாக்கிக் கொள்ளாது மக்கள் சேவையில் உறுதியான நிலைப்பாட்டினை மேற்கொள்ளக் வேண்டும் ★

சோவியத் யூனியனில் சிந்தனை மாற்றங்கள்

சோவியத் யூனியனின் முதலாவது தலைவர் லெனினின் மறைவுக்குப் பின்னர் முதல் தடவையாக சோவியத் தலைமைப் பீடத்தின் சிந்தனையில் ஏற்பட்டு வரும் மாற்றமாக அரசியல் அவதானிகள் இதனைக் கருதுகின்றனர்.

இந்த மாற்றங்களை சோவியத் தலைவர் கோர்பச்சேவின் உள்நாட்டு அரசியல், சமுதாயச் சீர்திருத்தங்களாக மேற்கு நாட்டு ராஜதந்திரிகள் கருதுகின்றனர்.

பேச்சுச் சுதந்திரத்தின் முதல்படியே சோவியத் அதிருப்தியாளர்கள் விடுதலை செய்யப்பட்ட சம்பவம் என்றும் கருதப்படுகிறது.

சோவியத் யூனியனில் தலைமையில் சீனத் தூதுகோஷ்டி ஒன்று மாஸ்கோவுக்கு விஜயம் செய்தது.

கடந்த 9 ஆண்டுகளில் சீன உயர் மட்டத்தூதுக் கோஷ்டி ஒன்று சோவியத் யூனியனுக்கு விஜயம் மேற்கொண்டது இதுவே முதல் தடவை ஆகும்.

அங்கு இருந்து வந்த கட்டுப்பாடுகளில் ஏற்பட்டுள்ள தளர்வே என்றும் கூறப்படுகிறது.

மேற்கத்திய சிந்தனைகளை வேரறுப்பதற்காக கலாசாரப் புரட்சியை ஆரம்பித்த சீனா தற்போது மேற்கத்திய சிந்தனைகளுக்கு எதிராக கிராமப் பகுதிகளில் இயக்கங்களை நடத்துவதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறது

ஆகவே சோவியத்யூனியனில் தற்போது ஏற்பட்டுவரும் மாற்றங்கள் போன்றசீனாவிலும் மாற்றங்கள் ஏற்படும் சாத்தியங்கள் இருந்து வருகின்றன.

லக உலா

என்.பி. சீலன்

சோவியத் தலைவர்கள் வரிசையில் தற்போது ஆட்சியில் இருக்கும் கோர்பச்சேவ் உள் நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் மிதவாத போக்கைக் கடைப்பிடித்துவருகிறார்.

சீனாவுடன் ஏற்பட்டுள்ள சித்தாந்தத் தகராறுகளைத் தீர்க்கும் முயற்சிகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 30 ஆண்டுகளாக இருந்துவரும் இப்பிரச்சினைக்கு சமுகமான தீர்வு காணும் முயற்சியாக கடந்தஜனவரிக்கிழமை சீன உதவிப் பிரதமர் துத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவில் மாஸேதுங்–சு–என்–லாய் காலத்தின் பின்னர் எப்படியான மாற்றங்கள் உருவாகி வருகின்றனவோ அதே மாதிரியான மாற்றங்களை பிரஷ்னேவ் — கொஸிஜின் காலத்தின் பின்பு தற்போது உருவாகி வருவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

சீனாவில் சமீபகாலமாக மாணவர்கள் நடத்தி வரும் ஆர்ப்பாட்டங்கள் சீன உயர் பீடத்தின் தாராளக் கொள்கையின் எதிரொலி என்றே நம்பப்படுகிறது.

சீனாவில் மாணவர் கிளர்ச்சி சம்பவங்கள் வெளி உலகுக்குத் தெரியவருவதும் இந்த மாற்றங்கள் கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைகளில் எந்த வித மாற்றத்தையும் கொண்டுவராவிட்டாலும் மக்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் இடையில் இருந்துவரும் பெரும் இடைவெளியைக் குறைக்க உதவும் என்று நம்பப்படுகிறது

தற்போது சோவியத் யூனியனில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் சோவியத்தின் பிடியில் இருந்துவரும் வார்ஸோ ஒப்பந்த நாடுகளிலும் [illegible] ★

பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியா:- OPEN VISA

லிபியா:- எலெக்றிக் வெல்டிங், காஸ் வெல்டிங்

அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டும்.

சிங்கப்பூர்:- கப்பலில் வேலை செய்வதற்கு விரும்புவோருக்கான பயண ஒழுங்குகள்

விபரங்களுக்கு கீழ்க் காணும் முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும்.

றை ஸ்ரார் றவல்ஸ்

இல. 6, நவீன சந்தை மேல்மாடி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 23831

கதையில் பேச்சுத்தமிழ்; காலங்கழியப் புரியாது போகுமா?

அநேக நாட்களின் பின் ஒரு குறுநாவலை வாசித்து கதை முழுமையாக ரசித்து ஜீரணிக்கும் வாய்ப்பை, திரு. து. லைத்திலிங்கம் அவர்களின் 'சிறைப்பறவை' எனக்குத் தந்தது.

கதையின் கருப்பொருள், அது நிகழ்ந்துள்ள கிராமத்தின் சூழலைப் படம் பிடித்துக் காட்டிய தன்மை, அத்துடன் கிராமத்துப் பேச்சு வழக்கில் கதை எழுதப்பட்டுள்ள விதம், ஆசிரியர் கையாண்டுள்ள உத்தி, நவீனம், நிதானம் ஆகியன எல்லைக் கவர்ந்துள்ள முழுமையான அம்சங்களாகும். சமூக குறைபாடுகளையும், மன எழுச்சிகளையும்– போராட்டங்களையும்– உள்ளக்கிடக்கைகளையும், குறுநாவலில் வடிவில் உருவாக்க முடியும், உருவாக்கிப் புரியவைக்க முடியும் என்பதை திரு. லைத்திலிங்கம் சிறைப் பறவைகள் மூலம் நிரூபித்து விட்டார்.

இக்குறுநாவல் பற்றி ஆய்வுரை நிகழ்த்திய 'புத்தொளி' வரிக்கிரமமாக ஆராய்ந்து ஆசிரியரின் உன்நோக்கையும் துணிச்சலையும் மெச்சினார் அத்துடன் சிறுகதைகளில் தற்கால 'கல்கி'யே என்று கூறிய புத்தொளிசிறைப்பறவை கவிக் ஆசிரியர் கையாண்டுள்ள பேச்சுத் தமிழ் பிரயோகம், எழுபது எண்பது ஆண்டுகளுக்குப் பின் வாசிக்கப் போகின்றமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தக் கூடும். என்றதோர் ஐயப்பாட்டையும் கிளப்பியிருந்தார்.

எனினும் மதராஸ் தமிழையும், மதுரைத் தமிழையும், ஏன்! இந்திய சஞ்சிகைகளில் வரும் அதர்னை "இலக்கிலீஸ் தமிழையும்" சஞ்சிகைகளில் வாசித்து, வாசித்து சலித்துப் போன எம்மவருக்கு 'கொக்குவில் தமிழை' கேட்பதில் ஓர் ஆர்வம், அவா, இருக்கத்தானே செய்யும் என்பதையும் அவர் ஒப்புக் கொள்வார் என நினைக்கிறேன்.

குறுநாவல் வெளியீட்டுக் கண்ணோட்டம்

நேர்மையற்ற எழுத்தாளர் உளரா?

எழுத்துலகில் முன்னோடியாக விளங்கும் செங்கை ஆழியான், இந்நூலாசிரியரைப் பற்றிக் கூறுகையில், திருலைத்திலிங்கம் "ஒரு நேர்மையான எழுத்தாளன்" என்று ஆணித்தரமாகக் கூறினார்.

நான் அந்த "நேர்மையான" என்ற வாசகத்தை "Honest writer" என்ற அர்த்தத்திலதான் புரிந்து கொண்டேன். அப்படியானால் நேர்மையற்ற எழுத்தாளரும் உளரோ? இக் கேள்வி என் நெஞ்சில் விடை காணாது தவித்து நிற்கிறது.

தன் கருத்தில் தோன்றியதை எழுத்தில் வடிப்

(8ஆம் பக்கம் பார்க்க)

நோக்குபவர்:

அ. குணபாலசிங்கம்

இன்று ஈழத் தமிழர் ஆர்வமுடன் கேட்கும் "ஆல் இந்திய றேடியோ" "தமிழ் செய்தியில் "மதராஸ் அணிக்கும் பாங்களூர் அணிக்கும் இடையில் நிகழ்ந்த ஹாக்கி சாம்பியன் போட்டி வெற்றி தோல்வியின்றி "ட்ரா" யில் முடிவடைந்தது என்று கூறும் சொற்

(7ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவரை விட மக்கள் சமுதாயத்தை உயர்த்தியவர் யார் உளர்?

வள்ளுவரை நினைக்கும் போதெல்லாம் என் உள்ளம் பெரிய உள்ளமாக விரிகிறது.

காரணம் என்ன?

மக்கள் சமுதாயத்தைத் தூக்கி விட்டவர் வள்ளுவர்

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ள'', எண்ணு நல்லதை எண்ணு! பெரியதை எண்ணு! ஏன்? ''அப்படி நீ ஆவாய்'' இப்படித் தூக்கி விட்டவர் வள்ளுவர்

இரண்டு வரிகளாலும் தூக்கி இமயத்திற்கு மேலே அல்லவிடுகிறார். எண்ணு! எண்ணு! நல்லதை எண்ணு! பெரியதை எண்ணு! உயர்வை எண்ணு! சிறப்பை எண்ணு! அமுதமாக எண்ணு! ஆமமாக எண்ணு! இப்படிச் சொல்லி விட்டால் போதாதாம் இந்தக் கன்னத்திலே வேறு திருப்பி அடிக்கிறார்.

''உள்ளற்க உள்ளம் சிறுகுவ''

குறளை புத்தியை ஒரு நாளும் கொள்ளாதே என்று இப்படி ஒரு அறை

''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ள'' மற்றது நன்னிலும் தன்னாமை நீர்த்து'' இப்படி ஒன்று: என்ன? அவருடைய உள்ளம் பாருங்கள்! இப்படிப் படைத்தவன் மக்களைத் தூக்கி விட்டிருக்கிறான் மன்னன் குடிகளைத் தூக்கி விட்டிருக்கிறான் அரசியல் தலைவர்கள் நல்லவர்கள் கட்சிக்காரர்களைத் தூக்கி விட்டிருக்கின்றார்கள். ஆனால் மொழிப்புலவர்களில் வள்ளுவனைத்தவிர உலகத்தில் எவரும் இப்படி மக்கள் சமுதாயத்தைத் தூக்கி உயர்த்தி விடவில்லை.

''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ள'' என்று அவருடைய உள்ளப் பண்பாட்டைப் பாருங்கள். ஏனென்றால் அப்படியே ஆவார்களாம்.

''எண்ணிய எண்ணியாங்கு எய்துப'', எப்போது? எண்ணியர் திண்ணியராகப்பெறின்'' (தொகுப்பு: க. கணேஷ்)

கி. ஆ. பெ. விசுவநாதம்

சொல்லடி பராசக்தி!

சொல்ல முடியாத
சோக நெருப்பெந்தன்
உள்ளத்தை வாட்டி
உலர்த்துவதேன்!
சொல்லடி பராசக்தி!
சொல்லம்ம! என்நெஞ்சில்
கல்லேற்றி வைக்காமல்
கலைப்பயிரை ஏன் வளர்த்தாய்!

* * *

மரம் முறிந்து வீழ்ந்தாலும்
மனமொடிந்து போகிறதே!
அடுத்தவனின் அழுகுரலும்
அடியேனை வருத்துவதேன்!
கவி யெழுத விட்டவளே!
கவலைகளை ஏனளித்தாய்!
புவியழுது புலம்புவதை
பொறுக்கமனம் எனக்கில்லையே!

* * *

யாரோ நடுத்தெருவில்
நாய்களெனச் செத்துவிழ
நானேன் பராசக்தி
நடுங்கியழவேண்டும்?
'வாழ்வினைதான் என்று பலர்
உசும்பாமல் இருக்கையிலென்
பாழும் மனமேன் தான்
பதறித் துடிக்கிறதோ!

* * *

காளியம்மா, என்மனதில்
கலைப்பயிரை வளர்த்தவளே!
ஊழிவரை இப்படிநான்
உளமுடைந்து வாடுவதோ!
சொல்லடி பராசக்தி
சோதனைமேல் சோதனையேன்!
நில்லடி, எமதினத்தின்
நிம்மதியை ஏன் குலைத்தாய்!

செ. குணரத்தினம்

வாழ்வின் வெற்றியை தடுக்கும் எதிரிகள்

பசி, பிணி, மூப்பு போன்றவற்றால் எழும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய மனிதன் அவற்றை வெற்றி கொள்வதற்கு பல முயற்சிகளை மேற்கொள்ளுகின்றான்.

இம்முயற்சியில் ஒரு சிலர் வெற்றி பெறுகின்றனர் பலர் தோல்வி அடைகின்றனர்

எனவே வெற்றி பெறுவதற்கு என்ன வழிமுறைகளைக் கையாளலாம்? வெற்றி பெற்றோர் என்ன வழிமுறைகளைக் கையாண்டார்கள் என்பது பற்றிச் சிந்திப்பது பயன்தரும்.

மகிழ்ச்சியாக இருத்தல் மனவளர்ச்சிக்கும் உளவளர்ச்சிக்கும் வெற்றிக்கும் அத்தியாவசியமானது. மகிழ்ச்சியை உண்டாக்கவும் பேணவும் குந்தகமாக இருப்பவை யாவை? மகிழ்ச்சியின் எதிரிகள் யாவை?

எதிரிகள்

பொதுவாக நாம் இரு வகை எதிரிகளைச் சந்திக்கின்றோம். அவையாவன: அக எதிரிகள்; புற எதிரிகள். புற எதிரிகள் அக எதிரியால் தோன்றுகின்றனர். அக எதிரி மனதிலுள்ள குற்றங்களால் தோன்றுகின்றன.

குற்றங்கள்

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாசொல் ஆகிய நான்கும் மனதில் ஏற்படும் குற்றங்கள் என வள்ளுவன் இனங்காட்டுகிறார் இவ்வாறு இனங்கண்ட அக எதிரிகளை வெல்லுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்

அழுக்காற்றின் பிரதிபலிப்பாக பொறாமை தலை தூக்குகின்றது பொறாமை என்று கூறுவதில் மற்றவர்களின் உயர்ச்சியை, மேம்பாட்டைச் சகிக்காமை என்றும் அமைதியின்மை என்றும் கொள்ளலாம்.

நாம் உயர்வடைய வேண்டும்; மேம்பாடடைய வேண்டும் என்னும் எண்ணம் நியாயமானது; பாதகமில்லாதது. ஆனால் நாம் ஒரு முயற்சியும் எடுக்காமல், மேன்மை அடைந்தோரை கொச்சைப் படுத்துதல் அநியாயமானது; பாதகமானதும் கூட

ஆசை

அவாப்படுதல், ஆசைப்படுதல் முயற்சிக்கு மூலதனமாகும் மற்றவர்களுக்குப் பாதகமில்லாத வகையில் தனக்கும் தன்னைச் சூழ்ந்தவர்க்கும் மகிழ்ச்சியையும் திருப்தியையும் ஏற்படுத்தும் முயற்சியை ஊக்குவிக்கும் அவா அவசியமானது. மற்றவர்களை வஞ்சித்துத் தனக்கு நியாயபூர்வமாக உரித்தாகாதவற்றை அடையத் தூண்டும் அவா அழிவை

(6 ஆம் பக்கம் பார்க்க)

வேறு எங்கும் இல்லை எம்மிடமே இருக்கிறார்கள்!

சி. இராமச்சந்திரா

பால்ய குற்றவாளிகளைச் சீர்திருத்தி இராணிச்சின்னம் அளித்த சாரணீயம்

பால்ய குற்றவாளிகளை நாம் இளமையிலேயே நல்வழிப்படுத்தத் தவறினால் அவர்கள் சமூகத்துக்குப் பின்னர் ஒரு சுமையென வளர்வர்.

இளம் குற்றவாளிகளை இனங்கண்டு அன்பு, அரவணைப்பு நல்கி நல்வழிப்படுத்த பல வழி உள்ளன. அவற்றுள் சாரணீயம் ஒரு நல்ல உபாயம்.

அவ்வாறு வடபகுதியில் இருந்து மூவரைச் சீர்திருத்தி அகில இலங்கை போட்டியில் இராணிச் சாரணர் விருதையும் பெறச்செய்த பெருமை வடமாநில சாரணீய இயக்கத்துக்கு உண்டு.

இச்சாதனையின் பின்னணியில் இயங்கியவர் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் குடும்ப ஆலோசகராகப் பணிபுரியும் கௌரவ யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் திரு சி. காந்தமூர்த்தி.

சாரணீய இயக்கம் பற்றிய அவரது நினைவலைகளை அவரே சஞ்சீவி வாசகர்களுக்கு இதோ விளக்குகிறார்;-

பள்ளிப்பருவத்திலே சாரண இயக்கத்தில் சேர்ந்தேன் பின்னர் சாரண ஆசிரியராகி மன்னார், வவுனியா, அநுராதபுரம், மட்டக்களப்பு, கல்முனை மாவட்டங்களிலும் சாரணீய சேவையில் ஈடுபட்டேன்.

சாரணீய இயக்கத்தில் ஈடுபடுவோரிடம் சேவை மனப்பான்மை மலர்வதை நான் உணர்ந்துள்ளேன்.

ஜெய்ப்பூர் ஜம்பூரி

காலி மாவட்டத்தில் ஹிக்கடுவ சீர்திருத்தப் பாடசாலையில் சாரணர் குழுவொன்றை அமைத்து பயிற்சி அளிக்கும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது. 1956 இல் காலிமாவட்டப் பிரதிநிதியாக இராஜஜிதான் மாநிலத்தின் தலைநகரான ஜெய்ப்பூரில் நடைபெற்ற 2 வது அகில பாரத சாரண ஜம்பூரியில்கலந்துபற்றினேன்.

இந்த அனுபவத்தின் பின்னணியில் நமது வடமாநிலத்திலும் 1958இல் ஆரம்பிக்கப்பட்ட அச்சுவேலி சேர்ன்ஹாம் சீர்திருத்தப் பாடசாலையில் சாரண இயக்கத்தை ஆரம்பித்தேன்

பலாவியில் நான் பெற்ற ஆசிரிய பயிற்சி அனுபவமும், நல்லை முக்க விசாரணைச் சிறுவர் இல்லங்கள் அனுபவமும், சாரணர் இயக்க அனுபவமும் பால்ய குற்றவாளிகளை சாரணீயம் மூலம் சீர்திருத்த வேண்டும் என்ற உந்துதலை என் மனத்தில் ஏற்படுத்தியது

சிறுவயதிலேயே கசப்பான அனுபவங்களைப் பெரும்பாலும் பெற்றவர்கள் பால்ய குற்றவாளிகள். அன்பு, அரவணைப்பு உணர்வுகளை இழந்தவர்கள் அல்லது மறுக்கப்பட்டவர்கள் அவர்கள். இதனால் முரட்டுத்தனமாக உண்டாகி, நெறி பிறழ்ந்துபோனவர்கள் என்பது அவர்களின் வாழ்க்கையை ஆராய்ந்தால் புரியும்

சாரணீயம் உதவும்

இத்தகைய சிறுவர்களை நல்வழிப்படுத்த சாரணீய இயக்கப் பயிற்சி,சாரணர் பாசறை அனுபவம், சேவை அனுபவம் பெரிதும் உதவும் என்பது எமது அனுபவம்.

அச்சுவேலி சீர்திருத்தப் பாடசாலையில் அமைக்கப்பட்ட சாரணர் இயக்கம் செவ்வனே இயங்கியது. இந்தச் சாரணர் குழு அப்போது வடமாநிலத்தில் சிறந்த சாரணர் குழுக்களில் ஒன்றாத் திகழ்ந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலை சாரணர் குழுக்களுடன் போட்டியிட்டது. அவர்களை வென்றது.

1960 மே மாதத்தில் கடவத்தையில் நடைபெற்ற அகில இலங்கை சீர்திருத்தப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் ஈடுபற்றி வெற்றிக் கேடயத்தையும் பெற்றது

சற்றில் 1966 ஜூன் மாதம் 27ஆம் திகதி இ பாடசாலை மாணவர்கள் மூவர் இராணி மாளிகைக்குச் சென்று இராணிச் சாரணர் விருதினைப் பெற்றனர்.

அன்றைய மகாதேசாதிபதி வில்லியம் கோபலாவ இவ்விருதுகளை இவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தார்.

கே. பாலசுந்தரம், எம். சம்சுதீன், எ. எம். பளீல் ஆகியவர்களே இம் மூன்று மாணவர்களும் ஆவர். பாலசுந்தரம் மலையகத்தையும், சம்சுதீன் கல்முனையையும், பளீல் புத்தளத்தையும் சேர்ந்தவர்கள்.

சாதனை இலங்கையில் மட்டுமன்றி உலகிலேயே பால்ய குற்றவாளிகள் இராணிச் சாரணர் சின்னத்தைப் பெற்றமை இதுவே முதற் தடவை ஆகும். இவ்வாறு இவர்கள் சாதனை நிலைநாட்டினார்கள்

1964 இல் அச்சுவேலி சீர்திருத்தப் பாடசாலைக்கு வருகை தந்த முன்னாள் மூதாவை உறுப்பினர் திரு ஈ. என்னிங்கராஜ் இம்மாணவர்களை நேரில் கண்டு சாரணர்கள், செயற்பாட்டை விபத்து தரம் மலையகத்தையும், சம்சுதீன் கல்முனையையும், பளீல் புத்தளத்தை

இராணிச் சாரணர் விருது பெற்ற உலக சாதனை நிலைநாட்டிய மூன்று சாரணர்களையும் இங்கு காணலாம்.

யாழ்மாவட்ட சாரண ஆணையாளர் சி. காந்தமூர்த்தி பேட்டி

சந்திப்பு: அபிராமிவரதன்

மிக்க, முரட்டுச் சுபாவம் உள்ள மாணவர்களை சாரணிய இயக்க செயற்பாடுகள் மூலம் நல்வழிப்படுத்தலாம் என்பது எனது அனுபவ உண்மை.

எனவே பெற்றோர் ஆசிரியர்கள் சிறுவர்களைச் சாரணீயத்தில் சடுபட ஊக்கம் அளித்தல் வேண்டும்.

எங்கும் தமிழ் எதிலும் தமிழ்

ஒரு காலத்தில் சாரணர்கள் சாரணிய பாடல்களை ஆங்கிலத்தில் பாடிவந்ததைக் கண்டு கவலை அடைந்தேன். சிராமப்புற மாணவர்கள் பலர் இப் பாடல்களைப் பாடச் சிரமப்பட்டனர்.

இதன் காரணமாக சாரணர் பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்தேன். இயற்றினேன். நாட்டுப்புறங்களில் பழக்கத்தில் இருந்த பாடல்களைத் தொகுத்தேன்.

'யாழ்ப்பாண மாவட்ட சாரணர் கீதங்கள்' என்ற தலைப்பில் அந்த நூலை முதன்முதல் தமிழில் வெளியிட்டேன். இதற்கென விருதும் கிடைத்தது

-இவ்வாறு திரு காந்தமூர்த்தி தனது கருத்துக்களை சஞ்சீவிக்கு வழங்கினார்.

சீன அன்மென் சதுக்கத்தில் ஒலித்தது ஒரு தமிழ்ப் பாடல்!

மனித சமுதாயம் முன்னேக்கி முன்னேக்கி ஓடிக் கொண்டிருக்கிறது. 20 ம் நூற்றாண்டின் அரசியல், சமுதாய, பொருளாதார முன்னேற்றத்தில் 1917இல் நடைபெற்ற ருஷ்ய ஒக்டோபர்புரட்சி ஒருதெட்டத் தெளிவான மைல்கல்லாகும். லெனின் தலைமையில் நடைபெற்ற இப் புரட்சிக்குப் பின்னர் உலகம் முன்னைப் போல இன்று முழுதாக மாறிவிட்டது.

வரலாற்றில் பொது மக்கள் யுகத்தின் ஆரம்பத்தை ருஷ்யப் புரட்சி கோடிட்டுக் காட்டியது.

ருஷ்யப் புரட்சியின் வழிவொற்றி ஏற்பட்டதே சீனாவின் வெப்புப் புரட்சி. உலகின் காலவரைந்த தொகையான மக்கள் வாழும் பெரியதோர் நாட்டில் தீவிர அரசியல் சமுதாய பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்திய இப் புரட்சிக்கு இன்றைய யுகத்தின் தலைசிறந்த மார்க்சிஸ லெனினிசவாதியான மாசேதுங் தலைமை வகித்தார்.

சீனப் புரட்சியின் ஓர் அங்கமாக நடைபெற்றதே சீனாவின் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாசாரப் புரட்சியாகும். 1966 ஆம் ஆண்டு தொடங்கிய இப்புரட்சி 1976ஆம் ஆண்டளவில் முடிவு பெற்றது.

சீனக் கலாசாரப் புரட்சியின் பேரிகை முழக்கம் உலகெங்கும் பார்வை சீனாவையும் மாசேதுங்கையும் நோக்கித் திரும்பியது உலகின் பல பாகங்களிலிருந்தும் நல்லெண்ணம் படைத்த மக்கள் சீனாவில் அப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருந்த மகத்தான பரிசோதனையை நேரிற் காண புரட்சி வேட்கையுடன் சென்றார்கள்.

கலாசாரப் புரட்சிக் காலம் முழுவதிலும் சீனாவின் தலைநகரான பீக்கிங்கில் வாழ்ந்து வேலை செய்யும் பாக்கியினேன்.

சீனாவில் வாழ்ந்த காலத்தில் நான் பெற்ற அனுபவங்கள் பலப் பல, சீனக் கலாசாரப் புரட்சியில் ஓரளவுக்கு நானும் பங்குபற்றினேன் என்றாலும் அது மிகையாகாது. சீனத் தொழிற்சாலைகளுக்கும், மக்கள் கம்யூன்களுக்கும், மக்கள் விடுதலைச் சேனைப் பிரிவுகளுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும், பாடசாலைகளுக்கும் சென்று சீனத் தொழிலாளர்களுடனும் விவசாயிகளுடனும், பேராசிரியர்களுடனும் மாணவர்களுடனும் ஓரளவுக்கு நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றேன்.

பீக்கிங் வானொலியின் தமிழ்ப்பகுதியில் ஒலிபரப்பு வேலையில் ஈடுபட்ட அதே காலத்தில் [illegible] சீனாவுக்கு [illegible] சென்ற நான் கலாசாரப் புரட்சிப் பேரலை ஓய்ந்த பின் 1981இல் பிற்பகுதியில் நாடு திரும்பினேன்.

வீ. சின்னத்தம்பி

கேட்டது. இந்தப்புரட்சி சீனாவைக் குலுக்கியது. ஏன், முழு உலகத்தையுமே குலுக்கியது. புதிய தோர் கம்யூனிஸ மனிதனை உருவாக்கும் பணியை சீனக் கலாசாரப் புரட்சி மனிதகுலத்தின் முன்னிலையில் முன்வைத்தது.

உலக மக்களின் ஆதரவு எனக்குக் கிடைத்தது. என் வாழ்வின் 15 ஆண்டுகளை நான் சீனாவிற் கழித்தேன். கலாசாரப் புரட்சியினால் ஆகர்சிக்கப்பட்டு சீனா சென்ற நான் கலாசாரப் புரட்சிப் பேரலை ஓய்ந்த பின் 1981இல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இப்படியே போவதெனில் இருப்பது யார் மிகுதி?

சமத்தின் பாடலிலே
கலைந்ததுவே கருதி
சமத்தின் பாதையிலே
பாயுதுவே குருதி
சமத்தின் வாழ்விலிலே
ஒற்றுமையைக் கருதி
இன்னார்களே எழுந்திடுங்கள்
வெற்றியிது உறுதி.

* * *

பருதியின் கரங்களிலும்
பளபளக்கும் குருதி
குருதியுடன் குலவிடுதே
இந்துமா வாரிதி
சமமங்கையவள் மேனியெலாம்
ஈனர்களால் புழுதி
தோழர்களே துடைத்திடுவோம்
துணிவுடனே வருதி!

* * *

இப்படியே போவதெனில்
இருப்பது யார் மிகுதி
அப்படியே சென்றிடுவோம்
எமக்குண்டு தகுதி
தமிழினமே சேர்ந்திடுவோம்
வேண்டாமே பகுதி
தம்பியரே சேர்ந்திடுவீர்
வெற்றிதான் விகுதி

-பா. கதிர்மகள்

வாசகர் வாசகம்

புதிய பஞ்ச சீலங்களை பிரசித்தப்படுத்தினால் என்ன?

17 1:87 சஞ்சீவியில் திரு கணேசலிங்கம் அவர்கள் 'இந்தியக் குழு இங்கு வரவேண்டும்' என்று எழுதியிருந்தார் அதைப் பலவழிகளாலும் வரவேற்றாதவேண்டும் என விரும்புகிறோம்.

அத்துடன் இந்த நாட்டிலே உரித்தான புதிய பஞ்ச சீலங்களான பொய், கொலை, வைதல், சித்திரவதை, கறுப்பு, வெள்ளை, சுவிசரித்தலும் ஆகியவற்றை அகில உலக பௌத்த நாடுகளுக்கு - பௌத்தர்களுக்கு ''லங்காபுரிஜு'' முதலிய மற்றும் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மூலம் அரசு விளம்பரப்படுத்துமா?

ஆட்சியில் உள்ளவர்களின் மனைவிமார், தாய்மார், சகோதரிமார் புத்திரிகள், உறவினர்கள், கற்பழிக்கப்பட்டால் இவர்களின் மனோநிலை எவ்வாறிருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்ப்பார்களா?

ராம எழுச்சித் திட்டத்தில் சிறிலங்காவில் 450 ராமங்களுக்கும் அதிமாகத் தோற்றுவித்துள்ளதை அகிலஉலகமும் அறியும்.

அதே நேரத்தில் வடமாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் எத்தனை ராமங்கள் அழிக்கப்பட்டன என்பதை உலகம் அறியுமா? அதை உலகுக்கு எடுத்துச் சொல்வது யார்?

இந்து சமய அபிவிருத்திக்கும் பெயருக்கு ஓர் அமைச்சர் இருக்கிறார்? எத்தனை எண்ணிக்கையான இந்துக் கோவில்கள் தரைமட்டமாக்கப்பட்டன? நிதியமைச்சு நிதியமிரியவளின்றி எத்தனை கோவில்கள் இருக்கின்றன? இவற்றின் கணக்கு அந்த அமைச்சருக்குத் தெரியுமா? தெரிந்தால் 'லங்காபுரிஜு' தொடர்பு சாதனங்கள் மூலம் உலகுக்கு அறியக் கொடுப்பாரா?

-ஒரு தமிழ் அன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையம் நிலைமை

குறுநாவல்

வி.எஸ்.சுப்பிரமணியம்

வேலை பறிபோனது

பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும், என்று முதுமொழி சொல்வார்களே அது எனது விஷயத்தில் எத்தனை தூரம் உண்மையானது என்று எண்ணத் தோன்றுகிறது. எனது வாழ்வில் ஏன் இப்படி அடுக்கடுக்காகச் சோதனைகள் ஏற்படவேண்டும்!

இன்றைக்கு எவ்வளவு உற்சாகமாக நெசவு நிலையத்துக்குப் புறப்பட்டேன். நெசவு நிலையத்தில் கூட நான் அளவுக்கு அதிகமாக யாரோடும் பழகுவதில்லை. நானுண்டு என் வேலையுண்டு என்று ஒதுங்கியிருந்து விடுவேன்.

தேநீர் இடைவேளை நேரம் நிலைய அதிபர் என்னைக் கூப்பிடுவதாகத் தகவல் வந்தது. முடித்துக் கொடுக்க வேண்டிய 'ஒடர்' எந்த அளவில் இருக்கிறது என்று கேட்கத்தான் கூப்பிடுகிறார் போல இருக்கிறது என்ற எண்ணத்தில் சென்றேன்.

அறைக்குள் நுழைந்த என்னை நிமிர்ந்து பார்த்த அதிபர், எதிரே உள்ள நாற்காலியைச் சுட்டிக் காட்டுகிறார். என்னவோ முக்கியமான விஷயம் போல இருக்கிறது என்ற எண்ணத்தோடு உட்கார்கிறேன். மௌனமாக ஒரு கடிதத்தை எடுத்து என்னிடம் நீட்டுகிறார். அந்தக் கடிதத்தின் முப்பில் கிராமச் சபையின் இலச்சினையும் பெயரும் அச்சடிக்கப்பட்டிருப்பதைப் பார்த்த போதே அந்த ஊர்ப் பெரிய மனிதர் செல்லப்பாதான் ஏதோ கிருதாளம் செய்கிறார் என்றுணர்க்க முடிந்தது

தரகர் செல்லப்பா இந்தக் கிராமச்சபையின் அங்கத்தவருங்கூட. கடிதத்தை மேலோட்டமாக வாசித்துப் பார்க்கிறேன்.

நான் ஒரு நடத்தை கெட்டவனாம். ஊரில் பல இளைஞர்களுக்கும் எனக்கும் தகராறு நடப்பதாகக் கிறதாம். அதனால் நான் இந்த நெசவு நிலையத்தில் இருந்தால் இங்கு வேலை செய்கிற மற்றப் பெண்களும் கெட்டுவிடச் சந்தர்ப்பம் ஏற்படலாமாம். எனவே, என்னை இந்த நெசவு நிலையத்தை விட்டு நீக்கி விடவேண்டுமாம்.

கீழே கிராம சபைத் தலைவரின் கையெழுத்து

வாசித்து முடித்ததும் தலையை நிமிர்த்தி அதிபரைப் பார்க்கிறேன். எனது கண்ணில் நிறைந்திருந்த கண்ணீரைக் கண்டதும் அதிபரின் கண்களும் கலங்குகின்றன

என்ன இருந்தாலும் அவரும் ஒரு பெண்ணல்லவா?

'இதனை நீங்கள் நம்புகிறீர்களா?' என்கிறேன் அமைதியாக

'உன்னை எனக்குத் தெரியாதா சாந்தி. நீ தூய்மையானவள் என்பதை நான் நம்புகிறேன் ஆனால்.....'

அதிபர் தயங்குகிறார்

'ஏன் தயங்குகிறீர்கள்? தயங்காமல் சொல்லுங்கள்,

'உனது மனதைப் புண்படுத்த வேண்டியிருக்கிறதே என்பதுதான் எனக்குக் கவலையாயிருக்கிறது'

பரவாயில்லை இது ஏற்கனவே புண்பட்டுப் புண்பட்டு வைரம் பாய்ந்து விட்ட இதயம்; தயங்காமல் சொல்லுங்கள்' நான் எதையும் எதிர்கொள்ளுகிற மனதினையிருக்கிறேன்.

'சாந்தி, உனக்குத் தெரியும். இது கிராமச் சபையின் உதவியுடன் நடைபெறுகிற நெசவு நிலையம். அவர்களின் சொல்லுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டியிருக்கிறது எனவே உன்னைத் தொடர்ந்தும் இங்கே வேலைக்கு வைத்துக் கொள்ள முடியாதிருக்கிறது'

அதிபர் பேசி முடித்து நீண்ட பெருமூச்சு விடுகிறார்

நான் அமைதியாகக் கூறுகிறேன்.

'இதை நான் எதிர்பார்த்தேன்

'என்னை மன்னித்துவிடு சாந்தி'

'பலமான வார்த்தைகள் நான் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது!

அதிபர் என்னை ஆதரவோடு நோக்குகிறார்.

'நான் நீதி நேர்மைக்குப் பயப்படுகிறவள் சாந்தி! நீதிவிளக்படி நீ குற்றமற்றவள் என்று தெரிந்தும் கையாலாகாத தன்மையோடு உனக்குத் தண்டனை அளிக்க வேண்டியிருக்கிறதே!'

நான் மௌனமாக எழுந்து கொள்கிறேன்.

இரு என்று கைமாரித்துகிறார் அதிபர் 'இதோ பார் சாந்தி! நீ இன்று வந்து சந்தி முடிந்த உதவியைச் செய்யக் காத்திருக்கிறேன்.

அதிபர் பெருமூச்சு விடுகிறார்.

கொஞ்ச நாட்கள் பழகிய பழக்கத்தில் அந்த அம்மாள் என் மீது வைத்திருக்கும் அன்பையும், மரியாதையையும் எண்ண மகிழ்ச்சியால் மனது பூரிப்படைகிறது

என்ன!

என் மகன் கண்ணனுக்கு வாங்குகிற பாலுக்கான பணத்துக்குக் கூட இனிமேல் அப்பாவின் கையைத்தானே எதிர்பார்த்து நிற்கவேண்டும் என்பதை நினைக்க மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது.

வீட்டிற்குப் போய் என்னை வேலையிலிருந்து எற்ற எண்ணம் மேலோங்குகிறது.

எல்லாவற்றையும் நினைத்துப் பார்க்க ஒரு கணம் உயிரைப் போக்கிக் கொள்ளலாமா! என்ற எண்ணம் தலை தூக்குகிறது மறு கணமே என் கண்ணனின் நினைவு மேலோங்கி என் எண்ணங்களையெல்லாம் சிதறடிக்கிறது. நான் எப்படியாவது வாழ்ந்தாகவேண்டும் என் மகன் கண்ணனுக்காக எந்த அவமானத்தையும் சகித்து கொண்டாவது வாழ்ந்தாகவேண்டும் எதிர்காலம் என் மனக்கண்முன் குவியமாகத் தெரிகின்றது

வீட்டிற்குப் போன என்னால் எதையும் நிம்மதியாகச் சிந்திக்க முடியவில்லை. தலையை விண்விண் என்று வலிக்கிறது. படுக்கையில் விழுந்து தூங்க முயல்கிறேன்

முடிந்தால் தானே!

மாலை மங்கி வருகிறது. மெல்ல எழுந்து தோட்டத்துப் பக்கம் செல்கிறேன். கொஞ்சநேரம் அமைதியாக உலாவினாலாவது மனதுக்குக் கொஞ்சம் ஆறுதலாயிருக்குமென்ற எண்ணம்

அடுத்த காணியில் தேவன் ஏதோ செய்து கொண்டிருப்பது கண்ணில் படுகிறது

தேவனும் என்னைக் கண்டுவிட்டான்

'எப்படி மச்சாள்!' என்கிறான் தூர நின்றபடியே நானும் ஏதாவது பேசவேண்டுமே என்ற எண்ணத்தில் ''ஏதோ இருக்கிறேன் தேவன்! அது சரி நீ என்ன இப்போது ஆளே மாறிவிட்டாய் போல இருக்கிறது. முன்பெல்லாம் இந்தத் தோட்டப் பக்கமே வராதவன் இப்போது தோட்டத்தில் இறங்கி வேலை செய்ய ஆரம்பித்து விட்டாயே! அதிசயம்தான்'

பேசப் பேச என் மனதின் பாரங்கள் குறைந்து துயர நினைவுகள் எங்கோ விலகுவதுபோல உணர்கிறேன். தேவன் என்னை நிமிர்ந்து பார்த்துவிட்டு-

'மச்சாள், மனிதர்கள் எப்போதும் ஒரே மாதிரியாகவா இருக்க வேண்டும். கொஞ்ச நாட்களாக ஒரு மன நிலை. யாருடைய சோலி சுறட்டுக்கும் நான் போவதில்லை அப்பாவுக்கு உதவியாய் என்னாலானதைச் செய்கிறேன்'

தேவனின் இந்த மாற்றத்தைக் காண மனது சந்தோஷப்படுகிறது. கொஞ்ச நேரம் அவனோடு கதைத்துவிட்டு வீட்டிற்குத் திரும்பு

> நான் ஒரு நடத்தை கெட்டவளாம்.. அதனால் நெசவு நிலையத்திலிருந்தால் மற்றப் பெண்களும் கெட்டு விடுவார்களாம்..

கிறேன்

கூடத்தைத் தாண்டி உள்ளே காலடி எடுத்து வைத்த என்னை அம்மாவின் பிளாக்கணம் அதிர்ச்சியடைய வைக்கிறது. அப்பா திண்ணைக் குந்தில் அமர்ந்திருக்கிறார். தங்கச்சி லலிதா சற்றுத் தள்ளி சத்வருகே நிற்கிறாள்.

'கொஞ்சம்கூட மானரோசம் வேண்டாமோ இவளுக்கு இதனாலே தானே நெசவு நிலையத்தில் கூட ஒழுக்கங் கெட்டவளுக் கெல்லாம் இங்கை வேலை தர முடியாது என்று கூறி அனுப்பி விட்டாங்கள்' அம்மா கூப்பாடு போடுகிறாள்

நெசவு நிலையத்தில் வேலை போன செய்தியை நான் யாருக்குமே சொல்லவில்லையே. அப்படியென்றால் எப்படியோ அதற்குள் இரண்டொரு மனித்தியாலங்களுக்குள் செய்தி இவர்களுக்கு வந்துவிட்டது. அப்படி அக்கறையாக இங்கு யார் சொல்லியிருக்கிறார்கள்.

அம்மாதான் மீண்டும் சத்தம் போடுகிறார்;

யாரோ சொன்னார் கணென்று லலிதா வந்து சொன்னாள். இதைச் சாந்தி என்னட்டைச் சொல்லவில்லையே! என்று நினைச்சுத்தான் சாந்தியைத் தேடினன். அவளைக் காண இல்லை; அப்போ லலிதா சொன்னாள்

'மச்சாள், மனிதர்கள் எப்போதும் ஒரே மாதிரியாகவா இருக்க வேண்டும். கொஞ்ச நாட்களாக ஒரு மன நிலை. யாருடைய சோலி சுறட்டுக்கும் நான் போவதில்லை அப்பாவுக்கு உதவியாய் என்னாலானதைச் செய்கிறேன்'

தேவனின் இந்த மாற்றத்தைக் காண மனது சந்தோஷப்படுகிறது. கொஞ்ச நேரம் அவனோடு கதைத்துவிட்டு வீட்டிற்குத் திரும்பு

தோட்டத்தில் தேவன் அந்தாரோடை கதைக்கக் கொண்டு நிக்கிறான்...'

என் நெஞ்சு பதறுகிறது. எப்படி முடிக்கப் போடுகிறாள் அம்மா. ஒரு பெற்ற தாயே தன் மகளைப் பற்றி இப்படி நினைக்கிறாளென்றால், யாரை யார் தோக முடியும்?

அம்மாவின் கூப்பாடு இன்னும் ஒய்ந்தபாடாயில்லை

'ஆண்டவா! இந்த வீட்டில் இன்னும் என்ன என்ன கிழியனங்கள் நடக்கப் போகுதோ? நான் இன்னும் ஒரு குமரை வைத்துக் கொண்டு கரை சேர்க்க வழி அறியாமல் நடு மாறுகிறேனே!... அவனும் இவனுமாய் என்ன திட்டம் போட்டானோ? அப்படுறதைச் கருட்டிக்கொண்டு இரவோடிரவாக எங்கேயாவது ஓடி போய் விடுவோம் என்று திட்டம் போட்டார்களோ?'

அம்மாவுக்குச் சற்பனை வளம் அதிகம். எப்படியெல்லாம் சிந்திக்கிறார்

என் மூளை கூட அம்மாவின் பேச்சைக் கேட்ட பின் தீவிரமாகச் சிந்திக்கிறது இனிமேல் இந்த வீட்டில் வாழ முடியாது. இனி இந்த வீட்டில் இருந்தால் உண்மையில் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்.

என்னிடம் ஓடி வந்த கண்ணனைத் தூக்கிக் கொண்டிருக்கிறேன்

மௌனமாக வாசலைக் கடந்து வெளியேறுகிறேன்.

நான் படலையைத் திறந்துகொண்டு வெளியே போவதைக் கண்ட லலிதா அம்மாவிடம் சொல்வது காதில் விழுகிறது

'அம்மா, அக்கா கண்ணனையும் தூக்கிக் கொண்டு எங்கேயோ போகிறா'

அப்பாவின் பேச்சுக் கூட இலேசாகக் காதில் விழுகிறது. 'இப்பதான் உண்மை கடுது. எங்கை யாவது போகட்டும் விட்டுத்தொலையுங்கோ!'

—நான் தேவனின் வீட்டை நோக்கிப் போகிறேன்.

(அடுத்த வாரம் முடியும்)

அத்தியாயம் பதின்மூன்று

காட்டுகிறார். என்னவோ முக்கியமான விஷயம் போல இருக்கிறது என்ற எண்ணத்தோடு உட்கார்கிறேன். மௌனமாக ஒரு கடிதத்தை எடுத்து என்னிடம் நீட்டுகிறார். அந்தக் கடிதத்தின் முப்பில் கிராமச் சபையின் இலச்சினையும் பெயரும் அச்சடிக்கப்பட்டிருப்பதைப் பார்த்த போதே அந்த ஊர்ப் பெரிய மனிதர் செல்லப்பாதான் ஏதோ கிருதாளம் செய்கிறார் என்றுணர்க்க முடிந்தது

தரகர் செல்லப்பா இந்தக் கிராமச்சபையின் அங்கத்தவருங்கூட. கடிதத்தை மேலோட்டமாக வாசித்துப் பார்க்கிறேன்.

நான் ஒரு நடத்தை கெட்டவளாம். ஊரில் பல இளைஞர்களுக்கும் எனக்கும் தகராறு நடப்பதாகக் கிறதாம். அதனால் நான் இந்த நெசவு நிலையத்தில் இருந்தால் இங்கு வேலை செய்கிற மற்றப் பெண்களும் கெட்டுவிடச் சந்தர்ப்பம் ஏற்படலாமாம். எனவே, என்னை

வரை செய்த வேலைக்குரிய சம்பளம் இதோ. இதை எடுத்துக் கொள்'

வேண்டா வெறுப்புடன் பெற்றுக் கொள்கிறேன் வீபர்வை வழிய நான் பாவு அடித்து வேலை செய்ததற்குரிய சன்மானமல்லவா?

என் மேல் உனக்குக் கோபமா சாந்தி?

நான் மௌனமாகத் தலையாட்டுகிறேன்

'சாந்தி! நீ என் பெண் மாதிரி; தனி பட்ட முறையில் எந்த நேரத்தில் என்ன உதவி தேவையோ தயங்காமல் என்னை

விடை பெற்றுக்கொண்டு வீட்டிற்குப் புறப்படுகிறேன்.

இனி என் எதிர்காலம் என்ன? என்ற கேள்வி பூதாகாரமாக மனக்கண்முன் எழுந்து நிற்கிறது

என் வருமானத்தைக் கொண்டு நான் வாழ்க்கையை ஓட்டுகிறேன் என்ற துணிவில் தானே நேற்றுவரை அம்மா அப்பாவுடன் இப்படியெல்லாம் நடந்து கொண்டேன். அவர்களை எடுத்தெறிந்து பேசினேன்.

இனிமேல் என் நிலை

நீக்கிவிட்டார்கள் என்று சொல்லப் போகிறேன். ஏன் என்ற கேள்வி எழும். அதற்கு என்ன பதில் என்னால் கூற முடியும்? கடவுளே!

என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறாய்! இல்லை... உன் மீது பாரத்து என்ன பயன்? இதற்கெல்லாம் காரணம் மனிதர்கள்; மனிதன் என்பவன் தெய்வமாவதும் தான் வாழுகிற வழியினால் என்கிறார்களே! இங்கே மனிதர்கள் வாழுகிற முறையால் நாயினும் கீழாக வல்லவா வாழ்கிறார்கள்

எப்போதும் ஒரே மாதிரியாகவா இருக்க வேண்டும். கொஞ்ச நாட்களாக ஒரு மன நிலை. யாருடைய சோலி சுறட்டுக்கும் நான் போவதில்லை அப்பாவுக்கு உதவியாய் என்னாலானதைச் செய்கிறேன்'

தேவனின் இந்த மாற்றத்தைக் காண மனது சந்தோஷப்படுகிறது. கொஞ்ச நேரம் அவனோடு கதைத்துவிட்டு வீட்டிற்குத் திரும்பு

ஞானக் கருத்து சூனியமானது ஏன்?

ஐயரின் கருத்துக்கு அஞ்சாமல் கண்டனம்!

பண்டிதமணி என்றதும் அவர் கண்டனக்காரர் என்பது கற்றவர் மத்தியில் வழங்கிய பட்டம்.

அவர் எதையும் காரணமின்றிக் கண்டிக்கவில்லை. செய்தக்க செய்யாமையானும் கெடுமெனக்கண்டு, செய்ய வேண்டியதை அவர் இவர் என்று பாராமல் செய்தவர். முன்னர் பேராசிரியர் சேறுப்பிள்ளை நான்முகற் பயந்த என்னும் தொடரை நான்முகன் பயந்த என்று எழுதியதை இலேசாகக் கண்டித்தவர்.

ஆறுமுக நாவலரவர்கள் தம்மைத் தடுத்தாட்கொண்டருளிய தமது குருமணியாகிய முருகப்பெருமான் திருவருளை முன்னிட்டு 1851 ஆம் ஆண்டளவில் திருமுருகாற்றுப்படை என்னும் நூலைத் தமது விளக்கக் குறிப்புகளோடு பதிப்பித்தவர் பின்னர் 1887 ஆம் ஆண்டை அடுத்து உ.வே. சாமிநாதஐயர் அவர்கள் பத்துப்பாட்டென்று ஒன்று உண்டென்றும் அதன்கண் திருமுருகாற்றுப்படை முதலாகப் பத்துப் பாட்டுக்கள் உண்டென்றும் நாளடைவில் அறிந்து அவற்றை அருமையாகப் பதிப்பித்தவர்.

விட்டுப் பிராணியாய கோழி சாதாரண பறவையல்ல. சக்தி இயல்பினதில் கோழியைப் பற்றி அருமையாகப் பாடிய புலவர் ஒருவரின் இயற்பெயர் மறைய அவர் வைரவன்ட 'குப்பைக் கோழி' என்னும் தொடரின் நயம் காரணமாக அவர் குப்பைக் கோழியார் என வழங்கியவர்.

அது நிற்க—

முருகப்பெருமானின் கொடியில் நின்று கவும் சேவல் வீரர்களை நடுங்கவைப்பது. சாதாரண கோழிப் பண்ணைகளிலே ஒரு சேவல் பன்னிரண்டு கோழிகளுக்குத் தலைவனாய் வகை சொல்வதைக் கண்டறியலாம். சேவல்

பண்டிதமணி வரலாறும் காலமும்

சிறகை அடித்தால் அதற்கு வலிமை வந்தெய்தும். முருகனின் சேவல் பகைவர்களை வரவேற்று வென்று பணிவைப்பது இக்கருத்தையே நக்கீரர் 'கோழி யோங்கிய வேன்றடு விறற்கொடி' என்று நயங்கொழிப்பத் திருமுருகாற்றுப்படையில் பாடியுள்ளார்.

ஐயர் அவர்கள் பெரியவர் மகாமகோபாத்தியாயர். தட்சிணாய கலாநிதி. வெள்ளைக்காரப் பெரியவர்கள் அவர் பெருமையைக் கண்டு பட்டமளித்தமை பெரும் பேறு இந்தப் பெறலரும் பரிசிலும் பார்க்கப் பெரும்பரிசு மூவேந்தர்கள் இருந்திருந்தால் கொடுத்திருப்பார்கள்

'கோழியோங்கிய வென்றடு விறற்கொடி' என்றே தந்துள்ளார். இன்னும் முருகப்பெருமானிடம் பெறலரும் பரிசாகிய பேரருளினை அவாவி நின்றவனை ஆற்றுப்படுத்திய நக்கீரனின் தொடர் 'புலம் புரிந்துதறியும் செலவு' இதையே நாவலரவர்கள் வெகுவாக நயந்து எல்லோரும் எப்போவோ பதித்தவர் இது இவ்வாறாக ஐயரவர்கள் 'புலம் புரிந்துதறியும் செலவு' எனப் பதித்தமை ஞானக்கருத்தைச் சூனியமாக்கி விட்டது என்பது பண்டிதமணி அவர்களின் பாரம்பரிய மரபுக் கருத்து.

இனி என்ன செய்வது? கண்டிக்காமல் இருந்து கொள்ள முடியாமல்

க.சி.குலரத்தினம்

என்று பாரதியாரே போற்றியுள்ளார்

பண்டிதமணியவர்களும் ஐயரவர்களின் தமிழ்நடைக்குத் தலை வணங்கி, அவர் எழுதிய வசன நூல்கள், கட்டுரைகள், முகவுரைகள் எல்லாவற்றையும் எழுத்தெண்ணிப் படிக்குமாறு மாணாக்கர்களுக்குப் பணிப்பது வழக்கம்.

பாரம்பரிய மரபுக் கருத்து

இத்தகைய புரம் பூத்த ஐயர் அவர்கள் தாம் பதித்த பத்துப்பாட்டில் கண்டித்தார். எப்போது கண்டித்தார் என்றால் தமது ஆரியப் பயிற்சிக்கு ஆயத்தப்படுத்திய காலத்திலே ஈரப்பசை வளவு வாழ்வுக் காலத்திலே எழுதிற் தள்ளினார். இந்துசாதனம் என்னும் நாளில் எழுதிய கண்டனங்களின் பிரதிகளை உடனுக்குடன் ஐயரவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள்.

கண்டனங்கள் எழுதுவதற்குத் திறமை வந்துற்றபோதிலும் தாம் ஒரு பொடிப்பிள்ளை, ஐயரவர்களோ மிகவும் பெரியவர் என்பதையுன்னி நாணிக்கோணி, எழுதியவற்றைப் பொன்னம்பல தேசிகர் என்னும் பெரியவர் பெயரில் வெளிப்பட்டார்.

பொன்னம்பல தேசிகர் ஆறுமுக நாவலரவர்களுக்கு அணுக்கத் தொண்டரும் அருமையாகச் சமைந்து உணர்ட்டியவருமாவர்.

ஒரு சமயம் பண்டிதமணியவர்கள் தமது இளமைக்காலத்தில் தந்தையாரின் இறுதிக் கடனில் அஸ்தி கரைப்பதற்குத் தமிழ் நாட்டுக்குச் சென்று, தமது சிறிய பாட்டனாராய வேற்பிள்ளை உபாத்தியாயரவர்களைத் சிதம்பர தரிசனஞ் செய்யச் சென்றிருந்த

ஞர்க்கு அமைவானவை ஆனால் சித்தாமணியின் முதற்பதிப்பு வெளிவந்த காலம் வேறு, அடுத்த காலங்கள் வேறு.

[illegible] பதிப்புக்காக ஐயரவர்கள் படாத பாடுகள் பட்டுத் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகள் எங்குஞ் சென்று பழைய சமணப் பெரியார்களின் இல்லங்கள் தோறும் சென்று அறிந்து சுட்டிய கருத்துக்கள் அநேகம்

சித்தாமணி ரசனையில் அக்காலத்தில் தலை சிறந்த விளங்கியவர் வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை. இவர் ஆறுமுகநாவலரவர்களின் தமக்கையாரின் மைந்தர் தம் மாணாக்கரும் மருகருமான இவரின் ரசனையில் நாவலர் அவர்களே வெகுவாக ஈடுபட்டு இன்புறுதல் வழக்கம் ஐயரவர்கள் சித்தாமணியைப் பாற்படல் என்றும் அதன் ஆழத்தை அறிந்த மற்தார மல்லயே வித்துவ சிரோமணி என்றும் பாராட்டி அந்நூலின் முதற்பிரதியையும் இவருக்கு அன்பளிப்பாக அனுப்பியவர்.

ஈழகேசரி

வித்துவ சிரோன்மணி அவர்களின் பாரம்பரியத்தில் கவிநா ரசனை பழுத்த பண்டிதமணி அவர்களுக்கு ஐயரவர்களின் முதற்பதிப்பு என்னவோ வாயிருந்தது அந்தக் காலத்திலேதான் குரும்பிட்டிப் பொன்னையா வள்ளல் தமது ஈழகேசரி என்னும் இனிய சஞ்சிகையை ஆரம்பித்தார். வள்ளல் பொன்னையா தமது பத்திரிகையில் பண்டிதமணி அவர்களுக்கு 'கலம்' அமைத்துக் கொடுத்தமை, அவர் பாணம் தொடுப்பதற்குக் 'கலம்' அமைத்தமை போலாயிற்று

ஈழகேசரி வாரந்தோறும் சாமிநாதையா அவர்களுக்கு அனுப்பி வைத்தார். ஐயரவர்கள் கண்டனங்களைக் கருத்தூன்றிப் படித்து, மடித்து வைத்தார் ஒரு முறை பத்திரிகை

(6 ஆம் பக்கம் பார்க்க)

நோய் தீர்க்கும் பனங்கிழங்கு

பனங்கிழங்கு மிகவும் சக்தி நிறைந்த உணவாகும் பனங்கிழங்கை நினந்தோறும் சாப்பிட்டு வந்தால் தேகம் உறுதி பெறும்.

மேனிக்கு அழகு கொடுக்கும்.

அத்துடன் மேக ரோகம் வெண்வெட்டு, நீர்க்கடுப்பு, சரும நிற மாற்றம் போன்ற நோய்களை நீக்கும் அப்படிப்பட்ட ஆற்றலும் இதற்குண்டு

ஆகவே நன்றாக முற்றிய பனங்கிழங்கை தண்ணீர் ஊற்றி அடுப்பில் வேக வைத்து எடுத்து இரண்டாகப்பிளந்து நன்றாகக் காயவைத்து, தூர் போக இடித்து எடுத்த தூள் ஐந்து பலம், வாக்மினதூள் அரைப் பலம், மஞ்சள்தூள் கால் பலம், வெள்ளைக் குங்கிலியம் கால் பலம் இவற்றை எல்லாம் ஒன்றாகக் கலந்து பசுவின் நெய் விட்டு நாற்பது நாள் காலை மாலை இலந்தைப் பழம் அளவு சாப்பிட்டு வந்தால் மேல் குறிப்பிட்ட நோய் தீரும்.

கடுமையான வயிற்று வலி, உணர்ச்சல் போன்ற நோய்களுக்கு பனங்கிழங்குத் தூள் இரண்டு பலம், கசாகசா அரைப் பலம், அடுகாய்ப்பூ கால் பலம் இவற்றை கத்தமான தேனில் கலந்து சாப்பிட்டு வந்தால் சீத பேதி, இரத்தபேதி, மூலாதாரச்சூடு போன்ற நோய்கள் குணமாகும்.

கரப்பன் நோய் உள்ளவர்கள் பனங்கிழங்கின் தூளுக்குச் சம எடை நிலாவாகைத் தூளைக் கலந்து சிற்றாமணக் கெண்ணெயில் குழப்பி தொடர்ந்து 20 நாள் காலை மாலை சாப்பிட்டு வந்தால் கரப்பன் விஷ நீர், சொறி சிரங்கு, ஆகு தகுணம் போன்ற நோய்கள் நீங்கி சுகம் கிடைக்கும்.

பச்சை ஓடியல் மாவை எடுத்து தலை அரியல், கை அரியல் போன்ற அரியலுக்குப் போட்டு வந்தால் நல்லது. தேகத்திலுள்ள கெட்ட நீரை இழுக்கும் சக்தியும் இதற்குண்டு

முதிர்காலத்தில் அரியல் போன்றவைகை நோய்க்கு பச்சை ஓடியல் மாவைப் பாவிப்பார்கள்.

மருந்து சாப்பிடும் போது புளி புளை பாவிக்காய் முதலியன பாவிக்காமல் இருப்பது மிகவும் நன்று.

இப்பொழுது பனங்கிழங்கு 'சீசன்' தொடங்கி விட்டது. ✶

வாரியார் கருத்து

மேடைப் பேச்சாளராக விரும்புகின்றீர்களா?

அதற்கு திருமுருக கிருபானந்தவாரியார் பின்வருமாறு தனது கருத்தைச் சொல்கின்றார்.

உண்மையையும் நன்மையையும் நிதானமாகவும் இனிமையாகவும் சலனமற்ற சந்தர்ப்பம் அறிந்து ஆழ்ந்த சிந்தித்துப் பேசு.

— முயன்று பாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபூரண ஞானம் பரிணமித்தாலே பரிசுத்த ஆத்மாவுக்கு விடுதலை!

ஆத்மாவைப் பற்றி இன்னுமொரு விஷயம் ஆங்கிலத்தில் இவ்விஷயங்களைப் படிப்பவர்களுக்கு ஆத்மா, மனது என்ற வார்த்தையில் குழப்பமுண்டாகிறது. நாம் மனது என்று குறிப்பிடுவதை அவர்கள் ஆத்மாவென்று சொல்லுகிறார்கள் சுமார் இருபது வருஷங்களுக்கு முன், சமஸ்கிருத தத்துவ சாஸ்திரங்களிலிருந்து அறிந்து கொண்டதற்கு முன், அவர்களுக்கு ஆத்மாவைப் பற்றித் தெரியாது.

மனமும் ஆத்மாவும்

உடலுக்கு மேம்பட்டது மனம். ஆனால் மனம் ஆத்மாவல்ல. மனம் சூட்சும சரீரமா

பகுதி நான்கு

யிருந்தது. பிறந்து, இறக்கிறது மனதுக்கு மேல் ஆத்மா இருக்கிறது. ஆத்மா என்ற பதத்திற்கு ஆங்கிலத்தில் சரியான வார்த்தை இல்லை. எனவே ஆத்மாவென்ற வார்த்தையையே உபயோகப்படுத்துவோம். ஆத்மாவென்பது மனதிலிருந்தும் உடம்பிலிருந்தும் வேறுபட்டதென்பதைநீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் ஆத்மா மனமாகிய சூட்சும சரீரத்துடன் பிறந்து இறக்கிறது. உரிய காலத்தில் ஞானத்தைப் பெற்று, பூரணத்வத்தை யடைந்தால் பிறப்பு இறப்பிலிருந்து விடுதலை பெறுகிறது. அதற்கு மேல் அது மனமாகிய சூட்சுமசரீரத்தை வைத்துக்கொள்ளலாம் அல்லது அதை விடுத்து நித்திய சுதந்திரத்துடன் வாழலாம்.

ஆத்மாவின் லட்சியம் முக்தி அல்லது விடுதலை இது நம் மதத்தின் தனிக் கொள்கையல்ல நம் மதத்திலும் கவர்க்கங்களும் நரகங்களும் இருக்கின்றன. ஆனால் அவை என்றும் அழியாதவையல்ல அவற்றின் இயல்பின்படி அவை வேறுவிதமாக இருக்கமுடியாது.

கவர்க்கம் என்று ஒன்றிருப்பதாக இருந்தால் அது உலகத்தைவிடக் கொஞ்சம் அதிக சுகமுள்ளதாகவிருக்கலாம். ஆனால் அது மனித ஆத்மாவுக்குக் கெடுதலைத் தான் உண்டாக்கும். ஆத்மாதிரி சுவர்க்கங்கள் பல இருக்கின்றன. பயனை எதிர்பார்த்து நற்காரியங்கள் செய்கிறவர்கள் இச்சுவர்க்கங்களில் இந்திரர்களாகவோவேறு தேவர்களாகவோ பிறக்கிறார்கள். இப்பெயர்கள் தனி நபர்களின் பெயர்கள் அல்ல. பலவிதமான நிலைகளின் பெயர்கள். ஆயிரக்கணக்கான இந்திரர்கள் இருக்கலாம். நஹுஷன் என்பவன் ஓர் அரசன். அவன் இறந்து இந்திரனானான் அது ஒரு பதவி. ஒருவன் இந்திரப் பதவியை அடைந்தால், அங்கு சில காலம் இருந்த பிறகு இறந்து மறுபடியும் மனிதனாகப் பிறப்பான். எல்லாவற்றிலிருந்தும் உயர்ந்தது மானிடப் பிறவிதான்

சில தேவர்கள் சுவர்க்க இன்பத்தை விடுத்து உயர்ந்த நிலையை அடையப் பிரயத்தனம் செய்யலாம் ஆனால் உலகத்திலுள்ள செல்வம் முதலியவற்றைப் போல் சுவர்க்கத்தின் இன்பமும் பெரும் பாண்மையான தேவர்களைத் தாழ்த்தி விடுகிறது. எனவே, தங்கள் நற்கருமங்கள் தீர்ந்ததும் அவர்கள் மறுபடியும் இப்புவியில் மானிடராகப் பிறக்கிறார்கள்.

உயர்ந்த வாழ்க்கை

இவ்வுலகம் கர்ம பூமியாகவிருக்கிறது இங்கு தான் மனித ஆத்மா முக்தியடைய முடியும். எனவே கவர்க்கங்கள் கூட நாம் வேண்டத்

வீரத்துறவி விவேகானந்தர்
யாழ்நகரில் ஆற்றிய உரை

தரந்தனவல்ல அதை விட உயர்ந்தது முக்தி—விடுதலை மிக மேலான கவர்க்கங்களில் இருப்பவர்களும் அடிமைகளாகத் தான் இருப்பதாக நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன தேவலோக சுகத்திற்கு அடிமையாகி, மரணத்திற்குட்பட்டு இருபதினாயிரம் வருஷம் அரசளுகிறார்களாலும் தான் என்ன பயன்? வெளி இயற்கை, உள்இயற்கை—இவைகளின் பந்தங்களிலிருந்து விடுபட்டிருப்பதே மிக உயர்ந்த வாழ்க்கை. இயற்கை நம் காலில் விழுந்து நமது அடிமையாகவிருக்க வேண்டும் அதற்குமேல் உடல் இல்லை; ஆதலால் சாவுமில்லை; உடலைப் பற்றிய தாழ்ந்த சந்தோஷமும் இல்லை ஆதலால் துக்கமும் இல்லை ஏசற்ற அந்நிலையே மாசற்ற பரிபூரணமான ஆனந்தம் வழங்கும் நிலை இங்கு நாம் சந்தோஷம் என்று சொல்வது அந்த நித்தியப் பேரின்பத்தில் ஓர் அணுவென்று சொல்லலாம் அவ்வெல்லையற்ற பேரின்பமே நமது லட்சியமாகும்

ஆத்மா ஆணுமல்ல பெண்ணுமல்ல ஆண் பெண் வேறுபாடு உடலைச் சார்ந்தது. இக்கருத்துக்கள் ஆத்மாவிற்குப் பொருந்தா. அவ்விதமே வயதும். அதற்கு வயது கிடையாது அது நித்தியமாகிறது. அது எப்படி உலகில் தோன்றிற்று? இதற்கு நம் சாஸ்திரங்களில் ஒரு பதில் தான் உண்டு; — அறியாமைதான் அதன் வீழ்ச்சிக்குக் காரணம். அறியாமையின் மூலம் தான் நாம் கண்டுண்டிருக்கிறோம் அறிவு நம் பந்தங்களைப் போக்கும்.

சமயம்

இந்த ஞானத்தை எவ்விதம் பெறமுடியும்? அன்பின் மூலமும் பக்தியின் மூலமும் பெறலாம் கடவுள் மனித உள்ளங்களிலே குடிகொண்டிருக்கிறார் கடவுள் குடிகொண்டிருக்கும் கோவில்களாக நினைத்து எல்லா உயிர்களையும் வழிபடுவதன் மூலம் இந்த ஞானத்தைப் பெறலாம் ஆழ்ந்த அன்பிலிருந்து ஞானம் பிறக்கும். ஞானத்தால் அறியாமை மறையும். அதுடன் நம் பந்தங்கள் அகன்று ஆத்மா விடுதலை அடையும்.

கடவுளைப்பற்றி நம் சாஸ்திரங்களில் இரண்டு கருத்துக்களிருக்கின்றன:—ஒன்று ரூபக் கடவுள்; இரண்டாவது. அரூபக் கடவுள் கடவுளை ரூபமாக வழிபடும்போது அவனை சர்வசக்தி வாய்ந்தவனாகவும், இவ்வுலகை ஆக்கிக் காத்து அழிப்பவனாகவும், சகல ஜீவராசிகளுக்கும் அளவற்ற கருணையுடன் தந்தையும் தாயுமாயிருந்து காப்பாற்றுபவனாகவும் நினைக்கிறோம். அவனை அணுகி அவனுடன் வாழ்வதே முக்தி. கடவுளை அரூபமாக வணங்கும்போது அவனை மேற்குறித்த குணங்களுடையவனாக நினைப்பதில்லை. அங்கிங்கெனாதபடி எங்கும் இயங்கும் சக்தியாக அவனை நினைக்கிறோம். அவனை அறிவுள்ளவன் என்று சொல்வதற்கில்லை; ஏனெனில் அறிவென்பது மனிதனுக்கே பொருந்தும் அவனிடம் வாதமும் தர்க்கமும் இல்லை ஏனெனில் இவை பலவீனத்தின் அறிகுறிகள் அவன் உண்டாக்குகிறான் என்று சொல்ல முடியாது; ஏனெனில் விரும்பப் பற்றுகளும் விருப்பமும். குறையும் இருப்பவர்கள்தான் உண்டாக்குவார்கள் அவனுக்கு விரும்பப்பற்றுகள் ஏது? விருப்பம் ஏது? குறை ஏது? வேதங்களில் 'அவன்' என்ற வார்த்தை கூட உபயோகப்படுத்தப்படவில்லை; ஏனெனில் அவ்வார்த்தை கடவுள் ஆண்பால் என்ற தவறான பொருளைக்கொடுக்கலாம் ஆதலால் 'அது' என்ற பதமே உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. இவ்வழிபாட்டு முறைக்கு அத்வைதம் என்று பெயர்.

கடவுளும் நாமும்

நமக்கும் இவ்வரூபக் கடவுளுக்குமுள்ள சொந்தம் என்ன? நாம்தான் அவர் நாமும் அவரும் ஒன்று. எல்லா உயிர்களுக்கும் அடிப்படையாக நிற்கிறவனும் பரம் பொருளின் தோற்றங்களே நாம் யாவரும். இந்த எல்லையற்ற பரம் பொருளிலிருந்து நம்மை வேறாக நினைப்பதே துக்கத்திற்குக் காரணம். முக்தி அல்லது விடுதலையென்பது அதனுடன் ஐக்கியமாவதுதான். கருக்கமாகச் சொன்னால், இவைதான் கடவுளைப் பற்றி நம் சாஸ்திரங்களிலுள்ள இந்த கருத்துக்கள். இன்கு சில விஷயங்கள் சொல்ல வேண்டும். கடவுள் அரூபியாக எல்லா உயிர்களிலும் இருக்கிறார் என்ற கருத்தத்தான் நீதி சாஸ்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

பகத்சிங்கின் வீரத்தோற்றம் இளைஞர்கள் இதயங்களில்

ஏனைய இருவரும் சிரித்துக் கொண்டிருக்கும்போதே தூக்குப் பலகையை அதிகாரிகள் தட்டி விட்டனர். கொடியில் தொங்கும் சுமைக் காய்கள் போல நியாக மாமங்களின் உடல்கள் தொங்கின. சமுத்தறுக்கப்பட்ட சேவற்கோழிகள் போல் அந்த இளம் சிங்கங்களின் உடல்கள் துடி துடித்தன.

மூவரும் தூக்கிலிடப்பட்ட செய்தி அறிந்தவே லாகூர் முழுவதும் பரவி விட்டது புரட்சி ஓங்குக! ஏகாதிபத்தியம் ஒழிக! கோஷங்கள் வானைப் பிளந்தன. இரவிரவாக மக்கள் வீதிகளில் காணப்பட்டனர் பொழுது புலர்ந்தது தான் தாமதம். சன சமுத்திரம் லாகூர் தெருக்களில் கரை புரண்டது.

தேசமக்கள் அனைவரும் அன்பையும் மதிப்பையும் பகத்சிங் பெற்றிருந்ததை ஆட்சியாளர்கள் கண்டு பயந்திருப்பர் பகத்சிங் நீடூழி வாழக என்ற கோஷம் எங்கும் கேட்டது. வந்தே மாதரம் என்ற மந்திரத்திற்குப் பதிலாக புரட்சி ஓங்குக, புரட்சி நீடூழி வாழக என்ற மந்திரம் தேசிய இயக்கத்தில் மந்திரமாக முதன் முதல் கோஷித்தவர் பகத்சிங்தான்.

பகத்சிங் பெயரைச் சொல்லாத மக்களே கிடையாது. அவரது தோற்றம் ஒவ்வொரு வாலிபனது இருதயத்திலும் பதிந்திருந்தது இத்தகைய ஒரு மனிதரோடு நடக்க இருந்தது தங்களை வரவேற்கச் சிறந்த ஏற்பாடு செய்யப்பட்டு வந்தது. இவ்வாண்டு காங்கிரஸ் தங்களை வரவேற்க ஆடம்பரம் எதுவும் வேண்டாம் என்று காந்திஜி தந்தி கொடுத்தார். 'பகத்சிங் அமரராகிவிட்டார் அவருடைய பிரியவால் இன்று கோடிக் கணக்கானவர்கள் துயருறுகின்றனர் அந்த இளம் தேச பக்தர்களின் வீரத்தையும் தியாகத்தையும் மனதாரப் பாராட்டுகிறேன்' என்று அறிக்கை விட்டார் மகாத்மாஜி.

1931 மார்ச் 29 இல் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் மூவர் தூக்கிலிடப்பட்டதைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆம் மாநாட்டில் காந்தி அடிகளும் நியாகத்தையும் மனதாரப் பாராட்டுகிறேன்' என்று அறிக்கை விட்டார் மகாத்மாஜி.

இலங்கையிலும் அவர் மரணம்
கேட்டுத் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது

போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்கள் பகத்சிங்கின் வீரத்தைக் கண்டு தலை தாழ்த்தினர். மார்ச் மாதம் கராச்சியில் காங்கிரஸ் மாநாடு

பகத்சிங் வீரவரலாறு

கள், ஜவஹர்லால் நேரு, மாளவியா போன்ற அகில்சா வாதிகள் அரசாங்கத்தை வன்மையாய் கண்டித்துப் பேசினர். பொதுக்கூட்டங்கள் ஆங்காங்கே நடைபெற்றன. வெள்ளையனே வெளியேறு!; வந்தே மாதரம் புரட்சி ஓங்குக! என மக்கள் கோஷங்களை எழுப்பினர். பாரத தேசம் முழுமையாக, அகிம்சாவாதிகள் அனைவரும் பகத்சிங் பகத்சிங் என்ற மந்திரத்வரலாறுமறைச் சொல்லி விடுதலை வேண்டினர். 1947 தேர்தலில் பகத்சிங் புகழ்பாடி தமிழ் பேசும்

புதுமொழி

மக்களைத் தட்டி எழுப்பினர். அன்றும் சரி இன்றும் சரி பகத்சிங் விடுதலை வேண்டும் மக்களின் தெய்வமாக, கலங்கரை விளக்காகக் கொள்ளப்படுகிறார்.

பகத்சிங் தூக்கிலிடப்படுவதற்குச் சிலமணி நேரத்துக்கு முன் தன் தம்பிகுஞ்தாருக்கு அவர் எழுதிய கடிதம் அவர் மரணடபின் சில தினங்களில் கிடைத்தது அக்கடிதம் வடிப்போர் உள்ளத்தை உருக்கும்; உணர்ச்சியைப் பெருக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய விடுதலை வரலாற்றில் இளந்தலைமுறையினருக்கு கெல்வாம் விடிவெள்ளியாகத் திகழ்ந்தவர் பகத்சிங் அவரது மரணத்தின் பின் அவரது இல்லம் அவரது குடும்பம் அனைத்தும் இந்திய அரசால் கௌரவிக்கப்பட்டு வருகின்றது

சுமார் 45 ஆண்டுகளுக்குப்பின் பின்னரும் இன்றும் பகத்சிங் வீர வரலாறு எம்மவராலே எழுதப்பட்டும், படிக்கப்பட்டும் வருவதற்கு பகத்சிங் வீரமும் தீரமுமே காரணம்.

அத்தகைய பகத்சிங்கின் உடன்பிறப்பு-இளைய சகோதரியும் அவர் குடும்பத்தினரும்பஞ்சாப்படுகொலையினராவ் பதம் பார்க்கப்பட்டுள்ளனர் பயங்கரவாதிகள் ஆயுதங்களுடன் சகோதரி சகுந்தலா வீட்டிற்குச் சென்று தாக்கியதில் படுகாயமடைந்த சகுந்தலாவும் பகத்சிங்கின் மாமனாரும் மரணமானார்கள்

பஞ்சாப்பில் நியாகி பகத்சிங் குடும்பத்திற்கும் இந்தக் கதிதானா?

பயணத்தால் வந்தவர் கதியாலைப் பிடுங்கினர்!

யாழ் மேல் நீதி மன்றத்தில் கைமோசக் கொலை வழக்கு அன்றைக்கு விசாரணைக்கு இருந்தது.

சடுதியாக ஏற்பட்ட கோபத்தினால் தாக்கிய போது நிகழ்ந்த கொலை அரச சட்டத்தரணி

தண்ணீர்ப் பங்குப் பிரச்சினை
உயிர் குடித்த சம்பவம்

தனது ஆரம்ப உரையை நிகழ்த்தினார்.

'இறந்தவர் எதிரியின் உறவினர். திருகோணமலையில் கடை வைத்திருந்தார். இருவருடைய வீடுகளும் அருகாமையே இருந்தன எதிரியின் வளவில் இருக்கும் கிணற்றுக்கு இறந்தவருக்குத் தண்ணீர்ப் பங்கு, வழி வாய்க்கால் உரிமை இருந்தது இறந்தவர் இகலாதசமயம் பார்த்து எதிரி பாதையை அடைத்து விட்டார்.

சம்பவம் நிகழ்வதற்கு முதல் நாள் எதிரிக்கும் இறந்தவரின் மனைவிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது அடுத்தநாள் திருகோணமலையில் இருந்து வந்த கணவனிடம் முதல் நாள் நடந்தசம்பவத்தை மனைவி முறையிட்டார்

உடனே அவர் பாதையில் நடப்பட்ட வேலிக் கதிகாலையைப் பிடுங்கும் போது எதிரிவந்து மனைவிப்பிடியாக இறந்தவரைத் தன்னிடம் தாக்கி செய்யும் நோக்கம் இருக்கவில்லை. சடுதியில் ஏற்பட்ட கோபத்தினால் தன்நிலை மறந்து உணர்ச்சி வசப்பட்டுத் தாக்கினார். எனவே குற்றச் சாட்டுப்பத்திரம் திருத்தப்பட்டு கைமோசக் கொலைக்குப் பதில், கடுங் காயம் விளைவித்த குற்றமாக மாற்றப்படல் வேண்டும்'

இக்கருத்தை ஏற்க மறுத்த அரச சட்டத்தரணி சாட்சிகளை அழைத்தார்.

முதலாவது சாட்சி இறந்தவரின் மனைவி. சம்பவம் நிகழ்ந்த அன்று காலை இறந்தவர் திருகோணமலையிலிருந்து வந்ததாகவும் வந்தவுடன் பாதை அடைத்ததைப் பற்றித் தான் அவரிடம் சொன்னபோது அவர் உடனே போய்க் கதியாலைப் பிடுங்கியதாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஞர். அடுத்தநாள் மாலை அவர் இறந்து போனார்.

இது ஒரு கைமோசக் கொலையாகும்'

இந்தச் சந்தர்ப்பத்தில் எதிரியின் சட்டத்தரணி குறுக்கிட்டார்,

'கனம் நீதிபதி அவர்களே! எதிரிக்குக் கொலை வரும் நோக்கம் இருக்கவில்லை. சடுதியில் ஏற்பட்ட கோபத்தினால் தன்நிலை மறந்து உணர்ச்சி வசப்பட்டுத் தாக்கினார். எனவே குற்றச் சாட்டுப்பத்திரம் திருத்தப்பட்டு கைமோசக் கொலைக்குப் பதில், கடுங் காயம் விளைவித்த குற்றமாக மாற்றப்படல் வேண்டும்'

இக்கருத்தை ஏற்க மறுத்த அரச சட்டத்தரணி சாட்சிகளை அழைத்தார்.

முதலாவது சாட்சி இறந்தவரின் மனைவி. சம்பவம் நிகழ்ந்த அன்று காலை இறந்தவர் திருகோணமலையிலிருந்து வந்ததாகவும் வந்தவுடன் பாதை அடைத்ததைப் பற்றித் தான் அவரிடம் சொன்னபோது அவர் உடனே போய்க் கதியாலைப் பிடுங்கியதாகவும் பிடுங்கும்போது எதிரி மண்வெட்டிப் பிடியால் தாக்கியதாகவும் சொன்னார் அடிபட்ட இடத்தில் வீக்கம் ஏற்பட்டு அதற்குத் தான் என்னைப் பூசியதாகச் சொன்னார் அடுத்தநாள் மாலை வலி ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக அந்த அவர் மரணமானார்.

இந்த வழக்கில் முக்கிய சாட்சி பிரேதபரிசோதனை நடத்திய டாக்டர்.

அவர் தனது சாட்சியத்தில் இறந்தவரின் தலைப்பின் குதியில் ஒரே ஒரு காயம் இருந்ததாகச்

நீதிமன்றத்திற்கு வந்த உண்மைச் சம்பவம்

சொன்னார். அந்த இடத்தில் பெரிய வீக்கம் இருந்ததாகவும் உள் காயத்தினாலே நரம்பும், தசையின் உட்பகுதியும் பாதிக்கப்பட்டு அவை மரணத்தை ஏற்படுத்தின என்றார். எதிரியின் சட்டத்தர

★ வில்வம் பகுதி

கோணமலையில் இருந்து வந்ததாகவும் வந்தவுடன் பாதை அடைத்ததைப் பற்றித் தான் அவரிடம் சொன்னபோது அவர் உடனே போய்க் கதியாலைப் பிடுங்கியதாக மனைவி முறையிட்டார் அவர் மண்வெட்டியால் தாக்கியதாகவும் வலி ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக அந்த அவர் மரணமானார்.

இந்த வழக்கில் முக்கிய சாட்சி பிரேதபரிசோதனை நடத்திய டாக்டர்.

அவர் தனது சாட்சியத்தில் இறந்தவரின் தலைப்பின் குதியில் ஒரே ஒரு காயம் இருந்ததாகச் சொன்னார். அந்த இடத்தில் பெரிய வீக்கம் இருந்ததாகவும் உள் காயத்தினாலே நரம்பும், தசையின் உட்பகுதியும் பாதிக்கப்பட்டு அவை மரணத்தை ஏற்படுத்தின என்றார். எதிரியின் சட்டத்தர

ஐந்து மாதக் கருவும் ஒரு பயணிதான்.....

பெண் சாரதியின் வயிற்றினுள் இருக்கும் ஐந்து மாதக் கருவும் ஒரு பயணிதான்

இப்படிக் கலிபோர்னியா நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்தது

வாகனப் போக்குவரத்து நெருக்டியைச் சமாளிக்க கலிபோர்னியாவில் அதிக பயணிகளை ஏற்றிக் கொண்டு செல்லும் கார்கள் ஓட அனுமதி விதிகள் உள்ளன

இவ்விதிகளில் ஒரு நபர் செல்லும் கார்களுக்கு அனுமதி இல்லை.

இதை மீறி ஒரு பெண் குறிப்பிட்ட விதியால் தனது காரை ஓட்டிச் சென்று விட்டார். போக்குவரத்துப் பொலீஸார் அப் பெண்மீது வழக்குத் தொடர்ந்தனர்.

குற்றவாளி என்று காணப்பட்டு பெண்ணுக்கு 52 டாலர் அபராதம் விதிக்கப்பட்டது

இதை எதிர்த்து அப் பெண் அப்பீல் செய்தார். குற்றம் புரிந்த சமயம் அப்பெண் 5 மாதக் கர்ப்பிணி. 5 மாதக் கருவும் கலிபோர்னியா சட்டப்படி ஒரு பயணிதான். ஆகவே போக்குவரத்துச் சட்ட விதிகளை அப்பெண் மீறவில்லை இப்படிக் கூறி பெண்ணுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை அப்பீல் நீதிமன்றம் ரத்துச் செய்தது.

அப்பீல் நீதிமன்றத் தீர்ப்பைப் பொலீஸார் கண்டித்திருக்கின்றனர்.

"ஒருபெண் சாரதியை எப்படி கர்ப்பிணி என்று கண்டுபிடிப்பது? உடைகுள் தலையணையை வைத்துக் கட்டிக் கொண்டு சென்றால் என்ன செய்வது? இப்படிக் கலிபோர்னியா பொலீஸார் கூறுகின்றனர்.

பஞ்சாமிர்தம் பலாச அமிர்தம்

ஏழைக்குப் பரிசு

ஒருமுறை மகாத்மா காந்திஜி ரயில் பெட்டியின் வாயிற்படி அருகில் நின்று கொண்டிருந்தார். வண்டி நகர்ந்து விட்டது. மகாத்மாவின் செருப்புகளில் ஒன்று கழன்று தண்டவாளத்திற்கு அருகில் விழுந்து விட்டது உடனே அவர் குனிந்து தனது மற்றக் காலச் செருப்பையும் எடுத்துக் கீழே விசினார். வியப்புற்ற ஒரு சகபயணி இதுபற்றி விளக்கம் கேட்டபோது, 'தூக்கி எறியும் ஏழைக்கு இப்போது ஒரு ஜோடி செருப்புக் கிடைக்குமே!" என்றார்.

★

மரகதமே, வைரமே! பெண் உருப்பெற்றாயா?

பெண்ணே கண்ணே என்று மட்டுமல்ல, மரகதமே, வைரமே என்றும் அழைப்பது வழக்கம்.

ஆனால் பெண்ணின் வயிற்றினுள் உண்மையில் வைரங்களும் மரகதங்களும் இருந்துவிட்டால்... .

கண்காணிப்பாளர் அதிகாரிகள் தான் அப் பெண்ணை அழைத்துச் செல்வர்.

அப்படி ஒரு பெண் அழைத்துச் செல்லப்பட்ட சம்பவம் மிலான் விமான நிலையத்தில் நடந்தது.

பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த அப்பெண்ணின் பெயர் மகதலேனா பிரீ.

கனிஸ் நாட்டில் உள்ள ஸுரிச் விமான நிலையத்தில் இருந்து இப்பெண் விமானம் மூலம் மிலானில் வந்து இறங்கினார்.

விமான நிலையத்தில் உள்ள சுங்கத்திணைக்கள அதிகாரிகள் இப்பெண்ணை வழமையான பரிசோதனைக்கு உட்படுத்தினர். அப்போது அப்பெண்ணின் போக்கில் மாற்றத்தைக் கவனித்த அதிகாரிகள், அவளை எக்ஸ்ரே பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

அப்பெண்ணின் வயிற்றினுள் வைரத்துண்டுகளும் மரகதக் கற்களும் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

சந்திர சிகிச்சை மூலம் அவை வெளியே எடுக்கப்பட்டன

10,999 வைரக் கற்கள், 217 மரகதக் கற்கள்—இவை சின்னஞ்சிறு பார்சல்களாக அவளின் வயிற்றினுள் இருந்து எடுக்கப்பட்டன.

சின்னஞ்சிறு பார்சல்களாக இவள் விழுங்கிக் கொண்டாள்.

இப்படி விழுங்கிக் கொண்ட வைரம், மரகதம் ஆகியவற்றின் பெறுமதி தெரியுமோ!

இலங்கைப் பணத்தில் சுமார் 4½ கோடி ரூபாய் (11 லட்சம் பிரேஸில் பவுன்)

மாணவர்

ஒரு தத்துவப் பேராசிரியர் பார்ப்பதற்கு மிகவும் விகாரமாக

ஹிட்லரும் ஜோசியரும்

ஹிட்லருக்கு ஜோசியத்தில் அதிகளவு நம்பிக்கை இருந்ததில்லை இருந்தும் ஒரு தடவை ஒரு ஜோசியரைச் சந்தித்தபோது "நான் எப்போது இறப்பேன்?" என்று தமாஷாக கேட்டு வைத்தார்.

அதற்கு அந்த ஜோசியர் "யூதர்களின் விடுமுறை நாளன்று நீர் இறப்பீர்?" எனப் பதிலிறுத்தார்

"யூதர்களுக்கு எல்லாக்கு விடுமுறை!" என மீண்டும் ஹிட்லர் கேள்வியைப் போட்டார்

அதற்கு "நீங்கள் இறக்கும் நாளன்றுதான் யூதர்களுக்கு விடுமுறை" என்று குறும்பாகப் பதில் சொன்னார் ஜோசியர்.

★

மனோநிலை அறிந்தவர்

இருப்பார். கலிலூரியில் அவர் புதிய வகுப்பொன்றுக்குச் சென்று பாடம்கற்பிக்க வேண்டி இருந்தது.

வகுப்பறைக்குள் நுழைந்தார். மாணவர்களை நோட்டம்விட்டார். பின்னர் உரத்த குரலில் பின்வருமாறு கூறினார்

"மாணவர்களே, என் உருவம் விநோதமாக இருக்கிறது என்று எனக்கு நன்கு தெரியும் என்னைப் பார்த்துச் சிரிப்பதற்காக உங்களுக்கு ஐந்து நிமிடங்கள் கொடுக்கிறேன். பின்னர் பாடத்தைக் கவனிப்போம்."

சலசலத்த வகுப்பு மாணவர்கள் இதனைக் கேட்டு 'கப்சிப்' என்று இருந்தனர்.

★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தாளத்தோடு லயித்தவர்

பாவத்தோடும் நடித்தார்

சதுர்க்கச்சேரிகளிலும், நாடகமேடைகளிலும் பார்த்த மத்தளமே மிருதங்கம் என்றுமி, இசைக்கச்சேரி மேடைகளை அலங்கரித்த ஆரம்ப காலகட்டத்திலே நான் கத்தர்மடம் திரு. எம். என். செல்லத்துரை யவர்கள் நம்மவர்களுக் அறிமுகமானார்.

கத்தர்மடம் செல்லத்துரை என்றால் அது மிருதங்கம் செல்லத்துரையாகவே இருக்கும். கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பகுதிநேர மிருதங்க விரிவுரையாளரான அவரைச் சந்தித்தேன்.

அவரிடம் கேட்ட சில வினாக்களும் அவரறிந்த பதில்களும் வருமாறு.

வினா:- மிருதங்கவாத்தியத்தில் உங்களுக்கு நாட்டமேற்படக் காரணமென்ன?

விடை: இந்திய நாட்டிலிருந்து இங்கு வருகை தந்த பெருங்கலைஞர்களின் கச்சேரிகளை அடிக்கடி கேட்டு வந்ததால் அதில் விருப்பம் ஏற்பட்டது.

வினா: அந்தக் காலத்திலேயே சிறந்த தவில் வித்துவான் எனப் புகழ் பெற்ற திரு காமாட்சி சுந்தரம் அவர்களுக்கும் உங்களுக்குமிருந்த தொழில் வழி உறவு என்ன?

விடை: ஆரம்பத்திலே நான் கஞ்சிராவைக் கச்சேரி மேடைகளில் உண்டா?

விடை: பத்துப் பன்னிரண்டு நாடகங்களில் படிக்கும் போது நடித்திருக்கிறேன். நாடகத்தில் மட்டுமல்ல சினிமாவிலும் நடித்திருக்கிறேன்.

வினா: படத்தின் பெயரி?

விடை: ராமநாதன்; நான் மிருதங்க வித்துவானாகவே அதில் நடித்திருந்தேன்.

வினா: நீங்கள் யாரிடம் மிருதங்கம் கற்றுக் கொண்டீர்கள்?

விடை: இந்தியாவில் பிரபல மிருதங்க வித்துவான் நாகபட்டினம் திரு சொக்கலிங்க தேசிகர் அவர்களிடம் இக்கலையைப் பயின்றேன். இதற்காக சுமார் ஐந்து வருடங்கள் வரை அவருடனேயே இருந்தேன்.

வினா:- தரமான நடன நிகழ்ச்சிகள் என்று கருதக்கூடிய எவற்றிலாவது பங்குகொண்டு மிருதங்கம் வாசித்திருக்கிறீர்களா?

விடை:- ஏன் இல்லை? திரு ஏ சுப்பையா அவர்களின் சில நிகழ்ச்சிகளிலும் இப்போது திரு. என். விரமணி ஐயர் அவர்களது தயாரிப்புக்களிலும் பங்கேற்று வருகிறேன்.

வினா:- உங்கள் வாழ் நாளில் என்றுமே மறக்க முடியாதபடி அமைந்துள்ள தாளவாத்தியக் கச்சேரியென்று எதைக் குறிப்பிடலாம்?

விடை - பொதுவாகப் பதானவாத்தியக் கச்சேரிகள் சிறப்பாக அமைந்திருந்தாலும்புகழ் பெற்ற தவில் வித்துவான் நாச்சியார்கோவில் வடிவேலனோடும் நானும் பங்குபற்றி முதன் முதலாக தனியேயும், மிருதங்கத்தையும் கூட்டுச் சேர்ந்து சுமார் இரண்டு மணி நேரம் வாசித்து பலரின் பாராட்டுப் பெற்றது மறக்கமுடியாதது.

வினா:- உங்களைப் பாராட்டி அளிக்கப்பட்ட பட்டங்கள் என்று எவற்றைக் குறிப்பிடுகிறீர்கள்?

விடை:- நல்லை-ஞான சம்பந்தர் ஆதீன மன் (7 ஆம் பக்கம் பார்க்க)

மிருதங்கம் செல்லத்துரை

மிருதங்க மாமணி எம். என். செல்லத்துரை பேட்டி

சந்திப்பு: ஏ. நமசிவாயம்

சிறுவர் சோடி

கல்வி பற்றிய கருத்துரைகள்

ஒரு செடி வளர்வதற்கு என்னென்ன தேவையோ அதைப்போன்று மனிதன் பண்பாட்டைப் பெறுவதற்குக் 'கல்வி' அவசியம். —ரூஸோ

நான் கற்பிப்பது 'கல்வி' அறிவையல்ல. அறிவை அறியும் அறிவையே. —ஆனல்ட்

'கல்வி' கற்றவரை எளிதிற் திருப்பலாம் ஆனால் ஏமாற்ற முடியாது. எளிதில் ஆளலாம், ஆனால் அடிமைப்படுத்த முடியாது. - புரோவா

கற்றல் என்பதும் 'கல்வி' என்பதும் வாசித்து படித்து, சிந்தித்து மனதில் புதுக் கருத்துகளை உருவாக்குவதாகும். —செஸடர் மீல்டு

பல காலமாய்த் தன் மனதில் புதைந்திருக்கும் ஞானத்தை வெளிப்படுத்துவதே 'கல்வி' யாகும் —சுவாமி விவேகானந்தர்

'கல்வி' என்பது ஆற்றைப் போன்றது எவ்வளவுக்கு எவ்வளவு இது ஆழமாயிருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு இது சந்தடியின்றி அமைதியாக இருக்கும். —எலி பேக்கன்

செல்வி. தயாளினி அம்சதேவா
(யாழ் இந்து மகளிர் கல்லூரி)

உலகிலே 'கல்வி' முக்கியமானது மட்டுமல்ல; அதிசயமான மாற்றங்களையும் உண்டுபண்ணக் கூடியதாகும் — ஜே. ரஸ்கினின்

'கல்வி'க்காக உயிரைத் தியாகஞ் செய்பவன் என்றும் இறப்பதில்லை —முகமது நபி

செ. ஜெயக்குமார்
(மானிப்பாய் இந்துக் கல்லூரி)

இது தெரியுமா?

✱ பெரிரூலியம் எரிந்து மதி செய்யும் நாடுகளின் அமையம் ஆன ஒபெக் அமையம் எப்போது நிறுவப்பட்டது? யாரின் தலைமையில் இது முதலில் இருந்தது?

1960 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மன்னர் வபாவின் தலைமையில் (சவுதி அரேபிய மன்னர்)

✱ செஞ்சிலுவைச்சங்கம் எப்போது உருவாக்கப் பட்டது?

1863 ஆம் ஆண்டு உருவாக்கப் பட்டது

✱ இலங்கை நாரணர் இயக்கம் எப்போது நிறுவப்பட்டது?

1908 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது

✱ இது யாரினால் நிறுவப்பட்டது?

பேடன் பவர் பிரபுவினால்.

✱ எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை சர்வதேச சாரணர் பேரணிக் கூட்டம் நடைபெறும்?

4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்.

✱ பொதுநலவாய அமையத்திலிருந்து விலகி உள்ள நாடுகள் எவை?

பர்மா, நென்னுபிரிக்கா

✱ ஐக்கியநாட்டுக் கல்வி விஞ்ஞான பண்பாட்டுத் தலைமை அமையம் எங்குள்ளது?

பாரிசிலுள்ளது.

✱ சர்வதேச நீதிமன்றம் எங்குள்ளது? அதில் எத்தனை நீதிபதிகள் கடமையாற்றுகின்றனர்?

நெதர்லாந்திலுள்ள ஹேக்கு நகரிலுள்ளது, அதில் 15 நீதிபதிகள் கடமையாற்றுகின்றனர்.

✱ மலேசியா எப்போது சுதந்திரம் பெற்றது?

1957 ஆம் ஆண்டு.

✱ பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் கிளப்பர் எத்தனையாம் ஆண்டு பதவி ஏற்றார்?

(1978 ஆம் ஆண்டு)

சொற்சிலம்பம்

போட்டி இல. 54



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி: _____

_____

வயது: _____

விலாசம் _____

_____

ஒப்பம் _____

போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்

இடமிருந்து வலம்	மேலிருந்து கீழே
1 ஜனனதினம்	1 உதவக்கூடியது
4 முடி	2 சேனைத் தலைவன்
5 நல்ல நாள்	3 அரசு
6 சமாச்சாரம்	4 மனைவிக்கும் குடும்பத்துக்கும் பொருந்துவது
7. அமைதியை விரும்புபவர்	5. நறுமணம்
9 கதை	8. வணங்கு
10 சாமரை	9 நிச்சயதார்த்தம்
11 ஆமோதித்தல்	11. உடை
12. மண்டபம்	13. ராஜேந்திர பிரசாத்தை இப்படியும் அழைப்பர்
15 சுவை	14 பாவிக் இருந்த பெறப்படுவது.
16. தமிழகத்தின் காப்பிய காலத்தை முதலாகக் ஒன்று	

சொற்சிலம்பம் இல. 52 விடைகள்

இடமிருந்து வலம்	மேலிருந்து கீழே
1 உத்தியோகம் 4 மா, 6 தலைப்பு 8. தருமி, 10 பலவர் 12 வாசம், 14 சமத்(சமதம்), 15. தரை 16 மனம், 17. முறம், 18. ஏர, 19 சதி 20 போதும்.	1. உத்தரவாதம், 2 திருப்பம், 3 கனி 5 குரு, 7 புகை, 8 தர்மம், 9. மிருதங்கம், 11. வசனம், 13 சரர, 16 மறதி, 17. முக(முகம்), 18 ஏது?

சொற்சிலம்பம் இல. 52 பரிசு பெற்றவர்கள் விபரம்

முதலாம் பரிசு:- திரு. வே. குமாரசுவாமி, பரமானந்தர்வளவு, அத்தடி அம்மன் கோவிலடி, காரவெட்டி மேற்கு, காரவெட்டி.

இரண்டாம் பரிசு:- செல்வன். க. தினகரன், மே/பா. P. கணபதிப்பிள்ளை, "சக்தி" விளக்கு வைத்த குளம், ஒயற்தை.

மூன்றாம் பரிசு:- திருமதி. மகேஸ்வரி கிருஷ்ணவிங்கம், ஆறுமுகம் வீதி, கன்னாகம்.

✱ பரிசு பெற்றவர்களுக்கு உரிய பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும் நேரில் எவரும் வரவேண்டியதில்லை.

எனக்குத் தெரிந்தது எல்லாம்

ஆர்மோனியமும் சத்தமும்தான்!

இப்படிச் சொல்பவர் இளையராஜா

''எனக்குத் தெரிந்ததெல்லாம் ஆர்மோனியப் பெட்டியும் அதிலே இருந்து வரும் சத்தமும்தான் இசை பெரிய விஷயம். அது என்ன ஏதுன்னு எனக்குத் தெரியலே''

இப்படிச் சொன்னவர் இசை உலகில் இன்று ராஜாவாக இருக்கும் இளையராஜா.

இருபது வருடங்களுக்கு முன் பண்ணைப்புரம் கிராமத்தைவிட்டு ஆர்மோனியப் பெட்டியுடன் சென்னைக்கு வந்தவர் இன்று இசையுலகில் சாதனையை ஏற்படுத்தியுள்ளார். 'சிந்து பைரவி' யில் இவர் அமைத்த இசை இவருக்கு அரிய இந்திய ரீதியில் புகழ் தந்திருக்கிறது

எழுத்தாளர் பாலகுமாரனின் கேள்விகளுக்கு இவர் அளித்த பதில்கள் சுவையாக உள்ளன.

கேள்வி: சங்கீதப் பயிற்சி இல்லாமல் இசை அமைக்க முடியுமா?

பதில்: நல்ல சங்கீதப் பயிற்சி உள்ளவர்களுக்கு ட்யூன் போடத் தெரியணும்கிற அவசியம் இல்லை. ட்யூன் போடத் தெரிந்தவங்களெல்லாம் சங்கீதப்பயிற்சி முடிச்சுட்டாங்கிறது அர்த்தமுமில்லை

கேள்வி: 'சிந்து பைரவி' படத்துக்கு ட்யூன் போடும்போது கூட்டம் அதிகம்னு நீங்க போய் விட்டதாக கேள்விப்பட்டோமே!

பதில்: நீங்க கதை எழுதும்போது சுற்றவர கூட்டம் இருந்தால் எழுதமுடியுமா? முடியாதில்ல? காட்சி விவரம் சொல்ல டைரக்டர் இருந்தால் போதும் ட்யூன் போடறப்போ கொஞ்சம் தனிமை வேணும்

கேள்வி; உங்கள் வெளி நாட்டு பயணக் கட்டுரைகளில் உணவு சம்பந்தமாக ஒன்றும் எழுதலையே.

பதில்: பசிக்குத்தாங்க சாப்பாடு. ருசிக்கு அல்ல. உலகத்திலேயே எத்தனையோ பிரதான விஷயம் இருக்கு. எப்படிச் சாப்பாட்டைப்பத்தி எழுதறது

கேள்வி: எதிலே ருசி இருக்கு?

பதில்; புகழ்ல இருக்கிற ருசி, பணத்திலே இருக்கிற ருசி, பெண்மேலே இருக்கிற ருசி இதெல்லாம்போயிங்க ஆனா மெல்ல மெல்ல போகும்கிற நம்பிக்கை இருக்கு

கேள்வி: இசையிலேஒரு ஆசையோடு மூழ்கியோ நீங்க?

பதில்: நான் இசையை ஹொனஸ்டா செய்யறேன். பணம், புகழ் வருது வைச்சுக்கறேன். ஆர்மோனிய பெட்டியை தோளில் மாட்டிக்கிட்டு கிராமம் கிராமமாக சுத்தினவன்தானே நான். இப்ப என் பாட்டு சத்துது. நான் பாட்டுக்காரன் இது என் வேலை

(தொகுத்து எழுதியவர்:- வில்வம் பசுபதி)

நளினி பற்றி நாலு வார்த்தைகள்

நளினி, முதலில் நடித்து வெளிவந்தபடம் 'உயிருள்ளவரை உஷா' என்றும், முதலில் நடிக்க ஒப்பந்தமான படம் 'தோடிராகம்' என்றும் பலர் நினைக்கின்றார்கள்

உண்மையில் நளினி அதற்கு முன்பே ஆனந்தி என்ற பெயரில் ராஜுவ வீரன் படத்தில் நடித்து விட்டார்.

நடன மாஸ்டர் 'வைக்கம்' மூர்த்தியின், மகளான இவர் தான் எட்டாம் வகுப்புவரை மட்டுமே படித்தேன் என்று வெளிப்படையாகச் சொல்கிறார் அவ்வளவுக்கு நளினி ஒரு வெகுளியாக உள்ளார்

வெள்ளித்திரை

வாழ்வின் . . .

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தும்

வெகுவிரைவாக பொருளாகக் கொண்டவர் வெற்றி பெற்றதாக இதிகாசமில்லை 'ஆத்திரகாரனுக்குப் புத்தி மந்திமம்' என்பது அனுபவ ரீதியிலான உண்மை கோபம் செயற்பாட்டில் நெருப்புக்குச் சமம் என வள்ளுவர் கருதுகின்றார் ஆனால் கோபம் நெருப்பிலும் கொடியது என்றும் கூறலாம் நெருப்புத் தன்னைத் தொடுபவரை அழிக்கும் ஆனால் கோபத்தைப் பொருளாகக் கொண்டவர் தன்னைச் சார்ந்தவர்களின் உறவை அழிப்பதோடு தன்னையும் அழிக்கின்றார்.

கோபம்

ஒருவருக்கு கோபம் ஏற்படும் பொழுது உடலில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. இரத்தோட்டம் துரிதப்படுகின்றது நரம்புகள் புடைக்கின்றன மனநிதானம் தடுமாறுகின்றது. இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ச்சியாக ஏற்படுவதால் உற்றார் உறவினர், அயலவர் ஆகியோரிடமிருந்து அன்னியப்படுவதோடு, நரம்புத்தளர்ச்சி, இருதய நோய் போன்றவற்றிற்காளாகி இறுதியில் அகால மரணமெய்தவும் வழி வகுக்கின்றது

இன்னுசொல்

எல்லாவித மனக்குறைபாடுகளால் ஏற்படும் கேடுகளைப் போன்ற கேட்டை விளைவிக்கக் கூடியது இன்னுசொற்பிரயோகம் இனிய சொற்களைப் பாவித்து இன்பம் பெறலாம் நல்ல இனிய சொற்களைப் பாவிப்பதற்கு செலவு ஏதுமில்லை ஆனால் அவைகளுக்கு பெறுமதி அதிகம். நல்ல சொற்களை இருக்க வல்சொற்களை பாவிப்பது நல்லவைகளைத் பழகுவிருக்க காய்கனி உண்பதற்குச் சமமாகும். எனவே தெரிந்து அளந்து பேசும் பழக்கம் ஒருவர் உத்தமராவதற்கு உதவும்.

மதங்கள் காட்டிய வழிகளும், மதத் தலைவர்கள் வாழ்ந்து காட்டிய வழிகளும், மக்கள் வாழ்வில் வெற்றிபெற உதவுவதாகத்தானிருக்கின்றன ஆனால் அவை உரிய முறையில் உபயோகிக்கப்படாமை தோல்விக்கும் துயரத்திற்கும் மூலமாக அமைந்திருக்கின்றது. ✱

சீன அன்மென்...

(3ம் பக்க தொடர்ச்சி)

கலந்துரையாடும் எண்ணற்ற சந்தர்ப்பங்களும் எனக்கு ஏற்பட்டன.

அது மட்டுமல்ல பல தடவைகளில் மாசேதுங் என்ற அந்த மகத்தான தலைவரைக் காணவும் மற்றும் சீனத் தலைவர்களைச் சந்தித்து உரையாடவும் என்னால் முடிந்தது.

சீனாவில் வாழ்ந்த அந்த 15 ஆண்டுகள், குறிப்பாகக் கலாசாரப் புரட்சிக் காலத்து 10 ஆண்டுகள் என் வாழ்வின் பொன்னான காலப் பகுதியாகும்.

1966 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கலாசாரப் புரட்சி சூடுபிடிக்கத் தொடங்கியபோது நானும் ஒரு நாள் வானொலி ஊழியர்களுடன் சேர்ந்து கடும் குளிர் காலத்தில் லொறியில் பயணம் செய்து கொண்கோவின் செஞ்சதுக்கம் போலச் சீனாவிலுள்ள பிரமாண்டமான திபென் அன்மென் சதுக்கத்தில் கலாசாரப் புரட்சியைப் பாராட்டி தமிழில் பாடல் ஒன்றைப் பாடியது இன்னும் என் மனதில் பசுமையாகவிருக்கின்றது. சீனத்தியென் அன்மென் சதுக்கத்தில் முதன்முதலில் தமிழ் முழக்கம் செய்த அந்த நிகழ்ச்சியை நினைந்து நான் எனக்குள்ளே பெருமைப்பட்டுக் கொள்வேன். இந்த நிகழ்ச்சி அப்பொழுது சீனத் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்பட்டதும் பத்தாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டமாபெரும் கூட்டங்களில் இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

ஞானக்---

(4ஆம் பக்க தொடர்ச்சி)

ஐயரவர்களின் மைந்தர் கையிற் கிடைத்தது அதனைப் படித்ததும் மைந்தர் கொதித்து எழுந்து உரிய முறையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்று சீறிச்சினந்து நின்றவேளையில், தந்தையார் மெதுவாகக் கையை சந்து அவர் கோபத்தைத் தணிந்த வேளையில், புன்னகைக் கட்டுவன் வித்துவான் கணேச ஐயர் அவர்கள் அங்கே சென்றார் பண்டிதமணி அவர்களை [illegible] என் சிந்தாமணியின் நிகழ்ச்சி பதிப்புக்கு பெருமனதில் உதவியாயிருந்தன. (வளரும்)

பரிபூரண---

(5ஆம் பக்க தொடர்ச்சி)

ரங்களுக்கு அடிப்படையாகவிருக்கிறது எல்லாத் தேசங்களிலும் 'எல்லா மனிதர்களையும் தன்னுயிர்போல் நினை' என்ற உண்மை சொல்லப்பட்டிருக்கிறது இந்தியாவில் 'எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் நினை' என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் மனித உயிருக்கும் மற்ற உயிர்களுக்கும் வித்தியாசம் பாராட்டுவதில்லை ஆனால் ஏன் மற்ற உயிர்களைத் தம்முயிர்போல் நினைத்து அன்பு செய்ய வேண்டும்? இதற்குக் காரணம் மற்ற சாஸ்திரங்களில் கொடுக்கப்படவில்லை. கடவுள் அருமாய் எல்லா உயிர்களிலும் இருக்கிறார் எல்லா உயிர்களும் ஒன்று நாம் மற்றவர்களைத் துன்புறுத்துவதன் மூலம் என்னையே துன்புறுத்திக் கொள்ளுகிறேன் மற்றவர்களை நேசிப்பதன் மூலம் என்னையே நேசித்துக் கொள்ளுகிறேன் இதிலிருந்து ஏன் நாம் மற்றவர்களையும் துன்புறுத்தக் கூடாதென்பதற்கு காரணம் விளங்குகிறது.

(வளரும்)

பயணத்தால்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னார்.

எதிரிதரப்புச் சட்டத்தரணி தனது சமர்ப்பணத்தில் எதிரிக்குக் கொலை செய்யும் நோக்கம் இருந்திருக்கவில்லை என வாதாடினார். டாக்டரின் சாட்சியம் அதை நிரூபிப்பதாகக் கூறினார் மேலும் இறந்தவருக்குப் பாரதூரமான காயம் ஏற்படுத்தும் எண்ணம் இருந்திருப்பின் ஒருமுறை யல்ல, பலமுறை தாக்கி இருப்பார். டாக்டரின் கூற்றுப்படி உடன் தகுந்த வைத்திய சிகிச்சை அளித்திருப்பின் மரணத்தைத் தடுத்திருக்க முடியும் என்றார். இறந்தவரின் மனைவியின் சாட்சியத்திற்கும் டாக்டரின் சாட்சியத்திற்கும் முக்கிய அம்சங்களில் முரண்பாடுகள் இருப்பதனால் கைமோசக் கொலைக் குற்றச்சாட்டு நிரூபணமாகவில்லையென்றும் வாதிட்டார்.

வழக்கின் சாட்சியங்களையும், தொகுப்புரைகளையும் ஆராய்ந்த யூரர்கள் கைமோசக் கொலைக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லையென்றும் எதிரி சுற்றவாளி என்றும் தீர்ப்பளித்தனர். ✱

பகத்சிங்கின் வீரத்---

5ம் பக்கத் தொடர்ச்சி)

கும்.

அதன் சில பகுதிகள்: என் அருமை குலதாரி! உன் சிறு கண்களில் அழுகையை நீ எனக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் கண்டேன் அதனைப் பற்றி நான் மிகவும் வருந்தப்பட்டேன். நீ எழுதிய விஷயங்கள் அனைத்தையும் நான் நன்றாகவே அறிந்திருப்பினும் எனக்கு மிகவும் வருத்தமாகவிருக்கிறது. நீ நன்றாகப் படி. உன் உடலை நன்றாகப் பாதுகாத்துக் கொள். எதற்கும் அஞ்சாதே. தைரியமாக இரு விதியை நோவதில் பயனில்லை. விதியின் பயனே விதி. எங்கள் காலம் மிகவும் நெருங்குகின்றது நாங்கள் இறப்பது நிச்சயம் ஆனால் எங்கள் கொள்கையும் உணர்வும் என்றும் மாறமாட்டா. அவை உலகையும் பாரத மக்களையும் தட்டி எழுப்பும் நாங்கள் போய் மீண்டும் வருவோம் என் தாய் நாட்டு மக்களே! உங்களுக்கு நன்மை உண்டாகுக! போய் வருகிறோம் வணக்கம். ✱

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரை கடல் ஓடிப் புகலிடம் தேடிய தமிழ் இளைஞன் ஒருவனின் அனுபவம்

1987 ஜனவரி இருபத்தொழாம் நாள்—

நவிட்ஸ்ஸர்லாந்தின் சூரிச் சர்வதேச விமான நிலையம் சரசுரட்புடன் பரபரப்புடன் காணப்படுகின்றது—

திடீரென அக்கிருந்த பயணிகளின் சலனத்தை ஈர்க்கிறான் ஓர் ஆசிய இளைஞன்—

அங்கே! ஒரு யாழ்ப்பாணத்துத் தமிழ் இளைஞன் கையில் விலங்கு பூட்டிய நிலையில் இரு பொலீஸாரால் கொண்டு வரப்படுகிறான்—

விலங்கு பூட்டிய இளைஞனை ஒரு வித்தியாசமான விலங்கைப் பார்ப்பதுபோல் பயணிகள் பார்க்கின்றனர்.

நாதிய மீன்பூனை பார்ப்பதுபோன்ற அவர்களது பார்வையைத் தாங்க முடியாது, நாணித் கோணித் தன் குனிகிறான் அந்தத் தமிழ் இளைஞன்.

திரை கடல் ஓடித் திரவியம் தேடுவதற்கு வந்த வனல்ல அவன்!

திரைகடல் ஓடிப் புகலிடம் தேடி வந்தவன்!!

இன்று கள்வனைப் போல் கைவிலங்கு சாப்பூட்ட நிலையில் சாப்பார் இன்றி தாய்நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுகிறான்.

—கண்களில் நிறைந்த கண்ணீரைத் துடைக்க முடியாதபடி கைகளில் கனத்த விலங்கு

அவன் மனம் தன்னைத் தானே நொந்து கொள்கிறது

யாரைக் குறை சொல்வது

பாவம் தெரியாத வயதில் காசைக் கரியாக்கிய தன்னையா?; ஆசை காட்டி மோசம் செய்த ஏஜெண்டையா?

வெளிநாட்டால் வந்த அடுத்த வீட்டுப் பெடியனின் சடை, உடை, நடை பார்த்து தன்னையும் வெளிநாடு அனுப்ப அரிப்பூட்டிய அன்னையையா? விதியையா? தன் மதியையா?

எதை நோவது?

நான்கு தம்பிகள், இரு தங்கைகளைக் கொண்ட குடும்பத்தில் மூத்தவனான அவன் பயணம் புறப்படும்போது தந்தை கூறியது ஞாபகத்துக்கு வந்தது.

தங்கச்சிமாரைக் கைவிடாதே!

'தம்பி...! உனக்கு இரு சகோதரிகள் இருக்கினம் என்டதை ஒருநாளும் மறந்து போடாதை

என்னை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைத்து அனுப்பிறன். என்னை ஆஸ்திரேலியாவுக்கு வரவிட்டாலும் பரவாயில்லை, தங்கச்சிமாரைக் கைவிடாதை'

தந்தையின் முகத்தில் எப்படி முழிப்பது?

ஈடு வைத்த அந்த உறுதி இன்னும் இருப்பவும் அவனைக் 'கண்ணீர் நனைக்கிறது

விடியல் பிறான்ஸில்

பம்பாயில் புதிய பாஸ்போட், விசா எடுத்துப் பிறான்ஸ் செல்லும் இனியாவது விடிகழுவினான்.

ஐந்து மாதங்களைப் பிறான்ஸில் அவலமாய்க் கழித்து, சிறுதொகை சேமித்து மெல்லமாக ஜேர்மனி போய்ச் சேர்ந்தான்.

மேற்குலகு போகும் நாடோடிகள் நிலையில் பலரும் அவதியா?

மாதத்தில் அறுதி.

நம்பியிருக்கும் யுவதிகள் கண்ணீர் விடுவதா நியதி?

—அவளது நினைவுகள் மேலும் பின்தொடர்கின்றன.

பம்பாயில் அவன் இறங்கி, மண்பாயில் படுத்துறங்கி, அம்பாவி ஆங்கே அமர்ந்து, வம்பாகிப்போன அந்தப் பயணம் நெஞ்சில் வந்து போகின்றது

பின்னர் பம்பாயிலிருந்து தந்தைக்குத் தந்தி அடித்ததும், தாயின் தாலியை விற்று அவர் பணம் அனுப்பியதும் அதை நினைக்க நினைக்க

மனம் தான் நொந்து கொள்கிறது

யாரைக் குறை சொல்வது

பாவம் தெரியாத வயதில் காசைக் கரியாக்கிய தன்னையா?; ஆசை காட்டி மோசம் செய்த ஏஜெண்டையா?

வெளிநாட்டால் வந்த அடுத்த வீட்டுப் பெடியனின் சடை, உடை, நடை பார்த்து தன்னையும் வெளிநாடு அனுப்ப அரிப்பூட்டிய அன்னையையா? விதியையா? தன் மதியையா?

எதை நோவது?

நான்கு தம்பிகள், இரு தங்கைகளைக் கொண்ட குடும்பத்தில் மூத்தவனான அவன் பயணம் புறப்படும்போது தந்தை கூறியது ஞாபகத்துக்கு வந்தது.

தங்கச்சிமாரைக் கைவிடாதே!

'தம்பி...! உனக்கு இரு சகோதரிகள் இருக்கினம் என்டதை ஒருநாளும் மறந்து போடாதை

என்னை ஆஸ்திரேலியாவுக்கு வரவிட்டாலும் பரவாயில்லை, தங்கச்சிமாரைக் கைவிடாதை'

தந்தையின் முகத்தில் எப்படி முழிப்பது?

ஈடு வைத்த அந்த உறுதி இன்னும் இருப்பவும் அவனைக் 'கண்ணீர் நனைக்கிறது

விடியல் பிறான்ஸில்

பம்பாயில் புதிய பாஸ்போட், விசா எடுத்துப் பிறான்ஸ் செல்லும் இனியாவது விடிகழுவினான்.

ஐந்து மாதங்களைப் பிறான்ஸில் அவலமாய்க் கழித்து, சிறுதொகை சேமித்து மெல்லமாக ஜேர்மனி போய்ச் சேர்ந்தான்.

சுவிஸ் பயணம்

சுவிஸ் பயணத்தை இன்று நினைத்தாலும் அவன் மனம் கேவலப்படுகிறது.

ஒரு திருடனைப்போல் ரயில் சீற்றக்கடியில் ஒளிந்து சுவிஸ்லிருந்து பயணமாக வேண்டியதாயிற்று.

சுகரயில் பிரயாணிகள் ஒரு புழுவைப் பார்ப்பது போல் புருவத்தை எளிப்புளுக்கையும் காறி வது'போல் தப்புச் செய்யாத அவனும் நண்பனுடன் செல்லவேண்டி வருமே என்ற பயத்தில் ஜேர்மனியை விட்டு சுவிஸிற்கு ஓட வேண்டி வந்தது

சுவிஸ் பயணத்தை இன்று நினைத்தாலும் அவன் மனம் கேவலப்படுகிறது.

ஒரு திருடனைப்போல் ரயில் சீற்றக்கடியில் ஒளிந்து சுவிஸ்லிருந்து பயணமாக வேண்டியதாயிற்று.

சுகரயில் பிரயாணிகள் ஒரு புழுவைப் பார்ப்பது போல் புருவத்தை

எளிப்புளுக்கையும் காறி வது'போல் தப்புச் செய்யாத அவனும் நண்பனுடன் செல்லவேண்டி வருமே என்ற பயத்தில் ஜேர்மனியை விட்டு சுவிஸிற்கு ஓட வேண்டி வந்தது

சுவிஸ் பயணம்

சுவிஸ் பயணத்தை இன்று நினைத்தாலும் அவன் மனம் கேவலப்படுகிறது.

ஒரு திருடனைப்போல் ரயில் சீற்றக்கடியில் ஒளிந்து சுவிஸ்லிருந்து பயணமாக வேண்டியதாயிற்று.

சுகரயில் பிரயாணிகள் ஒரு புழுவைப் பார்ப்பது போல் புருவத்தை

ணப்பித்தான்.

அவனை அகதியாவெனத் தீர்ப்பதற்கு ஒருமாத அவகாசம் வழங்கினர் அதுவரை அகதி முகாமில் தங்க அனுமதித்தனர்.

ஒரு அகதி முகாமில் சுமார் நூறுபேர்வரை ஒரு மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

எல்லோருக்கும் பொதுவாக ஒரு சமையலறை. சமையலுக்குப் பொருள்கள் வழங்கப்பட்டன. துருக்கியர், ஆபிரிக்கரும் உடன் இருந்தனர். நிதானக் சமையலறைச் சண்டைகள் அடிக்கடி நடைபெற்றன.

ஒரு மாதத்தின் பின் அகதியாக இருக்க அவனுக்கு அனுமதி இல்லை என அதிகாரிகள் அறிவித்தனர்

மீண்டும் ஜேர்மனி போவதே உசிதம் என உள்ளம் சொன்னது ஜேர்மனியில் இருந்த நண்பனுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்வதற்காக பொதுத் தொலைபேசியை எடுத்தபோது பொலீஸாரால் கைதானான்

அவனது கத்தலையும், கதறலையும் செவிமடுக்காது விமான நிலையத்திற்கு ஒரு கைதியைப் போல் அழைத்துச் செல்லப்பட்டான்.

கனவும் கண்ணீரும்

கனவுகளைக் கமத்தபடி வெளிநாடு புறப்பட்டவன், கண்ணீரைச் சுமத்தபடி திருப்பி அனுப்பப்பட்டான்

வெளிநாட்டில் ஏற்பட்ட துன்பங்களை விட தாய்நாட்டிக் காலடி வைத்ததும் ஏற்பட்ட துன்பங்கள் அனேகம்.

பாஸ்போட் இன்றி வந்ததால் விமான நிலையப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

அப்படி அவனை ஒப்படைத்தவர் ஒரு தமிழ் சுங்க அதிகாரி. அவர் இனஞ்மாகப் பணம் கேட்டபோது அவனிடம் ஏதும் இல்லாததால் அவனை ஒப்படைத்தார்.

அடையான அட்டை, பாஸ்போட் இல்லாத தாலோ என்னவோ. பொலீஸார் அவனுக்கு மாட்டுக்கு குறிவைப்பது போல் குறிவைத்து விட்டுக்கு அனுப்பினர்.

தன் குடும்பத்தினரை விட்டுப் பிரிந்து இரண்டரை வருடங்களின் பின், மீண்டும் கனக்கும் சந்தோஷமான மனநிலை அவன் வீடு திரும்பியுள்ளான்? ✶

(தக்க காரணங்களைக் கருதிச் சம்பந்தப்பட்ட இளைஞனின் பெயரை இங்கு வெளியிடவில்லை. இவர் யாழ்ப்பாண நகரத்தைச் சேர்ந்தவர்.)

பேட்டி: எஸ். ஜே பி: ரட்ணதுரை

வடக்கில் வளர்க்க வல்லதான புதிய கனி தருமரங்கள்

சில காலமாக யாழ். மாவட்டத்தில் விவசாயத் துறையில் இளைய தலைமுறையினர் மிகுந்த உற்சாகத்துடன் எமது பூமியிலும் புதிய இனங்களில் பலதரப்பட்ட பயிர்களையும் பயிரிட்டு பயன்பெறவேண்டும் என்ற நல்ல முன்மாதிரியான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்

'இந்த மண்ணில் ஒன்றும் வராது' என்ற சோம்பல் நிலையில் சாதாரணமாக கிராம மட்டத்தில் சிலர் கூறும் கற்றுக்கு எதிர்மாறாக பல இனப்பயிர்களும், பழ மரங்களும் பயன் அளித்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்க முயற்சிக்குரிய வெற்றியாகும் எனலாம்.

கடந்த மாதம் பரீட்சார்த்தமாக சங்கானையில் 'மங்குஸ்தான்' உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு சில வாரங்களில் குறித்த நாற்றுக்கள் முளைத்து நிடகாத்திரமாக கன்றுகள் காணப்படுகின்றன.

தென்னைச் செய்கை கூடுதலாக நடைமுறையில் உள்ள பகுதிகளான களுத்துறை நீர்கொழும்பு, சிலாபம், குளியாப்பிட்டி, குருநாகல், போன்ற பிரதேசங்களில் 'மங்குஸ்தான்' உற்பத்தி பெரும் அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மலேசியா, சிங்கப்பூர் காலநிலைகள் உள்ள நாடுகளில் நட்டும்தான் வரும் என்ற அவக்காடோ (பட்டர் புறாட்) 'AVOCADO'' (குதிரை கோசப்பழம்) நல்லூர், சங்கானை, உடுவில், யாழ்நகர், தெல்லிப்பளை போன்ற பல இடங்களில் தோடை மரம் அளவில் உயரமாக காணப்படுகின்றன.

பொஷாக்கு அதிகம் உள்ள குறிப்பாக புரதச் சத்து அதிகமாகவுள்ள அவக்காடோ என்ற மஞ்சள் பழம் ஏற்றுமதிக்கு உகந்தது. முட்டை மஞ்சள் கரு போன்ற சதையுடன் தோல் வெறப்பாகவும் சுவர்ச்சியாகவும் பழம் காணப்படும்

ஆறு அடி சுழற்றுக்கு கற்பாறை இல்லாத, நிலத்தில் 25 அடி தூரத்தில் நடலாம்

பட்டர் புறாட்டுக்கு சாதாரணமாக எலுமிச்சை, தோடைக்குரிய பராமரிப்பு போதுமானதாகும் பட்டர் பறாட் இரண்டு போகத்துக்கு பயன் தரும் அணில் தொல்லைகூட இல்லை காரணம் தோல் தடிப்பு மேலும் தோலில் சுவை குறைவு ஒரு போகத்தில் ஏறக்குறைய 400 பழம் கிடைக்கும் ஒரு வருடத்தில் குறைந்தது ஆயிரம் ரூபா வருமானம் கிடைக்கும். பட்டர் புறாட் (Avocado) பழம் நோய்களின் தொடக்கம் அனைவரும் சாப்பிடலாம். நீரிழிவு நோயாளிகள் கூட கட்டுப்பாடு இல்லாமல் பயப்படாமல் உண்ணலாம்.

'மங்குஸ்தான்' பழத்தின் கோது குழந்தைகளின் வயிற்றுக் கோளாறு, பூச்சிகள் போன்ற வருத்தங்களுக்கு பாவிக்கப்படுவது வழமை

கோதில் 'TANIN' என்ற பொருள் இருப்பதால் சில வேளைகளில் கோதுகள் தோல் பதனிடும் தொழிற்சாலைக்கு பயன்படுத்தப்படுகின்றது 'மங்குஸ்தான்' உற்பத்திக்கு நீர்ப்பாசனம் அவசியம் ஏனெனில், இவற்றின் மேற்பகுதியில் வேர்மயிர்கள் குறைவு. ஆகவே, நிலம் எந்நேரமும் ஈரமாக இருக்க வேண்டும்.

'மங்குஸ்தான்' உற்பத்திக்கு அதிக கவிமண், சேதனப் பொருள்கள் சிறிது மணல், சிறிது வண்டல் உள்ள நரை கலந்த மண்ணாக இருக்க வேண்டும்.

ஜி. சிதம்பரநாதன்

கமமும் புயமும்

பறவியர் கோட்டை மீது படை கொண்டு மோதிய நல்லூர் அரசு தொடர் கட்டுரை இடமின்மை காரணமாக இவ்வாரம் வெளியிடப் படவில்லை.

மண்வளம் பேணின் பிறவளம் பெருகும்

இயற்கை அன்னையால் மனிதனுக்கு அளிக்கப்பட்ட வளங்களுள் மண்வளம் மிக முக்கியமானதாகும். புவியின் மேற்பரப்பில் காணப்படும் கற்பாறைகள் இரசாயன, பௌதீக உயிரினவியற் தாக்கங்களினால் சிதைவுற்று பல கோடி வருடங்களுக்குப்பின் மண்ணாக மாற்றம் அடையும்.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் உலர்வலய மாவட்டங்களில் கடந்த காலங்களில் புதிதாகக் குடியேறி விவசாயம் செய்பவர்கள் போதிய மண்பாதுகாப்பு முறைகளை அனுசரிக்காது விவசாயம் செய்து வருவதனால் மண்ணரிமானம் (Soil Erosion) அதிக அளவில் காணக்கூடியதாக இருக்கிறது.

குடியேற்றத் திட்டங்களில் பயிர்ச்செய்கையின் பொருட்டு வருடா வருடம் காடுகள் எரிக்கப்படுகின்றன. இப்பிரதேசங்களில் போதிய மண்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப் டாமையினால் விவசாயப் பூமியில் உள்ள வளமான மண் வருடா வருடம் மழையினாலும் காற்றினாலும் அகற்றப்பட்டு தனது வளமான தன்மையை இழந்து வருகிறது இதை தடுக்க நாம் முன்வர வேண்டும்.

மண்ணின் குறுக்கு வெட்டு முகத்தோற்றத்தை நோக்கும்போது மூன்று பெரும் பிரிவுகளை மேற்படை மண் ஆழம் குறைவாகவே காணப்படுகிறது இயற்கையான காட்டுப் பிரதேசங்களில் மேற்படை மண் ஆழமுடையதாக இருக்கும்

இக்காரணத்தினாலேயே புதிதாகக் காடு வெட்டி திருத்தி விவசாயம் செய்யும் நிலங்களில் பயிர் செழித்து வளர்ந்து அதிக விளைவு பெறக் கூடியதாக இருக்கிறது.

மண்ணின் முக்கிய

★ நா. குகநாதன் ★

அவதானிக்கலாம்.

அவையாவன: மேற்படை மண் (Top Soil) கீழ்ப்படைமண் (SubSoil) தாய்ப்பாறை (Parent Material) என்பனவாம்.

இந்த மூன்று படைகளிலும் தாவர வளர்ச்சிக்கு மிக முக்கியமானது மேற்படை மண்ணாகும். மேற்படை மண் கருமை நிறமாகவும், ஆழம் குறைவாகவும் இருக்கும் மேற்படை மண் தாவர போஷணை பதார்த்தங்களை அதிகம் கொண்டு காணப்படுகிறது. மேற்படை மண் ஆழமுடையதாகவும் வளமுள்ளதாகவும் காணப்படும். உலர் வலயத்தில் கூறுகள் உக்கல் (Humus) களிமண், சிலிற்று (Silt) மெல்மணல் பெருமணல் என்பனவாம். இவற்றில் களிமண், சிலிற்று, உக்கல் என்பன தாவர வளர்ச்சிக்கு முக்கியமானதும், தாவர போஷண பதார்த்தங்களையும் நீரையும் தன்னகத்தே பிடித்து வைத்திருக்கும் நிறனும் உள்ளவை.

களிமண், சிலிற்று, உக்கல் என்பன மண்ணரிமானம் ஏற்படாமல் தடுக்கும் மேற்படை மண்ணில் இருந்து வருடா வருடம் அகற்றப்படும்போது மண்ணின் வளமும் குறைந்து விடுகிறது. இக்காரணத்தினால் புதிய குடியேற்றத் திட்டங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு இன்று போதிய வருமானம் கிடைப்பதில்லை.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் உலர் வலயத்தில் அடங்கிய மாவட்டங்களில் உள்ள நீர்ப்பாசன குளங்கள், வாய்கால், நீர்த்தேக்கங்கள், கடல்களில் சேரும் ஆறு, சிற்றாறு முதலிய வற்றின் நீர்வழி பாதைகளில் மழை காலம் முடிந்ததும் சிறுமணல், பெருமணல், சிறுகற்கள் கலந்த மணற் படுகைகளை நாம் காணலாம். இந்த மணல் வருடா வருடம் லொறிகளில் அள்ளப்பட்டு கட்டடங்கள், வீடுகள் கட்டுவதற்குப் பாவிக்கப் படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த மணல் லொறிகளில் ஏற்றிச் செல்வதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது

மண்ணரிமானம் நடைபெறும் போது மழை நீரினால் இலகுவில் அள்ளிச் செல்லக் கூடிய களிமண், சிலிற்று, உக்கல் ஆகிய நீர்ப்பாசன குளங்களையும், கடலையும் சென்று அடைந்து விடுவதால் நீர்ப்பாசன குளங்களின் நீர் கொள்ளளவு வருடாவருடம் குறைந்து வருகிறது.

யாழ் குடா நாட்டில் உள்ள சிறு குளங்களில் வந்து சேரும் களிமண், சிலிற்று, உக்கல் சேர்ந்த கலவை, குளங்கள் வற்றி காய்ந்ததும் விவசாயிகள் குளப்பொருக்கு என்று வயல்களுக்கு அள்ளிப் போடுவதை நாம் காணலாம். மேற்கூறியவற்றிலிருந்து எமது பிரதேசங்களில் மண்ணரிமானத்தால் எவ்வளவு வளமான மண்விரயமாகிறது என்பதை அறியலாம். ஆகவே எமது பிரதேசங்களில் உள்ள மண், வளம் பெற பின்வரும் மண் பாதுகாப்பு முறைகளை அமைத்து விவசாயம் செய்வோமாக.

ஒவ்வொரு விவசாயியும் தமது விவசாய நிலத்தினைச்சுற்றி 2' X2' அடிக்கு குறையாத மண் வரம்புகள் அமைத்தல்.

விவசாய நிலங்களுள் சம உயரக்கோட்டு முறையில் மண்வரம்புகள் அமைத்தல்

சம உயரக்கோட்டு முறையில் தடைகால்கள் அமைத்தல். (Contour Lock and Spill Drains)

நீர்ப்பாதைகள், சிறு, ஆற்றுவழிப்பாதைகளுக்கு குறுக்கே தடை அணைக்கட்டுகள் (Check Dams) அமைத்தல்.

நீர்ப்பாதைகளுக்கு வரும் சிற்றோடைகளில் சிலிற்று பொறிகிடங்குகள் (Silt Traps) அமைத்தல்.

வேலி ஓரங்களில் காற்றுத்தடைகளை ஏற்படுத்த நிரந்தரமான மரங்களை நடுதல் (Wind Belts)

நீர்வழிப்பாதைகள் (Water Courses), சிற்றாறு, ஆற்றுவழிப்பாதைகளின் இருபக்கங்களிலும் இயற்கைக்காடு களைப்பேணுதல். மூங்கில் போன்ற மரங்களை நடுதல்.(நீர்ப்பாதையின்விட்டத்தின் 1½ மடங்கு அகலமானஇடம் இதற்கு ஒதுக்கப்படவேண்டும்).

சம உயரக்கோட்டு முறையில் நிலம் பண்படுத்தல், பயிர்நடுகை மேற்கொள்ளல்.

பசும் தாழ் பயிர்ச்செய்கை (சணல் போன்றவை) மேற்கொண்டு மண்ணுடன் சேர்த்தல்.

பூவரசு, வேம்பு, காவிளாய், எருக்கலை போன்ற பசும் குழைகளை மண்ணுடன் சேர்த்தல்.

இயற்கைப்பசளைகளான பண்ணை எரு, கூட்டெரு போன்றவற்றைக் கூடுதலாகப் பாவித்தல்.

பண்ணைக் கழிவுகளை எரிக்காது கூட்டுரமாக மாற்றி மண்ணுடன் கலந்து விடல்.

நீர்ப்பாசன குளங்களைச் சுற்றி காட்டுமரங்கள் நடுதல்.

ஒவ்வொரு குடியேற்றத் திட்டங்களிலும் சமூக காடுகள் வளர்த்தல்.

காட்டுமரங்கள் வெட்டுதல்; எரித்தலை தடைசெய்தல்

நிலங்களை தரிசாக விடாது பயிர்செய்தல்

கன்ஏற்றன. ஆண் பூக்கள், பெண் பூக்கள் செவ்வேறு மரங்களில் உண்டு.

எனினும் பெண் மரங்களே அதிகம் உண்டு பொதுவாக விதைகள் உண்ணும்போது துப்புரவாக்கப்படும், நடுவதற்கு சேதப்படாத விதைகள் பாவிக்கப்பட வேண்டும். ஏழு நாட்களில் முளை திறன் இழக்கும், சரமான மண் உள்ள தரத்தில் இட்டு விதைகளை ஒரு மாதம் வைத்திருக்கலாம். 'அன்னது' பழத்துக்கு பங்கை கொல்லி இட்டு விதைகளை கூடிய நாட்களுக்கு சேமிக்கலாம்.

விதை முளைப்பதற்கு ஏறக்குறைய 45-50 நாட்களும் எடுக்கும். விதைகளை நாற்று மேடைகளிலும், பெரிதிலே பைகளிலும் முளைக்க வைக்கலாம். நீண்ட ஆணிவேர் உள்ளதால் பொவிதீன் பைகள் நல்லது. இரண்டு அடி உயரம் வரை முள் நடுகைத் தரைக்கு மாற்றக் கூடாது. பல வருடங்களில் பின்பு பலன்தரும். 'மங்குஸ்தான்' மரத்தில் இருநூறு தொடக்கம் ஐநூறு பழங்கள் கிடைக்கும். ✶

ஆலயச் சிறப்பு

தொன்மையான ஆலயம் மீது சதகம்

அடர்ந்த பனந்தோப்பினிடையே இயற்கை நிலையிலமைந்த மூன்று சுவர்கள்-ஐம்பது ஆண்டுகளின் முன் என் பள்ளிப் பருவத்திற் பார்த்த அந்த வடிவம்-இன்றும் என் மனக்கண்முன் பளிச்சிடுகின்றது

நகுலேஸ்வரத்திற்குத் தெற்கே, கருகம்பனை எனும் கிராமத்தின் வடமேற்குப் பகுதியிலமைந்த அருண்மிகு நாகராஜேஸ்வரி அம்பாள் ஆலயக் கவர்ச்சி தான் முன்னே காட்டப்பட்டவை.

இந்த ஆலயத்தின் பழம்பெருமையை இன்றும் பேசி நிற்பவை அந்தக் கவர்கள் தான்.

வருடத்திற்கு ஒருமுறை அந்தப்பனைகூடலிலிருந்து பொங்கல் விழாச் செய்து வந்த பக்தர்கள் புனருத்தாரணம் பற்றிச் சிந்திக்க தொடங்கினர். அந்தச் சிந்தனையின் முடிவு 1984-01-19 இல் திருப்பணிச்சபை என மலர்ந்தது. சபை உறுப்பினர்கள் வேகமாக சிந்திக்கத் தொடங்கினர். திருவருட்செயற்பாடு மிகுதியாயிற்று ஆலயத்தைப் புதிதாக அமைக்க வேண்டுமென்னும் பெருவிருப்பு எல்லோரையும் ஆட்கொண்டது.

(கருகம்பனை அருள்மிகு நாகராஜேஸ்வரி அம்பாள் ஆலயசதகம் வெளியீடு நாளை நடைபெறும்.)

அந்த விருப்பு 1984-04-16 இல் நகுலேஸ்வர ஆதீன முதல்வரின் நல்வாழ்த்துடன் காங்கேசன் விழாவாயது தொடர்ந்து கர்ப்பக்கிருகவேலைகள் வேகமாக வளர்ச்சியுற்றன.

எழுந்தருளி மண்டபவேலைகளும் தொடர்ந்தன. பரிவார மூர்த்திகளுக்காய அமைப்புக்களின் வளர்ச்சியும் தொடர ஆரம்பித்தது. அம்பாளின் பெருங்கருணைத் திறத்தினால் பல அன்பர்கள் 'நான் முந்தி நீ முந்தி' என்ற அளவிற்கு நிருப்பணி வேலைகளைச் செய்வதில் முன்நிற்கின்றார்கள் விக்னேஸ்வரர் ஆலயத்தையும், சந்தான கோபாலர் ஆலயத்தையும், வயிரவர் ஆலயத்தையும், நாகதம்பிரான் ஆலயத்தையும் அதனால் அமைக்கத் திருவருள் கூடியுள்ளது

மகா மண்டபம், ஸ்தம்பமண்டபம் ஆகிய அமைப்புக்களை சங்குத்தாபனஞ் செய்துள்ளனர்.

அடியவர்களின் மனம் நிறையும் வண்ணம் மூலமூர்த்தி அமைய வேண்டும் என்ற கருத்து வாணி கலைக்கழகத்தின் சிற்பி பண்டிதர் உ. விரதநிதி அவர்கள் உள்ளத்திற் பதிந்திட்டது. அம்பாளின் பெருங்கருணைத் திறத்தை என்னென்பது! அருண்மிகு நாகராஜேஸ்வரி அம்மை திருச்சதகம் பண்டிதர் வாயிலாக உதயமாயிற்று. திருவருள் வழிநின்று வந்த அருட்பாடல்கள் அன்பர்கள் உள்ளத்தை உருகவைப்பன. அப்பாடல்களை நூலுருவம் பெறுகின்றன. எம் மனமெல்லாம் 'அம்பாளின் திருவடிவம் நிறைய வேண்டும்.

அந்த விருப்பு 1984-04-16 இல் நகுலேஸ்வர ஆதீன முதல்வரின் நல்வாழ்த்துடன் காங்கேசன் விழாவாயது தொடர்ந்து கர்ப்பக்கிருகவேலைகள் வேகமாக வளர்ச்சியுற்றன.

எழுந்தருளி மண்டபவேலைகளும் தொடர்ந்தன. பரிவார மூர்த்திகளுக்காய அமைப்புக்களின் வளர்ச்சியும் தொடர ஆரம்பித்தது. அம்பாளின் பெருங்கருணைத் திறத்தினால் பல அன்பர்கள் 'நான் முந்தி நீ முந்தி' என்ற அளவிற்கு நிருப்பணி வேலைகளைச் செய்வதில் முன்நிற்கின்றார்கள் விக்னேஸ்வரர் ஆலயத்தையும், சந்தான கோபாலர் ஆலயத்தையும், வயிரவர் ஆலயத்தையும், நாகதம்பிரான் ஆலயத்தையும் அதனால் அமைக்கத் திருவருள் கூடியுள்ளது

மகா மண்டபம், ஸ்தம்பமண்டபம் ஆகிய அமைப்புக்களை சங்குத்தாபனஞ் செய்துள்ள

எஸ். அப்புத்துரை

சோவியத்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகும்

1968ஆம் ஆண்டு ஆர்சியல் சீர் திருத்தங்கள் கோரி பிரதமர் டுப்செக் தலைமையில் செக்கோஸ்லாவாக்கியாவில் ஏற்பட்ட எழுச்சி வார்சோ படைகளால் முறியடிக்கப்பட்டது.

1956ஆம் ஆண்டு ஹங்கேரியில் ஏற்பட்டவிளர்ச்சியையும் சில ஆண்டுகளுக்கு முன்னர் போலந்தில் சுதந்திர தொழிற்சங்கத் தலைவர் வலேஸா தலைமையில் நடந்த கிளர்ச்சிகளும் மக்களிடை ஒரு பகுதியினரின் சிந்தனைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் எதிரொலியே.

தனது உறுப்பு நாடுகளில் இப்படியான சிந்தனைகள் மீண்டும் தலை தூக்க சோவியத் தலைமை பிடம் இடமளிக்குமா என்பது சந்தேகமே. ✶

தாளத்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

டபத்தில் பல கலைஞர்கள் நிறைந்திருந்த நேரத்தில் அமரராகி விட்ட ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ தம்பிரான்சுவாமிகள்பொன்னுடைபோர்த்திப் பாராட்டி எனக்கு அளித்த மிகுதங்கமாமணி என்ற பட்டத்தையும், அருட்கவி நிரு சீ. விநாசித்தம்பி அவர்கள் தாவடிச்சைவசமூக நிலையத்தில் அன்பர்கள் பலர் முன்னிலையில் அளித்த மிகுதங்கமணி எனும் பட்டத்தையும் குறிப்பிடலாம். ✶

எஸ். அப்புத்துரை

கலை

மண்வளம் பேணின் பிறவளம் பெருகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மில்க்வைற் செய்தி இதழ் 134'

10 மில்க்வைற் நீலசோப் அல்லது
8 பார் சோப் அல்லது
2 சுப்ப மில்க்வைற் சோப்
மேலுறைகளை அனுப்பி
மேற்படி புதிய மில்க்வைற் செய்தியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் தொழிலகம்
த.பெ. எண்: 77, யாழ்ப்பாணம்.

சஞ்சீவி

14 - 02 - 1987 சனிக்கிழமை

'மகா சிவராத்திரி விரதத்தை விட சிறந்த விரதமில்லை'

மகா சிவராத்திரி வரலாறு
என்ற நூலை
10 மில்க்வைற் நீலசோப் அல்லது
8 மில்க்வைற் பார்சோப் அல்லது
2 சுப்ப மில்க்வைற் சோப்
மேலுறைகளை அனுப்பிப்
பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற்-யாழ்ப்பாணம்.

இலங்கை விவகாரப்: இந்திய ராஜதந்திரத்துக்குத் தோல்வி!

'இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்கான தனது தெரிவுகள் குறித்து புது டில்லி மீளாய்வு செய்கிறது'— இத்தலைப்பில் ஸ்ரீலங்கா கார்டியன் ஜனவரி 15 இதழில் கட்டுரை ஒன்று வெளியானது. கட்டுரையை எழுதியவர் ஸ்ரீலங்கா கார்டியன் ஆசிரியரும் வெளிவிவகாரத்துறையில் வல்லுநருமான திரு மேர்வின் டீ சில்வா. அக்கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.

இனப்பிரச்சினையில் இந்தியா மத்தியஸ்தம் செய்யும் பணியை 1983இல் ஆரம்பித்தது. ஆகஸ்ட் பிள்ளை புதுடில்லியின் வெளிவிவகாரக்கொள்கை திசைச்சி நிரலில் இலங்கைக்கே முதலிடம் அளிக்கப்பட்டது.

இன்று இலங்கைப் பிரச்சினைக்கு அதி முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது

அந்தமான் தீவுகளில் விடுமுறையில் இருக்கும் போது, இந்தியாவின் உயர்கொள்கை வகுப்புக் குழுவைக் கூட்டும்படி பிரதமர் காந்தி உத்தரவிட்டது. இனப்பிரச்சினை மீது இந்தியா காட்டும் அவசியத்தை உணர்த்துகிறது.

இந்திய அமைச்சரவையில் அரசியல் விவகாரக் குழு வழமையாக பிரதமரின் தலைமையில் தான் கூடும் கூட்டத்தில் நடைபெறும் விஷயங்கள் இரகசியமாக வைக்கப்படும்.

கூட்டத்தின் செய்திகள் வெளியே வந்தாலும் தேசியப் பத்திரிகைகள் பெரும்பாலும் அவற்றை வெளியிடுவதில்லை.

இக்குழுவில் பாதுகாப்பு, வெளிவிவகாரம், நிதி, உள்துறை ஆகிய அமைச்சர்களும் வேறு பலரும் அங்கம் வகிக்கின்றனர்.

ஆராயப்படும் விஷயங்களைப் பொறுத்து வேறு சிலர் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைக்கப்படுவர்.

இக்குழுவின் கடமை, திட்டமிடலிலும் பார்க்க கொள்கையை மீளாய்வு செய்வது ஆகும். அது மீளாய்வு செய்தது

இந்திய ராஜதந்திரத்தின் வெற்றி, தோல்வி தற்போதைய முடுக்கட்டை ஆகியன குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரத்தினா இந்திய வெளியுறவுச் செயலாளரைச் சந்தித்து கிழக்கு மாகாணத்திலிருந்து அம்பாறையை விலக்குவதை கொழும்பு அரசு ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்தார்.

அம்பாறையை விலக்கிய கிழக்கு மாகாணம் மட்டுமல்ல பிரச்சினைகள் குறித்த தெரிவுகளை எடுப்பதும் அவற்றை விரைந்து அமுல் நடத்த உதவுவதும் ஆகும்

இந்திய அமைச்சரவை வெளிவிவகார அரசியல் குழு, அமெரிக்காவின் தேசியபாதுகாப்புச்சபை கவுன்ஸில் நாட்டின் மொலிற் பிரோ ஆகிய வற்றுக்கு ஒப்பானது

மீளாய்வு செய்யப்பட்டது

அண்மையில் நடந்த இந்த அரசியல் குழுக் கூட்டத்துக்கு முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் தலைமை வகித்தார். குழுவின் முதல் கூட்டத்தில் இலங்கை இனப் பிரச்சினையில் கடைப்பிடிக்கப்படும் இந்திய ராஜதந்திரம் பற்றி என்ற நிலைப்பாட்டை இந்திய இன்ன அமைச்சர்கள் இரண்டுபேரும் பிரதமர் காந்தியிடம் தெரிவித்தனர். இலங்கையின் பிந்திய இந்த யோசனை முட்டுக்கட்டையை நீக்கும்என்றுஇந்தியா கருதியது.

அந்தத் தருணத்தில் இலங்கைத் தூதர் 'அது முடியாது' என்று தெரிவித்தது இந்திய அரசுக்கு ஏமாற்றத்தையே அளித்தது

முஸ்லிம்களின் நிலை

கிழக்கு மாகாணம் பற்றிய முஸ்லிம்களின் நிலைப்பாட்டிலிருந்தான் இப் பிரச்சினை தங்கி உள்ளது

டாக்டர் பதியுதீன் மஹ்மூத் தலைமையிலான முஸ்லிம் கவுன்ஸில் குழுவையும் கிழக்கு மாகாணத்தின் 5 முஸ்லிம் எம்.பி.க்களையும் இந்திய இன்ன அமைச்சர் சந்தித்தது 5 முஸ்லிம் எம்.பி.களும் ஒரு எம்.பி.க்கட்சியைச் சேர்ந்தவர்கள்

இச்சந்திப்பின் பின்னர் அம்பாறையை நீக்கிய கிழக்கு மாகாண யோசனையை முஸ்லிம்கள் ஆதரிப்பதாக இந்தியக்குழு உணர்ந்து கொண்டது இதனை பேச்சுக்களில் ஒரு முன்னேற்றமாகவும் இந்தியக் குழு கருதியது.

இந்தியக்குழு புதுடில்லி சென்றடையும் முன்னர் அம்பாறையைத்தவிர்ந்த கிழக்கு மாகாண யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முஸ்லிம் எம்.பி.க்கள் கையெழுத்திட்டு வெளியிட்ட கடிதம் ஒன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது

1985இல் இடம்பெற்ற அனுராதாபுரப் படுகொலை, 1986இல் இடம் பெற்ற போராளிகள் நடத்திய தெற்குத்தாக்குதல்களுடன் சேர்ந்து தான் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படுவது உண்டு

இந்திரா காந்தி காலத்தில் இப்படியான நடவடிக்கைகளை கொழும்பு அரசின் கடும் போக்கை 'மென்மைப் படுத்தும்' செயல் என்று அழைக்கப்பட்டது

1983 ஜூலை கலவரத்தின் பின்னர் இந்தியப் பாதுகாப்புப் பிரிவில் உள்ள கடும்போக்குக் கொண்டவர்கள், இலங்கை விஷயத்தில் கடுமையான போக்கை அனுட்டிக்க வேண்டும் என்று கூறினர்.

அதற்குக் கடும் போக்குக் கொண்டவர்கள் பிரிவினைப் போராளிகளை ஆதரிக்க வேண்டும் என்றுகூறி முன்று தெரிவுகளை முன் வைத்தனர்.

ஒன்று: ஆயுதம் தாங்கிய போராளிகளினால் வடக்கை தங்களின் இராணுவக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்; கிழக்கில் அப்படி இல்லை.

இரண்டு: தாக்கக் கூடிய சக்தி ஏனைய பகுதிகளில் போராளிகளுக்கு உண்டு

மூன்று: பாக்குநீரிணைப் போக்குவரத்துக்கு கரையோரப் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

அரசியல்

இந்திரா காந்தி இந்த தீவிரமான தெரிவுகளை நிராகரித்துவிட்டு, ராஜதந்திர ரீதியிலான நடவடிக்கைகளுக்கே முக்கியத்துவம் அளித்தார். ராஜதந்திர ரீதியில் அரசியல் நிர்ப்பந்தத்தைக் கொடுத்து பிரச்சினைக்குத் தீர்வுகான முயற்சித்தார்.

இதனை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டது திரு ஜி. பார்த்தசாரதியின் மத்தியஸ்த முயற்சியின் காரணமாக 'கி' இணைப்பு உருவானது

பின்னர் பதவி ஏற்ற திரு ராஜீவ் காந்தி இரண்டு முக்கிய அடிப்படைகளில் இந்திய வெளியுறவுக் கொள்கையை மாற்றி அமைக்க முயற்சித்தார்

ஒன்று: உள்நாட்டுப் பிரச்சினைகளுக்குப் புரிந்துணர்வு அடிப்படையில் இணக்கம் காணுவது

இரண்டு: உள்நாட்டுப் பிரச்சினைகளினால் பின்விப்பிணைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், இலங்கை ஆகிய அயல் நாடுகளுடன் சிநேகிதத்தையும் கூட்டுறவையும் வளர்ப்பது.

இப்படியான அணுகுமுறையினால் இலங்கைப் பிரச்சினையில் வெற்றி காணலாம் என்ற வாய்ப்பு பிரகாசமானதாக பிரதமர் காந்திக்கு தெரிந்தது

இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன புதுடில்லி ராஜதந்திரம் இலங்கைப் பிரச்சினையில் தோல்வி கண்டு விட்டது

ரஷ்யத் தலைவர் கோர்பச்சேவின் இந்திய விஜயம், சோவியத்—இந்திய பாதுகாப்பு உடன்படிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியது இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக அது அமைந்தது.

தனது வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்ட ஏமாற்றம், தோல்வி ஆகியன காரணமாக அன்னையின் வெளிநாட்டு பாதுகாப்புக் கொள்கையையே தாமும் ஏற்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு பிரதமர் காந்தி ஆளாகிவிட்டார்.

நட்வர்சிங், சிதம்பரம் ஆகியோரின் கொழும்பு விஜயங்களுக்கு முன்னர் தான் கோர்பச்சேவ் இந்தியா சென்றார்

இனி அமைச்சர்களின் இரண்டாவது கொழும்பு விஜயம் இந்திய ராஜதந்திரத்துக்கு கிடைத்த பெரும் தாக்கமாக அமைந்தது *

மேர்வின் டீ - சில்வா

ராஜீவ் கடிதத்திற்கு பதில் என்ன?

அமைச்சர்கள் கருத்து வேறுபாடாம்

கொழும்பு, பெப் 14

இந்தியப் பிரதமரின் கடிதத்திற்கு எப்படியான பதில் அனுப்புவது?

இது குறித்து இலங்கை அமைச்சர்கள் மத்தியில் தீவிர கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பிரதமர் காந்தியின் கடிதம் கடந்த புதன் கிழமை நடந்த இலங்கை அமைச்சரவையில் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்ட போது இக்கருத்து வேறுபாடுகள் வெளிப்பட்டன என்று கொழும்பு அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் காந்தியின் கடிதத்திற்கு கடுமையான தொனியில் பதில் அனுப்பவேண்டும் என்று சில அமைச்சர்கள் வாதிட்டனராம்.

மிதவாதப் போக்குக் கொண்ட அமைச்சர்கள் சிலர் சுமுகமான முறையில் பதிலனுப்ப வேண்டும் என்றும் கூறினராம்.

எப்படியான பதிலாக இருப்பினும் சில தினங்களுக்கு இராணுவ நடவடிக்கைகள் தொடரலாம் என்பது கொழும்பு வட்டாரங்களின் கருத்தாகும். (இ-எ)

மத்தியஸ் - -

(1ஆம் பக்க தொடர்ச்சி)

தாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் காந்தி, திரு. ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பிய கடிதத்தில் இந்திய அரசின் நிபந்தனைகளை ஏற்று பேச்சுக்கள் நடத்த இலங்கை முன்வர வேண்டும்; இல்லாவிடில் இனப் பிரச்சினைக்கு மத்தியஸ்தம் செய்யும் பணியில் இருந்து இந்தியா விலகி விடும் -- என்று எச்சரித்திருந்தார் என்பது தெரிந்ததே. (அ-எ)

நேர்முகப்--

(1ம் பக்கத்தொடர்ச்சி)

சேவைகள் தடைப்பட்டன

அதனால் தான் விண்ணப்பித்த மாணவர்கள் கொழும்பு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நேர்முகப் பரீட்சையை உயர்கல்வி அமைச்சின் வெளிநாட்டு ஏஜன்சிகள் பிரிவு இன்று சனி பிற்கல் நடத்துகின்றது

(இ-ர)

வைஎம்சிஏ பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 14

நவாலி கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தின் (வை. எம். சி ஏ) 97 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 3 30 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறும். (ஒ)

ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 14

நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிறு பிற்பகல் நடைபெறவிருந்த கம்பன் தமிழ்க்கோட்டக் கட்டட நிதிக்கான கலை விழா மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-எ)

ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலைக்கான உதயன் - சஞ்சீவி உதவி நிதி

உதயன் – சஞ்சீவி ஆரம்பித்த ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலைக்கான உதவி நிதிக்கு வாசகர்களும் அபிமானிகளும் தாராளமாக நன்கொடை வழங்கி வருகின்றார்கள் பலர் நேரில் வந்து தமது அன்பளிப்பைச் செலுத்துவதைக் காண மகிழ்ச்சியாக இருக்கிறது.

மேற்படி நிதிக்கு நன்கொடை வழங்கியவர்களின் முதலாவது, இரண்டாவது தொகுதிகள் பட்டியலைக் கீழே காணலாம்.

இல.	பெயர், முகவரி	ரூபா சதம்
01	திரு வி. கே. ஏரம்பமூர்த்தி மக்கள் வங்கி, வன்வெட்டித்துறை.	1,000-00
02,	திரு வி. இராசா. பிரதான புகையிரத நிலைய அதிபர், யாழ்ப்பாணம்.	111-11
03,	திரு க இ தினஸ்வரன். சந்தை ஒழுங்கை, ஆவரங்கால்.	51-00
04	திருமதி வீ. யோசப், கரம்பன், ஊர்காவற்றுறை.	2,000-00
05	திரு க பாலேந்திரம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.	300-00
06	திரு. அ. சி. நடராசா, அராலி மேற்கு. வட்டுக்கோட்டை.	150-00
07,	திரு V. S மருதலிங்கம், கனகசபை வீதி, மானிப்பாய்.	100-00
08	திரு ச. சரவணபவன், ஷ்ரு நிதி நிறுவனம், யாழ்ப்பாணம்.	1,000-00
09	திரு P. மயில்வாகனம், சிறுப்பிட்டி தெற்கு. நீர்வேலி.	500-00
10.	திரு வ, கனகசபை. விக்ரியம் ஹாவே ஞாபகார்த்த வைத்தியசாலை, சுன்டிக்குளி. யாழ்ப்பாணம்.	1,100-00
11,	ஷ்ரு – உமா எக்ஸ்போட் நிறுவனப் பணியாளர்கள்.	1,085-00
12.	திருமதி இ. இரத்தினம், சிவன் வீதி, உரும்பராய்.	150-00
13	திரு. T. விஸ்வப்பா, 39, கஸ்தூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.	1 000-00
14	ஓர் ஆசிரியர், 243, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.	25-00
15.	டாக்டர் எஸ் நாகநாதர், பிணிதீர் மனை, சங்கானை.	1,000-00
16	செல்வி வா. அருணகிரிநாதன், 180 A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்,	1,000-00
17	எம் ரி. சோமசுந்தரம்&சன்ஸ், 199, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.	1,000-00
18	திரு எஸ் பாஸ்கரன், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்	250-00
19	சீமாட்டி, யாழ்ப்பாணம்.	1,000-00
20	திரு. சி. பாலசுப்பிரமணியம், மாவிட்டபுரம் மேற்கு, தெல்லிப்பழை.	50 00
21.	ஷ்ரு-உமா எக்ஸ்போட் நிறுவனம், யாழ்ப்பாணம்.	5,000-00
	மொத்தம்:	17,972-11

விளையாட்டரங்கு

சென் ஜோன்ஸ் இன்னிங்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 14

சென் ஜோன்ஸ் அணி தெல்லிப்பளை மகாஜன அணியை ஒரு இன்னிங்ஸ் 64 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது

கல்லூரிகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டிகளின் ஒருகட்டமாக இம் மோதல் நேற்று இடம் பெற்றது

சென் ஜோன்ஸ் அணி முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 244 ஓட்டங்கள் எடுத்தது

நேசகுமார், சஞ்சீவன் ஆகியோர் முறையே 100, 28 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்

புவனேசரட்ணம், ராஜ்குமார் ஆகியோர் முறையே 30, 46 ஓட்டங்கள் எடுத்தனர்

மகாஜன பந்து வீச்சாளர் மதிவதனன் 86 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்

மகாஜன அணி முதலாவது இன்னிங்ஸில் 101 ஓட்டங்களை எடுத்தது. சபேசன், பத்மஜேந்திர முறையே 51, 25 ஓட்டங்களை எடுத்தனர்.

சென் ஜோன்ஸ் பந்து வீச்சாளர்களான சஞ்சீவனும் அகிலனும் முறையே 15 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

மகாஜன அணி இரண்டாவது இன்னிங்ஸில் எக்ஸ்ரா விக்கெட்டுகளையும் இழந்து 79 ஓட்டங்களை எடுத்தது.

ஞானகணேஸ் 27 ஓட்டங்களை எடுத்து இருந்தார்.

13 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை சஞ்சீவனும் 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை நேசகுமாரும் வீழ்த்தினர்

இன்று இறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப் 14

ஷ்ரு யுனிக்கோ நிதி நிறுவனத்தின் அனுசரணையுடன் வை. எம் சி ஏ நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை மாலை மின்னொளியில் சென் ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெறும்.

ஆண்

கிறீன் பீலட்ஸ் எதிர் சென் ஜோன்ஸ், நேரம்: மாலை 5 மணி.

பெண்

பமிலியன்ஸ் அணி எதிர் யாழ் வளாகம் அணி நேரம்: மாலை 6-15

(இ-ர)

வின்ஸர் கலையரங்கில் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப் 14

மக்கள் வங்கி ஊழியர்கள், அடகு வைத்தோர் சங்கம், கூட்டுறவு ஊழியர்கள், ஓய்வூதியர்கள் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டம் ஒன்று இன்று காலை பத்து மணி அளவில் வின்ஸர் கலையரங்கில் நடைபெறும். (இ-10)

யாழ் - -

(1ஆம் பக்க தொடர்ச்சி)

பரந்தன் நவஜீவனத்திலும் தங்கி உள்ளனர்.

சிலர் டிராக்டர் மூலமாகவும், நடந்தும் காட்டுப்பாதைகள் ஊடாக இயக்கச்சி, பளை ஆகிய இடங்களை அடைந்து அங்கிருந்து பஸ்கள் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

டிராக்டரில் பிரயாணம் செய்பவர்களுக்கு ஒருவரிடம் 50 ரூபா அறவிடப்படுகிறது

இன்று இளிநொச்சியில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதும் அனைத்து வாகனங்களும் யாழ்ப்பாணம் வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது (இ-10)

கைப்பற்ற---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஒப்படைக்கப்படும் என்பதையே சுட்டிக்காட்டுகின்றதென்று கொழும்பு அரசு வட்டாரங்களில் அர்த்தம் கற்பிக்கப்படுகின்றது

பிரதமர் காந்தியின் கடிதத்துடன் இந்தியத் தூதர் திரு டிக்ஸிற் கடந்த 6ஆம் திகதி கொழும்பு திரும்பினார்.

ஆனால் கடிதத்தைக் கையளிக்க 3 தினங்கள் அவர் காத்திருக்க வேண்டியதாயிற்று

கடந்த திங்கட்கிழமை தான் திரு டிக்ஸிற்றால் கடிதம் கையளிக்கப்பட்டது

நாடகமும்--

(1 பக்கத்தொடர்ச்சி)

காத்தவராயன் நாடக அரங்கேற்றமும் இன்று நடைபெறுகின்றன அதனைப்பாராட்டுகின்றோம்

அதேபோல எமது மண்ணில் பிரதான கலையாகஇருந்த நாட்டுக் கூத்துக்கும் புத்துயிர் அளிக்க வேண்டும் பழைய நாட்டுக்கூத்துப் பிரதிகளைப் பதிப்பிக்கவும், நாட்டுக் கூத்துக் கலையை இயல்புகுலையாமல் செய்யவேண்டும் அது காலத்துக்கு முந்திய கலை என்ற பழக்கத்தை மாற்றி அமைக்க முயற்சி செய்யவேண்டும்

கதையில் பேச்சு. . .

(2ஆம் பக்க தொடர்ச்சி)

பவர், தன் எண்ணத்தில் எழுந்தவையை எழுது கோலால் உருவகிக் கொடுப்பவன். தன் உள்ளத்தில் உதித்தவற்றை உருவமாக அமைப்பவன்— இவனே எழுத்தாளன் என எண்ணினேன். அதற்கு திரு வைத்திலிங்கம் தக்க சான்று என்றும் எண்ணினேன்.

ஆனால் என் எண்ணத்தில் ஐயத்தை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் "நேர்மையற்ற எழுத்தாளரும்" உளர் என்ற ஐயப்பாட்டினை எழச் செய்துவிட்டார். செங்கை ஆழியான்! இதற்கு விடை கிட்டுமா?

'சஞ்சீவி' செய்த அருப்பணிகளில் இப்புத்தக வெளியீடு முதன்மை பெறுகிறது. "விமர்சிக்க வேண்டியவர்கள் விமர்சிக்கட்டும்" என்று விட்டுவிட்ட திரு. கானமயில்நாதனின் அலையடிக்கும், பத்திரிகை நிகழ்ச்சி.

தன்னைப் பீடித்தை அலங்கரித்த திரு. திருச்சிற்றம்பலம், கொக்குவில் என்றும் "பிரச்சினைக்குரிய" ஊராக இருந்துவந்தது என்று கூறி, இன்றைய பிரச்சினைக்கும், அன்றைய பிரதமரின் (சேர். ஜோன்) வெகுளித்தனமான பேச்சுதான் காரணமென்று எடுத்துக்கூறி கொக்குவிலின் முக்கியத்துவத்தை முன்வைத்த விமர்சனத் தொடங்கி வைத்தார்.

இறுதியாக, அநேக ஆண்டுகளுக்கு முன் "ஆக்கா" என்னும் சிறு கதையை எழுதி கொக்குவில் குச்சொழுங்கைகளின் புழுதி வாசனையையும், கிடுகு வேலிகளின் பின் தெரிந்தமகளாவண்ணங்களையும் இதே பேச்சுத்தமிழில் சித்தரித்த திரு. மத்துலிங்கத்தையும் நினைவுகூரச் செய்துள்ளது இச் சிறைப் பறவைகள் என்று [illegible]

நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது இலங்கை வங்கியின் 12 ஆம் திகதி மாற்று விகிதமாகும்.)

வெளிநாட்டு நாணயம்	இலங்கையில் (ரூபா சதத்தில்)
ஸ்ரேலிங் பவுன்	43. 16
மார்க்	28. 46
இந்திய ரூபா	8. 17
ஜேர்மன் மார்க்	15. 62
கனடா டாலர்	21. 06
பிரான் (பிரெஞ்சு)	4. 68

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்லிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் அதிபரினதாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 14 - 02 - 1987 தொலைபேசி இல. 24805 24078